விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalal.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஐப்பசி 23 செவ்வாய்க்கிழமை (08.11.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 325

## தொடர்கிறது கைது வேட்டை;

## ரி.ஐ.டியினரால் நேற்றும் இளைஞர் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் (ரி.ஐ.டி) கைது நடவடிக்கைகள் யாழில் தொடர்சியாக இடம்பெற்றுவரும் நிலையில் நேற்றைய தினமும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளாார்.

பயங்கரவாத தடுப்பு பிரிவினர் என தம்மை அடையாளப்படுத்தியவர்களால் கடந்த 3 தினங்களுக்குள் 7 இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக கொழும்புக்கு கொண்டு 23ஆம் பக்கம் பார்க்க....

## முழு உலகும் எதிர்பார்த்துள்ள அமெ. ஜனாதிபதி தேர்தல் இன்று

## வெல்லப் போவது யார்?




12 ஆம் பக்கம் பார்க்க....

## சமஷ்டியுடனான அரசியல் யாப்பு

(கொழும்பு)

சமஷ்டியுடன் கூடிய அரசியல்யாப்பு அமைய வேண்டுமென கனடாவின் உயர் அதிகாரிகளிடம் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார். 23ஆம் பக்கம் பார்க்க....

## கேள்விகளால் திணறி மயங்கிய வீரவன்ச!

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நேற்று பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவிற்கு அழைக் 23ஆம் பக்கம் பார்க்க....

## பள்ளிவாசல் மீது பெற்றோல் குண்டு வீச்சு

(நிகவெரட்டிய)

குருநாகல் மாவட்டத்தின் நிகவெரட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள ஜும்ஆ பள்ளிவாசல் ஒன்றின் மீது இனந்தெரியாத நபர்களால் நேற்று முன்தினமிரவு ஐந்து பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டுள்ளதாக பள்ளிவாசல் நிர்வாகம் ஊடகங்களுக்கு தெரிவித்தது.

வழமையாக இரவு 10 மணியளவில் பள்ளி 24ஆம் பக்கம் பார்க்க....

# நல்லிணக்கப் போரில் வெற்றி கிட்டவில்லை!

## யாழ்.பல்கலையில் நேற்று அஞ்சலி



06ஆம் பக்கம் பார்க்க....

க.பொ.த (சா/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
விஞ்ஞானம் - II

உள்ளே...

## சமாதானமும் அப்படியே - சந்திரிகா

(கொழும்பு)



நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு முதலில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் கட்டியெழுப்பபப்பட வேண்டுமென தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, கொடூர யுத்தத்தை வெற்றிகொண்டுள்ள போதும் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான யுத்தத்தில் நாம் இன்னமும் வெற்றியடையவில்லை எனத் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## சுமந்திரனின் உயிருக்கு அச்சுறுத்தல்

## தற்கொலை அங்கியுடன் தொடர்புடைய பிரதான நபரை எனக்குத் தெரியும்!

## அதிர்ச்சி தகவலை வெளியிட்டார் சயந்தன்

(யாழப்பாணம்)

சாவகச்சேரி மறவன்புலவு பகுதியில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கியுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியை எனக்கு தெரியும்.

ஆனால் அவர் இன்னும் கைது செயயப்படவில்லை என தெரவித்த வட மாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான எஸ்.சயந்தன், நாடாளுமன்ற 23ஆம் பக்கம் பார்க்க....

துள்ள ஜும்ஆ பள்ளிவாசல் ஒன்றின் மீது இனந்தெரியாத நபர்களால் நேற்று முன்தினமிரவு ஐந்து பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டுள்ளதாக பள்ளிவாசல் நிர்வாகம் ஊடகங்களுக்கு தெரிவித்தது.

வழமையாக இரவு 10 மணியளவில் பள்ளி 24ஆம் பக்கம் பார்க்க....

# வெற்றி கிட்டவில்லை!

## நேற்று அஞ்சலி



06ஆம் பக்கம் பார்க்க....

க.பொ.த (சா/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
விஞ்ஞானம் - II



உள்ளே...

## சமாதானமும் அப்படியே - சந்திரிகா

(கொழும்பு)



நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு முதலில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட வேண்டுமென தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, கொடூர யுத்தத்தை வெற்றிகொண்டுள்ள போதும் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான யுத்தத்தில் நாம் இன்னமும் வெற்றியடையவில்லை எனத் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

### சுமந்திரனின் உயிருக்கு அச்சுறுத்தல்

## தற்கொலை அங்கியுடன் தொடர்புடைய பிரதான நபரை எனக்குத் தெரியும்!

### அதிர்ச்சி தகவலை வெளியிட்டார் சயந்தன்

(யாழப்பாணம்)

சாவகச்சேரி மறவன்புலவு பகுதியில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கியுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியை எனக்கு தெரியும்.

ஆனால் அவர் இன்னும் கைது செயப்படவில்லை என தெரிவித்த வட மாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான எஸ்.சயந்தன், நாடாளுமன்ற 23ஆம் பக்கம் பார்க்க....

## "ஹோலி" பண்டிகை தகவல் பொய்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் "ஹோலி" பண்டிகை நடைபெறுவதற்கும் எமக்கும் எந்த தொடர்பும் இல்லை எனவும் எமது ஏற்பாட்டில் "ஹோலி" பண்டிகை நடைபெறவுள்ளதான தகவல்களில் உண்மையில்லை என யாழ்.இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் கலை நிகழ்வுகளை ஒழுங்கமைக்கும் அமைப்பு ஒன்றின் பெய 23ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச நீதிபதிகளற்ற விசாரணை தமிழர்களுக்கு நீதியை தராது - விக்கி



(யாழ்ப்பாணம்)

இலங்கைமீதான போர்க்குற்ற விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகள், வழக்கறிஞர்கள் உள்வாங்கப்படாவிட்டால் தமிழ் மக்களுக்கு நீதி என்பது கிடைக்கப் போவதில்லை என பிரித்தானியாவின் வெளியுறவு மற்றும் பொது நலவாய விவகாரங்களுக்கான அமைசசர் பரோனஸ் 23ஆம் பக்கம் பார்க்க....

## 118 கிலோ கஞ்சா மீட்பு



08ஆம் பக்கம் பார்க்க....

## மக்களின் எழுச்சியை தடுக்கவே கைது நடவடிக்கை முன்னெடுப்பு

### ஆபத்தான நிலைமை என்கிறார் கஜேந்திரகுமார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை மறக்கடிக்கும் நோக்கிலேயே பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் (ரி.ஐ.டி) கைதுகள் இடம்பெறுவதாக தெரி வித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மக்கள் எழுச்சியை தடுப்பதற்காகவே தமது கட்சி செயற்பாட்டாளர் ஒருவரை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் மீது ஆவா குழு உறுப்பினர் என்ற குற்றச்சாட்டு முன வைப்பதற்கு அரசியல் ரீதியான பழி வாங்கலே 24ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவத்தினர் மீது கண்ணீர்ப் புகை

(கொழும்பு)

தங்களுக்கு ஓய்வூதியம் வழங்குமாறு வலியுறுத்தி கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்திய அங்கவீனம் அடைந்த இராணுவத்தினர் மீது பொலிஸார் நேற்று கண்ணீர்ப் புகை தாக்குதல் மேற்கொண்டனர்.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பாக சுமார் எட்டு நாட்களாக சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அங்கவீனமுற்ற இரா 24ஆம் பக்கம் பார்க்க....

### சிறுப்பிட்டி இளைஞர்கள் கொலை

## 14 இராணுவத்தினருக்கும் விளக்கமறியல் மீள நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறுப்பிட்டி பகுதியில் இரு இளைஞர்கள் கடத்தி கொலை செய்யப்பட்ட வழக்கில் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து குற்றச்சாட்டு பத்திரத்தை பெற்று மன்றில் சமர்ப்பிக்கும் படியும் கொலை குற்றம் சாட்டப்பட்ட 14 இராணுவத்தினரையும் எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதிவரை மீளவும் விளக்கமறியலில் வைக்குமாறும் யாழ் நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்தரன் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

மட்டுவில் வடக்கை சேர்ந்த செல்வரத்தினம் 23ஆம் பக்கம் பார்க்க....

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் பொன்னம்பலம் சிவராசா



எமது கல்லூரியின் ஆசிரிய சகோதரத்துவ உறுப்பினர் திருமதி **வி.சிவனுஜா** அவர்களின் அன்புத் தந்தை **அமரர் பொன்னம்பலம் சிவராசா** கனடாவில் இறைபதமடைந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்! சாந்தி! சாந்தி! சாந்தி!

(சி-6340)

**ஆசிரிய சகோதரத்துவம்**
**யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

---

**தேவை**

இனிப்புத் தொழிற்சாலைக்கு பெண் வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:-
021 222 1504

(6598)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

---

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி நிர்மலா செல்வச்சந்திரன்



07.11.2016 அன்று அமரத்துவம் அடைந்த திருமதி நிர்மலா செல்வச்சந்திரன் அவர்களுக்கு எமது **இதய அஞ்சலி**

அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

(6551)

சுகர்னி மருத்துவ நிலையம்.

---

## மாவட்ட கூட்டுறவு சபையால் நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாப சீட்டெடுப்பு முடிவுகள்

15.10.2016ஆம் திகதி 94ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா முல்லைத்தீவு மாவட்டத்தில் நடாத்தப்பட்ட போது அன்று அதிர்ஷ்டலாப சீட்டெடுப்பு நடைபெற்றது. அதன்படி வெற்றி பெற்ற இலக்கங்கள் வருமாறு,

01ஆம் பரிசு சீட்டு இல. 17006
02ஆம் பரிசு சீட்டு இல. 38840
03ஆம் பரிசு சீட்டு இல. 41689

**ஆறுதல் பரிசில்கள்**

| | |
|---|---|
| 01.சீட்டு இலக்கம் 43991 | 06.சீட்டு இலக்கம் 45476 |
| 02.சீட்டு இலக்கம் 37385 | 07.சீட்டு இலக்கம் 44815 |
| 03.சீட்டு இலக்கம் 01864 | 08.சீட்டு இலக்கம் 33033 |
| 04.சீட்டு இலக்கம் 13851 | 09.சீட்டு இலக்கம் 44474 |
| 05.சீட்டு இலக்கம் 07560 | 10.சீட்டு இலக்கம் 33479 |

(சி-6344)

**தலைவர்,**
முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச் சபை. (வ-து)

---

## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2015/ 2016 (வெளிவாரி)

Bachelor of Business Management (Online)
Degree Programme-2015/2016 (External)

### புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை-2015

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினூடாக நடத்தப்படும் தமிழ் மொழி மூலமான மூன்று வருட கால இணையவழி வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

- க.பொ.த. (உ/த) பரீட்சை - 2014 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக் கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்
  அல்லது
- பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

**வியாபார முகாமைத்துவமாணி முதலாம் வருட தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருதல்:**

- பல்கலைக்கழக மூதவையினால் அங்கீகரிக்கப்பட்ட, 1ஆம் வருடத் தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருவதற்கான தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள், வியாபார முகாமைத்துவமாணி இரண்டாம் வருட கற்கைநெறிக்கு, உரிய தகைமைகளைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியும்.

**முக்கிய குறிப்பு:**-இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பொன்றுக்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

**மாணவர் தெரிவு:**

விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப்பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவு செய்யப்படுவர். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல்:**

01. விண்ணப்பப்படிவத்தினை நேரடியாக பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில், விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 1000 ஐ செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து யாழ்.பல கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் மற்றும் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் இருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட, ரூபா 1000 க்கான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 40.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 25X20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், உதவிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும்.
02. விண்ணப்பப்படிவத்தினை www.jfn.ac.lk/codl எனும் இணைய முகவரியிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பங்கள் யாவும் உதவிப்பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு"** என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி:30.11.2016. (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னா கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)**

மேலதிக விபரங்களுக்கு: 021 222 3612, 021 222 3610, 021 222 1106 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்**
**04.11.2016**

(சி-6342)

---

# மரண அறிவித்தல்

## திருமதி செல்வச்சந்திரன் நிர்மலா



பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் இல.21, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்வச் சந்திரன் நிர்மலா நேற்று (07.11.2016) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தவலிங்கம்-ராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-சிவயோகம் தம்பதிகளின் மருமகளும், செல்வச்சந்திரனின் (MLT, Jaffna Teaching Hospital) அன்பு மனைவியும், கௌசிகன், யதுசிகன் (மாணவர்கள்-யா/பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரவீந்திரா, காலஞ்சென்ற இரவிச் சந்திரன் மற்றும் மணிமாலா, தவரவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (08.11.2016) காலை 8.30 மணியளவில் இல.21, ஆசீர்வாதம் ஒழுங்கையில் உள்ள அவரது வீட்டில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.21, ஆசீர்வாதம் ஒழுங்கை,**
**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**0771134172, 0770150592**

(6552)

தகவல்:செ.செல்வச்சந்திரன்
(MLT,
Jaffna Teaching Hospital)

## புதிய பயங்கரவாத தடைச் சட்டம் மிகவும் ஆபத்தானது

# சித்திரவதைகள், கொடூரங்கள் இலங்கையில் மேலும் அதிகரிக்கும்

## சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரிக்கை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாக இலங்கை அரசாங்கம் புதிதாக அறிமுகப்படுத்தவுள்ள சட்டமூலத்தினால் இலங்கையில் படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள் உட்பட கொடூரங்கள் மேலும் அதிகரிக்கும் என அமெரிக்காவின் நியூயோர்க் நகரைத் தளமாகக் கொண்டு செயற்படும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரித்துள்ளது. (18 ஆம் பக்கம் பார்க்க...)

### 4 கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகள்

## கொள்ளையுடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர் கைது

கொழும்பிலுள்ள நகைக் கடை ஒன்றிலிருந்து 4 கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையிட வழிநடத்திய குற்றச்சாட்டில் உப பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கலென்பிந்துனுவெவ, குருலுனிகவெல பிரதேசத்தில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார். பேலியகொட குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவு மேற்கொண்ட விசாரணைகளின் போது இவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் தனது உறவினர் ஒருவரின் வீட்டில் மறைந்திருந்த வேளையில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கொள்ளைச் சம்பவம் கடந்த செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி நடைபெற்றுள்ளது. கைது செய்யப்பட்ட உப பொலிஸ் அத்தியட்சகரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7-10)

## இந்திய, இலங்கை ஜனாதிபதிகள் டில்லியில் சந்தித்து ஆலோசனை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புகையிலை தடுப்பு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டார். இதன்போது இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.



உலக சுகாதார அமைப்பு சார்பில் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் சர்வதேச புகையிலைக்கு எதிரான மாநாடு இந்தியாவில் நேற்று திங்கட்கிழமை முதல் 12ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது. இந்த மாநாட்டில் 180 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் தொடக்க விழாவில் சிறப்பு பேச்சாளராக கலந்து கொள்ள இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைக்கப்பட்டுள்ளார். புகையிலை தடுப்பு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரி நேற்று முன்தினம் மாலை டில்லி விரைந்தார்.

இரண்டு நாள் பயணமாக இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரி நேற்று முன்தினம் மாலை இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை சந்தித்தார். அப்போது இருநாட்டு நல்லுறவு குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர்.

மகிந்த அரசாங்கத்தில் சுகாதாரத் துறை அமைச்சராக பதவி வகித்த போது மைத்திரி புகையிலை எதிர்ப்புக்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்தார். அதன் காரணமாக ஜனாதிபதியை சிறப்பு பேச்சாளராக இந்தியா அழைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி நபரொருவர் படுகொலை!

(கொழும்பு)

குருநாகல் - தம்பதெனிய - பன்னல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபரொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரு நபர்களிடையே ஏற்பட்ட தகராறு காரணமாகவே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொலை செய்யப்பட்டவர் 44 வயதான பன்னல - போபிட்டிய பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

இதேவேளை கொலைக் குற்றச்சாட்டில் கைதான நபரை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள அதேவேளை மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## சரத் வீரவன்சவின் விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

அரச வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் மூத்த சகோதரனான சரத் வீரவன்சவின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

வழக்கு நேற்று திங்கட்கிழமை கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே வழக்கை விசாரணை செய்த நீதவான், சரத் வீரவன்சவை எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

பொது உடைமைகள் சட்டத்தின் கீழ் அரச வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்தி அரசாங்கத்திற்கு 10.5 மில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் சரத் வீரவன்ச கடந்த செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி பொலிஸ் நிதிமோசடி பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அன்றைய தினம் பொலிஸ் நிதிமோசடி பிரிவினரால் கைது செய்யப்பட்ட அவர் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டு தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சரத்குமாரவுக்கு பிணை

(கொழும்பு)



முன்னாள் பிரதியமைச்சர் சரத்குமார குணரத்ன, நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தால் 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணை மற்றும் 5 இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.


2002ஆம் ஆண்டில் நீர்கொழும்பில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பேரணியில் கலந்து கொண்டிருந்த இருவர் காரில் மோதி பலியான சம்பவம் தொடர்பில் சரத்குமார குணரத்ன மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதையடுத்து, சரத்குமார குணரத்னவுக்கு எதிராக நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த மாதம் 24ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். இதையடுத்து, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவர், நேற்று நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ-7-10)

## ஞானசார தேரருக்கு அவரின் பாணியில் எதிர்ப்பு வெளியிடப்பட்டது- உலமாக் கட்சி

முஸ்லிம் தனியார் சட்டத்தில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என ஐரோப்பிய நாடுகளின் கட்டளையை ஏற்றுக் கொண்டமைக்காக நல்லாட்சி அரசை கண்டித்து ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத் ஆர்ப்பாட்டம் நடத்தியதை பாராட்டாமல், அதனை சில உலமாக்கள் கண்டித்திருப்பதானது கவலையளிக்கிறது என உலமாக் கட்சியின் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது பொதுபல சேனாவின் செயலாளர் ஞானசார தேரருக்கு எதிராக சொல்லப்பட்ட கருத்துக்கள், குளிக்கப் போய் சேறு பூசிய செயல் என சில உலமாக்கள் தெரிவித்துள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது.



தவ்ஹீத் ஜமாஅத்தின் ஆர்ப்பாட்டத்தில் பொதுவாக சிங்கள மக்களுக்கு எதிராகவோ அல்லது பௌத்த சமயத் தலைவர்களுக்கு எதிராகவோ மோசமான கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. மாறாக ஞானசாரருக்கு எதிராகவே கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அதுவும் அவரது பாணியிலேயே கருத்துக்கள் முன் வைக்கப்பட்டமை இஸ்லாத்தின் அறிவுரைக்குட்பட்டதாகும்.

அதாவது நீங்கள் எவ்வாறு தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டீர்களோ அவ்வாறே தாக்குங்கள் என அல்குர்ஆன் தெளிவாக சொல்கிறது. அதன் பிரகாரமே மார்க்க வரையறைக்கு உட்பட்டு, அவர் கண்டிக்கப்பட்டார்.

அத்துடன் ஞானசாரரை சிங்கள மக்கள், சமயத் தலைவராக பார்த்த போதிலும் அவர் ஒரு அரசியல் வாதி என்பதை தெரிந்து வைத்துள்ளார்கள். அதன்படி அவருக்கெதிரான வார்த்தைகள், பௌத்த சமய தலைவர்களுக்கு எதிரானதல்ல என்பதை நிச்சயம் சிங்கள மக்கள் புரிந்து கொள்வார்கள் என நம்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## உலகின் அதிவேக ஆடுகளத்தில் ரபாடா அசத்தல்

# ஆஸியை தகர்த்தெறிந்தது தென்னாபிரிக்கா



பெர்த் டெஸ்டில் அசத்திய தென்னாபிரிக்க அணி, 177 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 'வேகத்தில்' மிரட்டிய ரபாடா 92 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். சொந்த மண், சொந்த இரசிகர்களுக்கு முன்னாள் அவுஸ்திரேலிய வீரர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் டெஸ்ட் போட்டி பெர்த்தில் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமானது. முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்கா 242, அவுஸ்திரேலியா 244 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 540 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

539 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தனது 2ஆவது இன்னிங்ஸை தொடர்ந்த அவுஸ்திரேலியா அணி, நேற்று முன்தினம் 4ஆம் நாள் ஆட்ட நேர நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று, ஐந்தாவதும் இறுதியுமான நாளாட்டம் நடந்தது. தென்னாபிரிக்காவின் ரபாடா மீண்டும் 'வேகத்தில்' மிரட்டினார். இவரது பந்துவீச்சில் மிட்சல் மார்ஷ் (26), மிட்சல் ஸ்ரார்க் (13) ஆட்டமிழந்தனர். பவுமா 'நோபோல்' வீசியதால் எல்.பி.டபிள்யு., வாய்ப்பில் இருந்து கண்டம் தப்பிய கவாஜா (97), டுமினியின் 'சுழலில்' சிக்கி, சதமடிக்கும் வாய்ப்பை இழந்தார்.

பிலாண்டர் பந்தில் பீட்டர் சிடில் (13) வெளியேறினார். அதன்பின் இணைந்த பீட்டர் நெவில், ஹேசில்வுட் ஜோடி போராடியது. நெவில் அரைச் சதமடித்தார். ஒன்பதாவது விக்கெட்டுக்கு 65 ஓட்டங்கள் சேர்த்த போது, பவுமா பந்தில் ஹேசில்வுட் (29) ஆட்டமிழந்தார்.

இரண்டாவது இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணி 361 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 177 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. களத்தில் நெவில் (60) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

தென்னாபிரிக்கா சார்பில் ரபாடா 92 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

மொத்தமாக இப்போட்டியில் 7 விக்கெட்டுக்களைக் (2+5) கைப்பற்றிய ரபாடா ஆட்டநாயகன் விருதை வென்றார். இந்த வெற்றியின்மூலம் தென்னாபிரிக்க அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இரண்டாவது டெஸ்ட் வரும் எதிர்வரும் 12ஆம் திகதி ஹோபர்ட் நகரில் ஆரம்பமாகிறது.

### முற்றுப் புள்ளி

அவுஸ்திரேலிய அணி, பெர்த்தில் கடைசியாக விளையாடிய 18 டெஸ்ட் போட்டிகளில் (14 வெற்றி, 4 சமனிலை) ஒன்றில் கூட தோற்கவில்லை. இதற்கு தென்னாபிரிக்க அணி முற்றுப்புள்ளி வைத்தது.

கடைசியாக அவுஸ்திரேலிய அணி, 2012இல் பெர்த்தில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்டில் 309 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்றது. அதன்பின் இலங்கை (3 வெற்றி), இங்கிலாந்து (5), இந்தியா (2 வெற்றி, 2 சமனிலை), நியூசிலாந்து (2 வெற்றி, ஒரு சமனிலை), மேற்கிந்தியத் தீவுகள் (2 வெற்றி, ஒரு சமனிலை) அணிகளுக்கு எதிராக தோல்விகளைச் சந்திக்கவில்லை.

### 8

பெர்த் டெஸ்டில் ஏமாற்றிய அவுஸ்திரேலிய அணி, சொந்த மண்ணில் 8 ஆண்டுகளுக்கு பின் டெஸ்ட் தொடரை தோல்வியுடன் ஆரம்பித்துள்ளது. கடைசியாக 2008 இல் பெர்த்தில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்டில் 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தோற்றது.

### ராசியான மைதானம்

பெர்த் மைதானம் தென்னாபிரிக்காவுக்கு ராசியானதாக உள்ளது. முன்னதாக இங்கு 2008, 2012இல் விளையாடிய டெஸ்ட் போட்டியிலும் வெற்றி பெற்றது. இதேபோல லோர்ட்ஸ் (1994, 1998, 2003), போர்ட் ஒப் ஸ்பெயின் (2001, 2005, 2010) மைதானங்களிலும் தென்னாபிரிக்க அணி 'ஹட்ரிக்' வெற்றியை பதிவு செய்துள்ளது. சிம்பாப்வேயில் உள்ள ஹராரேயில் தொடர்ச்சியாக 4 வெற்றியை (1995, 1999, 2001, 2014) ருசித்தது தென்னாபிரிக்கா.

### 6

பெர்த் டெஸ்டின் 2ஆவது இன்னிங்ஸில் தென்னாபிரிக்காவின் ரபாடா 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன்மூலம் இவர், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் 2ஆவது இன்னிங்ஸில் 5 அல்லது அதற்கு மேல் விக்கெட் கைப்பற்றிய 6ஆவது தென்னாபிரிக்க பந்துவீச்சாளர் என்ற பெருமையைப் பெற்றார். (க)


## Raveens EMC, Karaveddy

### Grade 06 Admission Test - Result Sheet (2016-2017)

| Rank | Name | School | Mat | Eng | Total | Scholarship Marks |
|---|---|---|---|---|---|---|
| 01 | R. Thushopan | J/N.M.M.T.M.S | 72 | 77 | 149 | 185 |
| 02 | S. Sarvajan | J/M.V.V | 86 | 48 | 134 | 176 |
| 03 | N. Thakshana | J/N.M.M.T.M.S | 69 | 62 | 131 | 165 |
| 03 | S. Sutharjana | J/P.M.V | 64 | 67 | 131 | 163 |
| 05 | T. Sindhu | J./M.V.V | 75 | 48 | 123 | 166 |
| 06 | S. Kiruththika | J/T.N.M.M.T.M.S | 61 | 49 | 110 | 163 |
| 07 | K. Kamsini | J/M.V.V | 45 | 58 | 103 | 161 |
| 08 | A. Shirishan | J/N.M.M.T.M.S | 56 | 46 | 102 | 172 |
| 09 | S. Adshaya | J/T.K.V | 62 | 39 | 101 | 158 |
| 10 | R. Kopikan | J/T.N.M.M.T.M.S | 68 | 32 | 100 | 155 |
| 10 | G. Shayoon | J/T.S.M.V | 66 | 34 | 100 | 162 |
| 12 | A. Aaraby | J/N.M.M.T.M.S | 62 | 37 | 99 | 166 |
| 13 | N. Thusikaran | J/M.V.V | 71 | 25 | 96 | 163 |
| 14 | S. Sham | J/K.M.M.T.M.S | 51 | 44 | 95 | 163 |
| 14 | P. Karismy | J/N.M.M.T.M.S | 55 | 40 | 95 | 160 |
| 16 | S. Sugapriya | J/V.P.S | 60 | 33 | 93 | 161 |
| 17 | T. Santhosh | J/N.M.M.T.M.S | 63 | 26 | 89 | 156 |
| 18 | J. Abinash | J/P.M.V | 57 | 29 | 86 | 152 |
| 19 | M. Jagagith | J/N.M.M.T.M.S | 44 | 40 | 84 | 165 |
| 20 | T. Shathveekan | J/M.V.V | 65 | **18** | 83 | 159 |
| 21 | T. Pravena | J/M.V.V | 46 | 36 | 82 | 157 |
| 22 | S. Apilash | J/M.V.V | 34 | 27 | 61 | 153 |
| 23 | P. Sajeevan | J/T.M.V | 36 | **23** | 59 | 155 |

- ★ 29 Scholars sat for the admission test.
- ★ The above 23 Students in the list are selected.
- ★ The Parents of the above students are requested to participate to the meeting that will be held on 11.11.2016 Friday at 4.30 pm.
- ★ If you failed to attend to the meeting your admission will be rejected.
- ★ Parents of the non-selected students can meet the director on 17.11.2016 Thursday at 4.30 pm

**School Details:-**

J/M.V.V:-J/Manikkavasagar vidyalayam-Karaveddy
J/P.M.V:- J/Puttalai Maha Vidyalayam
J/T.N.M.M.T.M.S:-Thunnalai North M.M.T.M School
J/V.P.S.:-Vigneswara Primary School
J/T.M.V:- J/Thambashidi Maha Vidyalayam
J/N.M.M.T.M.S:- J/Nelliady M.M.T.M.School - Vathiry
J/T.K.V:-J/Thunnalai Kasinathar Vidyalayam
J/K.M.M.T.M.S:- J/Kaddaiveli M.M.T.M School
J/T.S.M.V:- Thumpalai Sivapirakasa Maha Vidyalayam

**Mr. P. Easwaranathan** B.Sc (Hons) Agr
**Director - Raveens EMC**

(C-6346)


## யாழில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள்

# அதிகளவில் இடம்பெறுகின்ற போதிலும் பெரிதளவு முறைப்பாடுகள் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகளவில் இடம் பெறுகின்ற போதிலும் கலாசாரம் மற்றும் மத நம்பிக்கை காரணமாக இந்த வன்முறை தொடர்பான முறைப்பாடுகள் பெரிதளவில் பொலிஸாரிடம் கிடைக்கப் பெறுவதில்லை என பிரித்தானியாவின் வெளியுறவு மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்கான அமைச்சர் ஜொய்ஸ் அன்லெய்யிடம் யாழ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இலங்கையை வந்தடைந்த பிரித்தானியாவின் வெளியுறவு மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்கான அமைச்சரும் பாலியல் வன்முறைகளுக்கு எதிரான விசேட பிரதிநிதியுமான ஜொய்ஸ் அன்லெய் தலைமையிலான குழுவினர் நேற்றைய தினம் யாழ் பண்ணை வீதியில் அமைந்துள்ள சிறுவர் மற்றும் பெண்கள் விவகார பொலிஸ் நிலையத்துக்கு விஜயம் செய்து அங்கு பொலிஸார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனமான வின் என்று கூறப்படுகின்ற தேவை நாடும் பெண்கள் அமைப்பின் பிரதிநிதியுடனும் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் இவ்வருடத்தில் கடந்த ஒக்ரோபர் மாதம் வரையிலான பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற பெண்களுக்கு எதிரான முறைபாடுகள் தொடர்பான தரவினை பட்டியலிட்டு காட்டினர். தொடர்ந்து வின் அமைப்பின் பதிவாகிய பெண்களுக்கு எதிரான பாலியல் வனமுறைகள் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பான பட்டியல் அமைச்சரிடம் காண்பிக்கப்பட்டது.


இதன்போது இரு பட்டியல்களும் ஒரே கால எல்லையை கொண்டிருந்தபோதும் பொலிஸாருக்கு கிடைக்கபெற்ற முறைப்பாட்டைவிட வின் அமைப்புக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடு அதிகமாக காணப்பட்டது இதற்கான காரணம் என்ன என அமைச்சர் வினவிய போதே மேற்படி விடயம் தெளிவுபடுத்தப்பட்டது. யாழ் மாவட்டத்தில் இடம் பெறும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகம் வின் அமைப்பில் பதிவாகியுள்ள போதும் நீதிமன்றம் சென்ற வழக்கு குறைவாக காணப்படுவதற்கு காரணம் என்ன?

இவ்வாறு பெண்களுக்கு எதிராக பாலியல் வன்முறைகள் இடம்பெறுவதற்கான காரணம் என்ன? சிறுவர் மற்றும் பெண்கள் விவகார பொலிஸ் நிலையம் தனியாக இயங்குவதற்கான காரணம் என்ன?, தமிழ் பெண் பொலிஸார் கடமையில் குறைவாக காணப்படுகின்றனர் கலாசாரம் நிறைந்த யாழ் சமூகத்தில் பெண்கள் பொலிஸில் இணைவதை சமூகம் விரும்புகிறதா? போன்ற கோள்விகளை பிரித்தானிய அமைச்சர் பொலிஸாரிடமும் வின் அமைப்பின் இணைப்பாளரிடமும் வினாவினார்.

இதற்கு வின் அமைப்பின் இணைப்பாளர் பதிலளிக்கையில், எமது நிறுவனத்தை நாடி அதிகம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன. அவ்வாறு வரும் முறைப்பாடுகள் சமூக கட்டுப்பாடு, கலாசாரம் காரணமாக நீதிமன்றம் செல்வதை விரும்புவதில்லை. இதனால் வழக்கு தாக்கல் செய்யபட்டு நீதிமன்றம் செல்வது குறைவாக காணப்படுகிறது. தற்போது யாழ் மாவட்டத்தில் அதிகரித்துள்ள மது மற்றும் போதைப்பொருள் பாவனைகள் கட்டுப்பாடற்ற இணையத்தள பாவனைகள், பாடசாலை பருவ நவீன வகை கையடக்கத் தொலைபேசி பாவனை பேன்றன பெண்கள் மீதான பாலியல் வன்முறைக்கு வழிகோளுகின்றது என வின் அமைப்பின் இணைப்பாளர் தெரிவித்தார்.

இதற்குபொலிஸார் பதிலளிக்கையில், யாழ் பிரதான பொலிஸ் நிலையத்தின் உடன் சிறுவர் மற்றும் பெண்கள் விவகார பொலிஸ் நிலை யத்தினை இணைத்து நடத்துவதால் பாதிக்கப்படும் பெண்கள் முறைபாடு செய்ய முன்வருவதில்லை காரணம் சமூக கட்டுப்பாடுகள் அதனால் தனியாக இந்த நிலையம் அமைக் கப்பட்டு பெண் பொலிஸார் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் யாழ்ப்பாண கலாசாரத்தை பொறுத்தவரை யில் பெண்கள் பொலிஸில் இணைந்து சேவை ஆற்றுவதை 90 வீதமானோர் விரும்புவதில்லை காரணம் சமூகத்தின் பார்வை வேறாக உள்ளது. என பொலிஸார் தெரிவித்தனர். (செ-4)

# முஸ்லிம் தனியார் சட்ட பரிந்துரைகள் நிறைவு



முஸ்லிம் தனியார் சட் டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பான பரிந்துரைகள் நிறைவடைந்துள்ளதாகவும், எதிர்வரும் 27ஆம் திகதி குறித்த பரிந்துரைகளுக்கு தனது தலைமையில் நிய மிக்கப்பட்டுள்ள குழு கைச் சாத்திடவுள்ளதாகவும் குழு வின் தலைவர் ஓய்வுபெற்ற முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் சலீம் மர்சூப் தெரி வித்தார்.

முஸ்லிம் தனியார் சட்டத் தில் மேற்கொள்ளப்பட வேண் டிய திருத்தங்கள் தொடர்பில் பரிந்துரைகளை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் மர்சூப் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

மேலும் குறித்த குழு நேற்று முன்தினம் கூடியதாகவும், புதிய திருத்தங்கள் ஷரீ ஆவு க்கு அமைவாக சமூகத்தின் நலன்கருதி பரிந்துரை செய் யப் பட்டுள்ளதாகவும் தெரி வித்த அவர், கூடிய விரை வில் குறித்த பரிந் துரைகள் நீதி அமைச்சர் விஜய தாஸ ராஜபக்ஷவுக்கு சமர்ப்பிக்கப் படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட் சிக்காலத்தில், 2009ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட வினால் குறித்த குழு நிய மிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மாணவர் பாராளுமன்ற முதல் அமர்வு இன்று

யாழ். மத்திய கல்லூரியின் மாணவர் பாராளுமன்ற முதலாம் நாள் அமர்வு இன்று செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணிக்கு றொமைன் குக் மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தி னராக உதவித் தேர்தல் ஆணை யாளர் த.அகிலன், சிறப்பு விருந்தி னராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



மலர்வு 29.05.1954

உதிர்வு 13.10.2016

**அமரர் விஸ்வலிங்கம் விநாயகமூர்த்தி-மூர்த்தி அண்ணா**

**(நிரு அரைக்கும் ஆலை உரிமையாளர், புளியங்கூடல் மகாமாரி இந்து இளைஞர் சங்க உபதலைவர்)**

கடந்த 13.10.2016 ஆம் திகதி அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் ***அமரர் விஸ்வலிங்கம் விநாயகமூர்த்தி*** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 10.11.2016ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 12.11.2016 ஆம் திகதி சனிக்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெற்று நினைவஞ்சலியும் மதிய போசன நிகழ்வும் புளியங்கூடல் மகாமாரி இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறும். அந்நிகழ்வில் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மா சாந்திபெற வேண்டுவதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னார் காலஞ்சென்ற செய்தி அறிந்து பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், மலர்வளையங்கள், இரங்கல் செய்தி தெரிவித்தவர்கள் மற்றும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்கள், நேரில் வந்து ஆறுதல் கூறி இறுதிக் கிரியையிலும் ஊர்வலத்திலும் கலந்து கொண்ட அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு:- இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.

குடும்பத்தினர்.

(6521)


# இராசி பலன்

08.11.2016

(ஐப்பசி 23, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
அட்டமி முற்பகல் 8.33 மணிவரை
அவிட்டம் பின்னிரவு 12.28 மணிவரை
சுபநேரம் 10.35-12.05 மணிவரை
இராகுகாலம் 3.05-4.35 மணிவரை
அட்டமி-நவமி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை | | |
| செவ் சந் | சந்திராஷ்டமம் பூசம், ஆயிலியம் பகல் 12.27 இற்கு கும்-சந் | | ராகு |
| | சனி புத | சூரி | குரு |

**மீனம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொழுதுபோக்கு விடயங் களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேடம்** செயற்பாடுகளில் தீவிரம் காட் டுவீர்கள், வீட்டை அழகு படுத்துவதில் ஆர்வம் காட்டு வீர்கள், கௌரவமான நாள், போசன சுகமுண்டு, தொலை பேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**இடபம்** தந்தை வழி உறவினர்களால் நன்மையுண்டு, புதிய திட்டங் களில் முன்னேற்றம் காண்பீர் கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** நட்பு பகையாதிருக்க விழிப் புணர்வு அவசியம், தொழில் வளர்ச்சியில் சிறுசிறு தாம தங்கள் ஏற்படலாம், வழிபா ட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்** குடும்பப் பெரியவர்களை அனு சரித்துச் செல்வது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சுபவிரயங்கள் கூடும் நாள்.

**கடகம்** எண்ணியது நிறைவேறும் நாள், புதிய பொருட் சேர்க் கையுண்டு, உணர்ச்சிவசப்படு வதைத் தவிர்ப்பது நல்லது, முன்னேற்றம் தரும் பயண மொன்று இடம்பெறலாம்.

**மகரம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்து ழைப்புகள் கிடைக்கப் பெறு வீர்கள், திடீர் பயணங்கள் செய்யும் சூழ்நிலை ஏற்பட லாம், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்** நன்மைகள் நாடி வரும் நாள், அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், மறைமுகப் போட்டிகள் மாறும், நல்லவர் களின் தொடர்புகள் ஏற்படும்.

**தனுசு** வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ் வீர்கள், சுபகாரியப் பேச்சுக்க ளில் முன்னேற்றம் காண்பீர் கள், வாக்கு மேன்மையுண்டு.


**விருச்சிகம்** விருந்தினர் வருகையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள்.

**துலாம்** குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகள் இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், தாழ்ந்த சுபா வமுண்டு, எதிர்பார்த்த தனவர வுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

# படுகொலை செய்யப்பட்ட மாணவர்களுக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று அஞ்சலி


## ஆத்ம சாந்தி வேண்டி ஆயிரக்கணக்கானோர் திரண்டனர்













(படங்கள்:-பொ.சோபிகா)



யாழ்ப்பாணம் குளப்பிட்டி பகுதியில் கடந்த ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த மாணவர்களான கிளிநொச்சியைச் சேர்ந்த நடராசா கஜன் (வயது-23), சுன்னாகத்தைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்சன் (வயது- 24) ஆகியோரின் ஆத்ம சாந்தி வேண்டி பல்கலைக்கழக சமூகத்தினரால் நேற்றைய தினம் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடந்த ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி கொக்குவில், குளப்பிட்டி பகுதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்தனர்.

முதலில் விபத்தால் இரண்டு மாணவர்களும் உயிரிழந்ததாக கூறிய பொலிஸார், அதன் பின்னர் தாங்கள் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதை ஒப்புக் கொண்டனர்.

இதனையடுத்து, சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஐந்து பொலிஸார் கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

மாணவர்களின் மரணம் தொடர்பில் நீதி வேண்டும் எனவும் குடும்பத்தினருக்கு உரிய நட்டஈடு வழங்கப்பட வேண்டும் எனவும் இது போன்ற சம்பவங்கள் இனி இடம்பெறக் கூடாது எனவும் பல்கலை. மாணவர்கள் அகிம்சை வழியில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் உயிரிழந்த மாணவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி பல்கலைச் சமூகத்தினர் ஒன்றிணைந்து மலர் தூவி தீபம் ஏற்றி தமது இரங்கல்களை தெரிவித்திருந்தனர். இந்த அஞ்சலி நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக பீடாதிதிகள், பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (இ-9)


SRI LANKA LIBRARY ASSOCIATION

Library & Information Science Course – 2017

**நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமாப் கற்கைநெறி– மட்டம் 1 (DIPLIS Level I) – 2017**

தொழில்சார் நூலகராவதற்கானதொரு சந்தர்ப்பம்

(நூலக தகவல் மத்திய நிலையங்களில் இணைய விரும்புபவர்களுக்கும், மற்றும் அண்மையில் க.பொ.த (உயர்தரத்தை)ப்'ர்த்தி செய்தவர்களுக்கும், ஏற்கனவே சேவையில் உள்ளவர்களுக்கும்)

நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமாப் கற்கைநெறி மட்டம் 1 (DIPLIS Level I) கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்தொழில்சார் டிப்ளோமாவானது நூலக தகவல் துறைசார் பல்வேறுபட்ட தொழில்களுக்குப் புகுமுகத் தகைமையாக உள்ளது.

**தகைமை**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற பட்டம்
  **அல்லது**
- க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி
  **அத்துடன்**
- க.பொ.த (சாதாரணதரம்) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் தாய் மொழியில் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி
  **அத்துடன்**
- தூயகணிதம் / கணிதத்திலும் ஆங்கிலத்திலும் சித்தி
- ஆங்கில மொழிமூல விண்ணப்பதாரிகள் க.பொ.த (சாதாரணதரம்) ப்ரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்திபெற்றிருக்கவேண்டும்.

Fellowship
Associateship
Membership
DIPLIS Level - III
DIPLIS Level - II
DIPLIS Level - I

கொழும்புப்பல்கலைக்கழகத்தின் இலங்கைத் தேசிய நூலக தகவல் அறிவியல் நிறுவகத்தில் உயர் கல்விபெறும் தகைமை

**கற்பிக்கும் முறை, மத்தியநிலையம், மொழிமூலம் மற்றும் கற்கைநெறிக் கட்டணம்**

1. வகுப்பறைக் கற்பித்தல் (வகுப்புக்கள் பின்வரும் மத்திய நிலையங்களில் வாரஇறுதி நாட்களில் நடாத்தப்படும். கற்கைநெறிக்கட்டணம் ரூபா 16,000/-)
2. தொலைக்கல்வி (தபால்மூலம்) + ஆய்வரங்குகள்: சிங்கள மொழி மூலத்தில் மட்டும். கற்கைநெறிக் கட்டணம் ரூபா 18,500/-

| மத்திய நிலையம் | மொழிமூலம் |
|---|---|
| கொழும்பு | சிங்களம், தமிழ், ஆங்கிலம் |
| பதுளை, காலி மற்றும் கண்டி | சிங்களம் மட்டும் |
| மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் | தமிழ் மட்டும் |

SLLA அலுவலகத்தில் இருந்து விண்ணப்பப் படிவத்தையும் விபரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். அல்லது இணையத்தில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும். அல்லது சுய முகவரி இடப்பட்டு முத்திரை (ரூபா15/-) ஒட்டப் பட்டதும் 9"x4" அளவுள்ள தபால் உறையை "இலங்கை நூலக சங்கத்தின்' பெயருக்கு எழுதப்பட்டதும், "ரொரிங்ரன் உபதபால் அலுவலகதில் மாற்றக் கூடியதுமான ரூபா 200/- பெறுமதியான காசுக்கட்டளையுடன் அனுப்பி வைக்கவும். அல்லது ரூபா 200/- செலுத்தி யாழ் நிலைய ஒருங்கிணைப்பாளரிடம் விண்ணப்பப் படிவத்தை பெற்றுக் கொள்ள முடியும். ப'ரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 2016 நவம்பர் 18 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கப்பெற வேண்டும். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சை ஒன்றிற்கு சமூகமளிக்கவேண்டும்.

**Education Officer, Sri Lanka Library Association,**
**The Professional Centre, 275/75, Prof. Stanley Wijesundera Mw. Colombo 07.**
**Tel/Fax 011-2589103 E-Mail : slla@sltnet.lk, Web: www.slla.org.lk**

## ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி பயிற்சி நிலையம்

Aaruthal

ஆறுதல் நிறுவனம் நடத்தும்
Blossoms ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்துக்கான

### முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விண்ணப்பம் கோரல் – 2017

சிறுவர் பராமரிப்பு மற்றும் ஆரம்பப்பிள்ளைப் பருவ அபிவிருத்தி என்பவற்றில் போதிய அறிவும் அனுபவமும், கல்வித்தகைமையும், புலமைசார் அறிவும் உடையவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களுக்கு EPF , ETF கொடுப்பனவு வழங்கப்படும். மேலும் மாதாந்தக் கொடுப்பனவு பேசித் தீர்மானிக்கப் படும்.

கல்வித்தகைமை :-
- சாதாரண தரத்தில் தமிழ் உட்பட மூன்று பாடங்களில் (C) திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் அழகியல், ஆங்கிலம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- க.பொ.த உ/த
- முன்பள்ளி கல்வி டிப்ளோமா .
  விசேட தகைமைகள் இருப்பின் சுருக்கமாகக் குறிப்பிடவும். (கணனி உட்பட)

**அத்துடன்**

ஆறுதல் நிறுவனத்திற்கு Photoshop, Page maker, Coral draw Web designing & Updating தெரிந்த
**கணனி வடிவமைப்பாளர் தேவை.** (பெண் ஊழியர்)

**விண்ணப்பம் சொந்த கையெழுத்தில் அமையவேண்டும்.**
விண்ணப்ப முடிவுத்திகதி : - 27.11.2016
உங்கள் விண்ணப்பங்களை
பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**பிரதம நிறைவேற்று அதிகாரி**
**ஆறுதல் நிறுவனம்**
**இல.51 வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
தொலைபேசி இலக்கம்: 0212217092

சுந்தரம் டிவகலாலா
பிரதம நிறைவேற்று அதிகாரி
**ஆறுதல் நிறுவனம்**



## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA

*No: NP/14/41(15)/03/tender/2017* *Date:* 2016.11.08

### 2017ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மீன் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றினை 01.01.2017 தொடக்கம் 31.12.2017ம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
| --- | --- | --- | --- | --- | --- |
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | உடுவில் கீளிச் சந்தை | 1000.00 | 10000.00 | 172515.00 | |
| 2 | கருவாட்டுக்கடை - 03 | 750.00 | 7500.00 | 43750.00 | 250.00 |
| 3 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7500.00 | 52710.00 | 250.00 |
| 4 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7500.00 | 57600.00 | 250.00 |
| 5 | கோழிக்கடை இல 06 | 750.00 | 7500.00 | 152250.00 | 250.00 |
| 6 | பொது மலசலகூடம் | 750.00 | 7500.00 | 40530.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மல்வம் சந்தை | 500.00 | 1000.00 | 25305.00 | |

1.கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 09.11.2016 - 21.11.2016 பி.ப 2.00 மணி வரை
2.கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் - 22.11.2016 நண்பகல் 12.00 மணி வரை
3.கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் - 22.11.2016 பி.ப 2.00 மணிக்கு
கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2016.10.20ம் திகதிய வலம்புரி, உதயன், தினக்குரல் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

தி.சுதர்சன்
செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

(சி-6343)


# பிரசவத்தின் போது பெண் ஒருவரை துணைக்கு அழைத்துக்கொள்ளலாம்

(கொழும்பு)

பிரசவத்தின்போது பெண் ஒரு வரை துணைக்கு அழைத துக்கொள்ள கர்ப்பிணங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட உள்ளது.

பிரசவத்தின்போது கர்ப்பிணிகள் தங்களது மனோதிடத்தை வலுப்படுத்திக் கொள்ள தமக்கு விருப்பான பெண் ஒருவரை துணைக்கு அழைத்துக் கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என கொழும்பு காசல மகப் பேற்று வைத்தியசாலையின் மகப் பேற்று நிபுணத்துவ வைத் தியர் பேராசிரியர் ஹேமந்த சேனாநாயக்க தெரிவித்துள் ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு முதல் பெண் உதவியாளர் ஒருவரை கர்ப்பிணிகள் பிரசவத்தின் போது அழைத்துக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாகவும், 2011 ஆம்ஆண்டு முதல சுகாதார அமைச்சின் தந்திரோபாய திட்டத்தில் இந்த உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சந்தர்ப்பததை பயன்படுத்திக் கொள்ளுமாறு அனைத்து கர்ப்பிணிகளையும் தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தை அனைத்து கர்ப்பிணிகளும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் கோரியுள்ளார். (இ-7)


## அகவை நிறைவில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

ஸ்ரீமான் சிவபாதம் நந்தகுமார் அவர்கள்
(வலயக் கல்விப் பணிப்பாளர் – வடமராட்சி)



பல் துறைகளிலும் திட்டமிடலும் திறன்
செயலும் தற் துணிவான ஆளுமையும்
கொண்ட எங்கள் வடமராட்சி கல்விப்
பணிப்பாளர் மேலும் பல பதவிகளைப்
பெற்று பதவியால் உயர வாழ்த்துகின்றோம்.

பார்வதி பத்தினியுடன் அமையும் பசுபதீஸ்வரன்
திருவருளும் நெல்லண்டைப் பத்திரகாளியம்மன்
ஸ்ரீவீரமாகாளியம்மன் வடபத்திரகாளியம்மன்
பெருவருளும் நிறைந்து வாழ்க! வாழ்க! பல்லாண்டே

என்றும் வாழ்த்தும்
சைவசித்தாந்த பண்டிதர்
சிவஸ்ரீ. தியாக.சோமாஸ்கந்தராஜக் குருக்கள்
B.A. Dip. in Edu M.A, பிரதியதிபர்,
தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளியம்மன்,
நெல்லண்டை இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன்,
வட பத்திரகாளியம்மன் தேவஸ்தானம்
ஆதீன ஹர்த்தாவும் பிரதம குருவும்

(C-6340)




## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா:சூரிசெவ் 12 ல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: B/6409 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: சூரிசெவ் 5 ல்<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/6429 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மகம் செவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: 8ம் தரம்/ சொந்ததொழில்<br>தொ.இ: B/6410 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 67செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:MBBS, MD/ வைத்தியர்<br>தொ.இ: G/6432 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 14செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6411 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 31<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:Diploma/தனியார் தொழில் இந்தியா<br>தொ.இ: G/6436 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 33செவ் 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BSc, MBA/ அரசதொழில்<br>தொ.இ: B/6412 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 22செவ் 8 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:AAT<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/6438 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com**
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00- 5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

**இனிவரும் நாட்களில் கல்யாணமாலை ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை தினமாகும்.**

# 118 கிலோ கேரளக்கஞ்சாப் பொதிகள் சுண்டிக்குளம் கடற்கரையில் மீட்பு




கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட தர்மபுரம் பொலிஸ் பிரிவில் சுண்டிக்குளம் கடற்கரையில் வைத்து கடல் வழியாக படகு மூலம் கடத்தி வரப்பட்ட 118 கிலோ கேரளக் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தர்மபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

தர்மபுரம் பொலிஸ் நிலைய 011 308 1040 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு பொதுமகன் ஒருவன் வழங்கிய இரகசியத் தகவலை அடுத்து தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.எம்.டி.என். சதுரங்க தலைமையிலான பொலிஸ் அணியினரின் சுற்றி வளைப்பின் போது கஞ்சாப் பொதிகள் ஏற்றி பயணித்த படகும் கஞ்சாப் பொதிகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தர்மபுரம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தின் போது தப்பிச் சென்றுள்ள கஞ்சா கடத்தலில் ஈடுபட்டவர்கள் தொடர்பான விபரம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கைப்பற்றப்பட்டுள்ள 118 கிலோ கஞ்சா பொதிகள் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

விசாரணைகளின் பின்னர் கைப்பற்றப்பட்டுள்ள கஞ்சாப் பொதிகள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்படவுள்ளதாக தர்மபுரம் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடற்படையினரால் மீட்கப்பட்ட 10 கிலோ கேரளக் கஞ்சாபொதிகளும்தர்மபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றில் மற்றொரு வழக்காக பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-15-312-281)

## சட்டவிரோத மது உற்பத்தி பொருட்களுடன் கொண்டைமடுப்பகுதியில் ஒருவர் கைதானார்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கொண்டைமடுப்பகுதியில் சட்டவிரோத மது உற்பத்தி பொருட்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியிலுள்ள வீடொன்றை சந்தேகத்தின் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் சுற்றிவளைத்த மது ஒழிப்பு விசேட பிரிவினர் குறித்த சந்தேக நபரையும் 4 லீற்றர் கசிப்பு கோடா மற்றும் மது தயாரிக்கும் உபகரணங்கள் என்பனவற்றை கைப்பற்றியுள்ளதாக மது ஒழிப்பு விசேட பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்ட சட்டவிரோத பொருட்களையும் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தியுள்ளதாக குறித்த விசேட பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஒட்டு சுட்டான் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-281)

## வவுனியா மாவட்ட அழககசங்க பொதுக்கூட்டம் இன்று

வவுனியா மாவட்ட அழகக சங்கப் பொதுக் கூட்டம் இன்று செவ்வாய்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இதனால் அனைத்து அழகக சங்கங்களையும் இன்றைய தினம் பூட்டி ஒத்துழைப்பு வழங்குமாறு அழகக சங்க நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்.

வவுனியா, புகையிரத நிலைய வீதியில் உள்ள முத்தையா மண்டபத்தில் காலை 9 மணிக்கு அழகக சங்க பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்டங்களினதும் அழகக சங்க உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதனால் அனைத்து அழகக சங்க உறுப்பினர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழகக சங்க நிர்வாகத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர். (2-250)




## தங்கக்கட்டிகளை கடத்துவதற்கு முயன்ற இருவர் கைதாகினர்





இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு பல இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்கக் கட்டிகளை கடத்தும் முயற்சியில் ஈடுபட்ட இருவரை நேற்று அதிகாலை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

குறித்த இருவரும் சுமார் 5 கிலோ கிராமிற்கு அதிகமான எடை கொண்ட தங்கக் கட்டிகளை தலைமன்னாருக்கு மேற்கு பகுதியிலுள்ள கடற்பரப்பில் வைத்து மீன்பிடி படகொன்றின் மூலம் கடத்தும் போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப் பட்டவர்களில் ஒருவர் மன்னாரைச் சேர்ந்தவரென்றும் மற்றையவர் சிலாவத்துறையைச் சேர்ந்தவரென்றும் கடற்படை தெரிவித்துள்ளது.

கடற்படையினருக்கு கிடைத்த விசேட தகவலினடிப்படையில் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதோடு, பெறுமதி வாய்ந்த தங்கக்கட்டிகளும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட குறித்த இருவரையும் யாழ்ப்பாணம் சுங்க திணைக்கள அதிகாரிகளிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைத்துள்ளதாக கடற்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர். (2-9)

## கொலை செய்த குற்றச்சாட்டுடன் தொடர்புபட்ட 5 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது

(மல்லாவி)

யாழ்.சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் வைத்து கடந்த 2011 ஆம் ஆண்டு சந்தேக நபர் ஒருவரை சித்திரவதை செய்து கொலை செய்த குற்றச்சாட்டுடன் தொடர்புபட்ட ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்களையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி கொள்ளைச்சம்பவத்துடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டில் ஐந்து இளைஞர்களை கைது செய்த யாழ்.சுன்னாகம் பொலிஸார் இவர்கள் மீது மேற்கொண்ட சித்திரவதை காரணமாக யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சிறிஸ் கந்தராஜா சுமனன் என்ற இளைஞர் கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி உயிரிழந்துள்ள நிலையில் இவரது சடலத்தை கிளிநொச்சி இரணைமடுக்குளத்தில் வீசிவிட்டு குறித்த இளைஞர் தப்பியோடி குளத்தில் குதித்து தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த ஜூலை மாதம் 25 ஆம் திகதி குறித்த வழக்கு மல்லாகம் நீதவான் ஏ.யூட்சன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது குற்றம் சாட்டப்பட்ட ஏனைய இளைஞர்கள் மன்றில் ஆஜராகி பரபரப்பு வாக்கு மூலம் ஒன்றினை வழங்கியிருந்தனர்.

எங்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி எங்களை கைது செய்த சுன்னாகம் பொலிஸார் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து அடித்து. மின்சாரம் பாய்ச்சி சித்திரவதைக்குட்படுத்தினர். இந்த சித்திரவதையின் காரணமாக எமது நண்பனான சுமனன் என்பவர் இறந்து விட்டார் என வாக்குமூலம் வழங்கியிருந்தனர்.

உயிரிழந்த இளைஞரின் சடலத்தை இரணைமடுக்குளத்தில் வீசிவிட்டு அவர் தப்பியோடி இரணைமடுக்குளத்தில் குதித்து தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து சித்திரவதை மற்றும் கொலைக்குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட எட்டுப்பொலிஸாரையும் கைது செய்யுமாறு மல்லாகம் நீதவான் ஏ.யூட்சன் உத்தரவிட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து மூன்று மாத காலத்திற்குள் விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டிருந்தார்.

இதனடிப்படையில் கடந்தமாதம் 27 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நடைபெற்ற கொலைக்குற்றச்சாட்டு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஐந்து பொலிஸாரையும் உடனடியாக கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்துமாறும் இவர்களது வெளிநாட்டு பயணங்களை தடைசெய்யுமாறும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

(24.10.2016) குறித்த கொலைக்குற்றச்சாட்டுடன் தொடர்புபட்ட ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா' முன்னிலையில் ஆஜர்படுதப்பட்டு நான்காவது சந்தேக நபருக்கு தமிழிலும் ஏனைய 4 பேருக்கு சிங்களத்திலும் குற்றச்சாட்டு பத்திரம் வசித்துக் காட்டப்பட்டதுடன் ஒன்று தொடக்கம் 6 வரையான சாட்சிகளுக்கு அழைப்புக் கட்டளை அனுப்புமாறும் குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸாருக்கு கட்டளையிட்டதுடன் குறித்த ஐந்து சந்தேக நபர்களான பொலிஸாரை எதிர்வரும் ஏழாம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று விளக்கத்திற்கு எடுத்து கொள்ளப்பட்ட போது, குறித்த நபர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர விட்டுள்ளார்.' (2-15)




திருமுறிகண்டி இந்துபுரம் அமெரிக்கன் சிலோன் மிசன் முன்பள்ளியில் மரம் நாட்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் இந்துபுரம் கிராம சேவையாளர், பொலிஸ் அதிகாரிகள், முன்பள்ளி சிறார்கள், பெற்றோர்கள், இளைஞர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்: திருமுறிகண்டி செய்தியாளர்)

# சம்பந்தப்பட்டவர்களிடம் கலந்துரையாடி சரியான தீர்வொன்றை பெற்றுத் தருவேன்

## எதிர்க்கட்சித் தலைவர் கஜனின் குடும்பத்தினருக்கு உறுதிமொழி

யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவன் நடராசா கஜனின் இல்லத்திற்கு நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சி தலைவருமான இரா. சம்பந்தன் நேரில் சென்று தனது அனுதாபங்களை தெரிவித்ததுடன் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி சரியான தீர்வொன்றைப் பெற்றுத்தருவேன் என்று குறிப்பிட்டார்.

இந்த விஜயத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன். வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை. இவர்களுடன் கட்சியின் அமைப்பாளர்கள். தொண்டர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன் பின்னர் எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்.

மாணவர்களின் கொலையை நாங்கள் மிகவும் வன்மையாக கண்டிக்கின்றோம். தற்போது இவர்களின் கொலைக்குற்றவாளிகள் நீதிமன்றில் நிறுத்தப்பட்டுள்ளார்கள்.

நீதிமன்றத்தில் விசாரணைகள் நடைபெறும் அதேவேளை இப்போது நாங்கள் இவர்களுக்கு அவசரமாக செய்யவேண்டிய பல காரியங்கள் உண்டு. குறிப்பாக இந்த இரண்டு மாணவர்களும் வீட்டில் பொறுப்பு வாய்ந்தவர்களாக இருந்தவர்கள்.

எனவேதான் இவர்களின் குடும்பங்களுக்கு சரியான இழப்பீடுகளை பெற்றுக் கொடுக்க வேண்டிய கடமைப்பாடு எங்களுக்கு உண்டு. அதை நாங்கள் முடிந்தளவு சம்பந்தப்பட்டவர்களிடம் கலந்துரையாடி பெற்றுத் தருவோம். ஆனாலும் நீதியின் தீர்ப்பு நியாமானதாக கிடைக்க வேண்டும். இதற்காக நாங்கள் தொடர்ந்து குரல்கொடுப்போம் என்று குறிப்பிட்டார். (2-312-281)

# வீதி திருத்தப் பணிகளைப் பார்வையிட்டார் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்




(குருமன்காடு)


வவுனியா. கோவில்புதுக்குளப் பகுதியில் நடைபெறும். வீதி திருத்தப்பணியை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார்.

கோவில் புதுக்குளத்தில் உள்ள மக்கள் தமது கிராமத்திற்கான வீதி செப்பனிடப் படாமல் காணப்படுவதாகவும் இதனால் தமக்கான போக்குவரத்து செய்வதில் கடினமான தன்மை உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரிடம் அப்பகுதி மக்கள் தெரிவித்ததையடுத்து அவரது சொந்த நிதி ஒதுக்கீட்டில் இவ் வீதிகளை செப்பனிடுவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

இதன்பிரகாரம் வீதி திருத்தப்பணிகள் சரியான முறையில் இடம்பெறுகின்றதா என்பதனை நேரில் சென்று பார்வையிட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்பகுதி மக்களுடனும் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. (2-250)







வவுனியா விபுலானந்தாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஒழுங்கமைப்பில் மாபெரும் இரத்ததான நிகழ்வு பழைய மாணவர் சங்கத்தின் தலைவரும் கல்லூரி அதிபருமான எஸ்.அமிர்தலிங்கம் தலைமையில் கடந்த 5 ஆம் திகதி கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றபோது... (படங்கள்:- முள்ளியவளை செய்தியாளர்)

# கடத்திச் செல்லப்பட்ட மாணவி புதுக்குளம் பகுதியில் விடுவிப்பு

வவுனியா. வைரவப்புளியங்குளம் பகுதியில் தனது கற்றல் நடவடிக்கைக்காக சென்ற மாணவி ஒருவரை பின்தொடர்ந்த இளைஞர்கள் சிலர் கடத்திச் சென்று புதுக்குளம் பகுதியில் விட்டுச் சென்றுள்ள சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த 5 ஆம் திகதி காலை சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

வவுனியா. வைரவப்புளியங்குளம் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு சென்ற உயர்தர மாணவி ஒருவரை. சில இளைஞர்கள் பின்தொடர்ந்து வந்துள்ளனர்.

வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கு அண்மையில் வந்த போது குறித்த இளைஞர்கள் அம்மாணவி வசம் இருந்த கைப்பை மற்றும் தொலைபேசி என்பவற்றை பறித்துள்ளதுடன். தொலைபேசியை பறித்து செயலிழக்கச் செய்துள்ளனர்.

அதன் பின்னர் குறித்த மாணவியை புதுக்குளம் பகுதியில் உள்ள வீதியில் இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர். எவ்வாறு அங்கு கொண்டு சென்றார்கள் என்பது குறித்து அந்த மாணவிக்கு தெரியவில்லை.


சுமார் அரை மணித்தியாலத்திற்குள் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்ற நிலையில் புதுக்குளம் பகுதியில் நின்று குறித்த மாணவி தனது உறவினர்களுக்கு தொலைபேசி மூலம் தகவல் வழங்கியதையடுத்து மாணவி வீட்டாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

மாணவிக்கு எந்தவிதமான பாதிப்புக்களும் ஏற்படாத காரணத்தாலும். தமது பிள்ளையின் எதிர்காலம் கருதியும் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவில்லை என தெரியவருகிறது.

இதேவேளை. வவுனியா. வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தை அண்டிய பகுதியில் பொலிஸாரை பாதுகாப்பு கடமையில் ஈடுபடுமாறும். பொலிஸ் காவலரண் ஒன்றை அமைக்குமாறும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (2-250)

# பல மில்லியன் ரூபா செலவில் பதிக்கப்பட்ட தரை ஓடுகள் சேதம்

## முல்லை. மாவட்ட செயலகம் வருகை தரும் மக்கள்,நோயாளர்கள் விசனம்



(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் கடந்த 2015 ஆம் ஆண்டு பல மில்லியன் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் மூன்று மாடிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ள நிலையில், மூன்று மாடிகளின் தரைகளுக்கு பதிக்கப்பட்டுள்ள தரை ஓடுகளின் ஒட்டுக்கள் கழன்று வருவதால் வரவேற்பு கருமபீடம் உட்பட பல இடங்களில் தரையோடுகள் எடுக்கப்பட்ட நிலையில் இருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வன்னி இறுதி யுத்தத்திற்கு பின்னரான மக்கள் மீள்குடியேற்றத்தின் போது முல்லைத் தீவு மாவட்டத்திற்கான செயலகம் இல்லாத நிலையில் இயங்கியமையை அடுத்து அப்போதைய ஆட்சியாளர்களினால் பல மில்லியன் ரூபா செலவில் கொழும்பிலுள்ள ஒப்பந்தகாரரிடம் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான மாவட்ட செயலகம் அமைப்பதற்கு வேலைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இதன் சேவைகள் முடிவடைந்து 2015 ஆம் ஆண்டு மாவட்ட செயலக பணிகள் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து ஒன்றரை வருடங்களினுள் தரையோடுகள் சேதம் அடைந்தும் வருகின்றன.

இதனை மீளமைப்புச் செய்வதற்கு பல இலட்சம் ரூபாய் பணம் தேவைப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பொதுமக்களிள் பெரும்தொகையான வரிப் பணம் வீண்விரயமாக்கப்பட்டுள்ளதாக மாவட்டசெயலகத்திற்கு வருகை தரும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (2-15)



மன்னார் மனமாற்றல் உள்ளோர் புனர்வாழ்வு சங்கத்தினால் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக கடந்த 4 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள முல்லை நிலா மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலையில் கல்வி பயின்று வரும் 34 மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்காக ஒலி பெருக்கி சாதனம் அன்பளிப்பாக வழங்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.
(படம்:- மல்லாவி செய்தியாளர்)



கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தின் புதிய வகுப்பறை கட்டடத் திறப்பு விழா நேற்று கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து வைத்தார்.
(படம்: பரந்தன்,பனிக்கன்குளம் செய்தியாளர்கள்)

# காஷ்மீரில் பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே மோதல்



ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் சோபியான் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் ஒரு தீவிரவாதி சுட்டுக்கொல்லப்பட்டுள்ளான்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் தென்பகுதியில் சோபியான் மாவட்டத்துக்குட்பட்ட வன்காம் கிராமத்தில் சில தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக பாதுகாப்புப் படையினருக்கு இரகசியத் தகவல் வந்தமையை அடுத்து, அந்தப் பகுதியை பாதுகாப்புப் படையினர் நேற்று அதிகாலை சுற்றிவளைத்தனர். இதை அறிந்ததும் அங்கு பதுங்கியிருந்த தீவிரவாதிகள் அவர்கள் மீது துப்பாக்கிகளால் சுட்டுத் தாக்குதல் நடத்தினர். பாதுகாப்புப் படையினரும் துப்பாக்கிகளால் சுட்டு எதிர்த் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் ஒரு தீவிரவாதி கொல்லப்பட்டதாகவும், பாதுகாப்புப் படையைச் சேர்ந்த இரு வீரர்கள் காயமடைந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (இ-7)

# சூரிய மின்சக்தி ஆராய்ச்சி மையம் இந்தியாவும் - பிரிட்டனும் ஒப்புதல்




இந்தியா- இங்கிலாந்து இடையேயான சூரிய மின் சக்தி ஆராய்ச்சி மையத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இரு நாடுகள் இடையேயான ஒத்துழைப்புக்கு 'மேக் இன் இந்தியா' முக்கிய பங்கு வகிக்கிறது. இங்கிலாந்து பிரதமர் தெரசாமே 3 நாள் பயணமாக நேற்று முன்தினம் இரவு டில்லி வந்தார்.

விமான நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அவருடன் இங்கிலாந்து தொழில் அதிபர்கள் சுமார் 40 பேர் வந்தனர். கடந்த ஜூலை மாதம் பதவியேற்றுக் கொண்ட பிறகு தெரசாமே ஐரோப்பா கண்டத்தை தாண்டி வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.

தெரசாமே முதல் நிகழ்ச்சியாக டில்லியில் நேற்றுக் காலை இந்தியா-இங்கிலாந்து தொழில்நுட்ப மாநாட்டை தொடங்கி வைத்தார்.

இந்த மாநாட்டில் பிரதமர் நரேந்திரமோடி பங்கேற்று பேசியதாவது, ஐரோப்பா கண்டத்தை தாண்டி முதல் வெளிநாட்டுப் பயணமாக தெரசாமே இந்தியாவை தேர்ந்து எடுத்தது பெருமை அளிக்கிறது.

இந்தியா- இங்கிலாந்து இடையேயான இருதரப்பு வர்த்தகம் நீடிக்கும். கடந்த 5 ஆண்டுகளில் இருப்பதுபோன்ற நிலைமை தொடரும். இங்கிலாந்தில் முதலீடு செய்யும் 3ஆவது மிகப்பெரிய நாடு இந்தியா ஆகும்.

அறிவியல் என்பது உலகமயமானது. தொழில்நுட்பம் கண்டிப்பாக உள்ளூராக இருக்க வேண்டும். சர்வதேச சவால்களை எதிர்கொள்ள இரு நாடுகளும் தொடர்ந்து ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும். இந்தியா- இங்கிலாந்து இடையேயான சூரிய மின் சக்தி ஆராய்ச்சி மையத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இரு நாடுகள் இடையேயான ஒத்துழைப்புக்கு 'மேக் இன் இந்தியா' முக்கிய பங்கு வகிக்கிறது.

இராணுவம் உட்பட பல்வேறு துறைகளில் அந்நிய முதலீடு மூலம் இங்கிலாந்து பலன் அடையும் என மேலும் தெரிவித்தார். (இ-7)

# இந்தியா - ஜப்பானிடையே புதிய அணுசக்தி ஒப்பந்தம்



(டில்லி)

இந்தியா மற்றும் ஜப்பான் இடையே புதிய அணுசக்தி ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாக உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் பிரதமர் நரேந்திர மோடியின் ஜப்பான் விஜயத்தின் போது மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் ஜப்பான் பிரதமர் ஜின்ஷோ அபே இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது வளர்ச்சித் திட்டங்களுக்கான அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஏற்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இருந்த போதிலும் இதுவரை அந்த ஒப்பந்தம் கையெழுத்தாகவில்லை. இந்நிலையில், எதிர்வரும் 11, 12ஆம் திகதிகளில் இந்திய பிரதமர் ஜப்பானுக்கு விஜயம் செய்யவுள்ளார். இதன் காரணமாக எதிர்வரும் 11ஆம் திகதி இந்திய - ஜப்பான் அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுதொடர்பாக ஜப்பான் நாட்டுப் பத்திரிகையில் வெளியான செய்தியில், இந்திய பிரதமர் மோடியின் டோக்கியோ பயணத்தின் போது இந்தியா - ஜப்பான் இடையே புதிய அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

இதன்படி, இந்தியாவுக்கு அணுசக்தி தொழில்நுட்பத்தை ஜப்பான் வழங்கும். அதேவேளையில், இந்தியா அணுகுண்டு சோதனை நடத்தினால் இருதரப்பு ஒத்துழைப்பு நிறுத்திக் கொள்ளப்படும் என்று இந்தியாவும், ஜப்பானும் ஒப்புக் கொண்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகும் பட்சத்தில், அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமலேயே ஜப்பானுடன் இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்ட முதல் நாடாக இந்தியா விளங்கும்.

இரு நாடுகளுக்கும் இடையே பொருளாதாரம், பாதுகாப்பு ஆகிய துறைகளிலும் நல்லுறவு ஏற்படும். மேலும் அமெரிக்க நிறுவனங்கள் இந்தியாவில் அணுமின்நிலையங்களைத்தொடங்குவதும் சுலபமாகும் என்றும் குறித்த செய்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# டில்லியில் கடந்த 17 ஆண்டுகளில் இல்லாதளவு காற்று மாசு அதிகரிப்பு



இந்தியத் தலைநகர் டில்லியில் காற்று மாசு அதிகரித்திருப்பதால் மக்களுக்கு நோய்கள் தாக்கும் அபாயம் அதிகரித்துள்ளது.

இந்தியாவின் வட மாநிலங்கள் பலவற்றிலும் காற்று மாசு அதிகரித்து வருகிறது . டில்லியில் கடந்த 17 ஆண்டுகளில் இல்லாத அளவு காற்று மாசு அதிகரித்து உள்ளதாக மத்திய அறிவியல் மற்றும் சுற்றுச் சூழல் துறை எச்சரித்துள்ளது.

டில்லி மட்டுமல்லாது பஞ்சாப், ஹரியானா மற்றும் ராஜஸ்தான் ஆகிய 4 மாநிலங்களிலும் மாசு அளவு கடுமையாக உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் டில்லியில் பல பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மாணவர்கள் முகமூடி அணிந்து வரவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# தமிழ் இளைஞர்கள் மூவர் கைது! கொலை முயற்சி வழக்கில் சிக்கினர்

(பாரிஸ்)

பிரான்சில் தமிழ் இளைஞர் ஒருவரைப் படுகொலை செய்ய முயன்ற குற்றச்சாட்டில், மூன்று தமிழ் இளைஞர்களை பிரான்ஸ் பொலிஸார் நேற்று முன்தினம் அதிரடியாக கைது செய்துள்ளதாக பிரான்ஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடந்த ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி லாச்சப்பல் என்ற பகுதிக்கு அருகிலிருந்து 18 வயதான இளைஞர் ஒருவர் கொடூரமான முறையில் தாக்கப்பட்ட நிலையில் அந்நாட்டு பொலிஸாரால் மீட்கப்பட்டார்.

தலை உள்ளிட்ட பகுதிகளில் வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்ட அவர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நூறு நாட்களுக்கு மேல் இயங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த படுகொலை முயற்சியின் விசாரணைகளை பாரிஸ் இரண்டாவது பிரிவின் சட்டவியல் பொலிஸாரினால் மிகவும் தீவிரமாக விசாரிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், அந்நாட்டு பொலிஸார் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின் மூலம் இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட மூவரும் இலங்கை தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பிரான்ஸ் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அந்நாட்டு பொலிஸார், இந்தத் தாக்குதல் சம்பவம் தமிழ் குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற பழிவாங்கல் மோதல் என அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்டவர்களில் இருவர் சம்பவ தினத்தில் அங்கு இருந்ததாக ஒப்புக்கொண்டுள்ள நிலையில், ஒருவர் தொடர்ந்தும் மறுப்பு தெரிவித்து வருவதாக அந்நாட்டு பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-7)

# பீடி மற்றும் சுருட்டுக்கும் உருவப்பட எச்சரிக்கை

சிகரெட் பக்கெட்டுகளில் காணப்படும் உருவப்பட எச்சரிக்கையை, பீடி மற்றும் சுருட்டுப் பக்கெட்டுகளிலும் வெளியிடுவது தொடர்பில், சுகாதார அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது.

பல நோய்களுக்கு வித்திடும் புகைப் பழக்கத்தை இல்லாதொழிப்பதற்காக, உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசனையின் பிரகாரம், சிகரெட் பக்கெட்டுகளில், உருவப்பட எச்சரிக்கைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், பீடி மற்றும் சுருட்டு ஆகியவற்றுக்கு இவ்வாறான உருவப்பட எச்சரிக்கைகள் பிரசுரிக்கப்படவில்லை. இந்நிலையிலேயே, இது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன ஆகியோரின் ஆலோசனைகளுக்கமைய, புகையிலை உற்பத்திகளுக்கான வரி, 90 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்நிலையில் ஒரு சிகரெட்டின் விலை 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. புகைப்பொருட்களின் விலையை அதிகரிப்பதன் ஊடாக அதன் பாவனையாளர்களின் எண்ணிக்கைகளை 4-5 சதவீதமாகக் குறைப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இந்நிலையில் பீடி சுற்றப்பட்டுள்ள இலையின் இறக்குமதிக்கான வரி இரண்டாயிரம் முதல் மூவாயிரம் ரூபாய் வரை அதிகரிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

எதிர்காலத்தில் பீடி மற்றும் சுருட்டுக்கான உருவப்பட எச்சரிக்கையும் விடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# இலங்.மத்திய வங்கியின் பிணை முறி விற்பனை குறித்து புதிய நடைமுறை

## ஆளுநர் இந்திரஜித் அறிவிப்பு

(கொழும்பு)

**இலங்கை மத்திய வங்கி பிணை முறி விற்பனை குறித்து புதிய நடைமுறை எதிர்வரும் காலங்களில் பின்பற்றப்படும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.**



புதிய ஏல விற்பனை முறையொன்று அறிமுகம் செய்யப்படவுள்ளதாக தெரிவித்தார்.

இதன் மூலம் மோசடிகள் இடம்பெறக்கூடிய சாத்தியங்கள் வரையறுக்கப்படும் என தெரிவித்துள்ள அவர், புதிய முறைமையை முழுமையாக தயாரித்து உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபுணர்களின் ஒத்துழைப்புடன் நடைமுறைப் படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் சில மாதங்களில் இந்த நடைமுறை அறிமுகம் செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# கண்ணின் நீர் அழுத்தம் (Glaucoma)

குருதியின் இரத்த அழுத்தம் அதிகரிக்கும் (Hypertension) போது உடலும் கண்களும் பாதிக்கப்படுகின்றன. அதே போல கண்ணினுள் சுரக்கும் Aqueous Humour எனப்படும் கண்ணின் முன்ரசம் செல்லும் பாதை அடைக்கப்பட் டால் ரசத்தினழுத்தம் அதிகமாகும். இது 17-22 மி.மீ. இடைப்பட்டதாக காணப்படும். இம்மட்டத்தினை விட அதிகரித்தால் அல்லது ஒரு கண்ணை விட மறு கண்ணில் 3 மி.மீ அதிகமாகக் காணப்பட்டால் அது கண்ணின் நீர் அழுத்தம் எனப்படும்.

கண்ணின் நீர் அழுத்தம் அதிகமாகும்போது கண் கனமாகிறது. டோனோமீற்றரினால் (Tonometer) கண்ணின் நீர் அழுத்தம் கணிக்கப்படுகின்றது. இது காலை, மாலை மற்றும் இரவில் அதிகரிக்கலாம். இதனை தினசரி வேறுபாடு (Diurnal Variation) என அழைப்பர். ஆகையால் ஒரு நேரத்தில் கணக்கிடப்பட்ட கண்ணின் நீர் அழுத்தம் சரியாக இருக்கிறதா? அல்லது அதிகரிக்கவில்லையா? என்பதனை உடனே கணித்துவிட முடியாது. 40 வயதிற்கு மேற்பட்டோர் கண்ணின் நீர் அழுத்தம் தொடர்பாக பரிசோதிக்கவேண்டும்.

நம் நாட்டில் பல இலட்சக்கணக்கானோர் இந் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலும் சிலருக்கு இந்நோய் நாற்பது வயது பூர்த்தியடைந்த பின்னரே ஏற்படுகின்றது. மேலும் சிலருக்கு பரம்பரை நோயாக வரவும் வாய்ப்பு இருக்கின்றது. பலருக்கு தாம் இந்நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்பது தெரியாது. ஏனென்றால் இதனால் கண்சிவப்பாதல், கண்வலி என்பன இருக்காது. எனவே நாற்பதை அடைந்தவர்கள் கண்ணின் நீர் அழுத்தம் சரியாக காணப்படுகின்றதா? என்பதை அறிந்து கொள்ளல் அவசியம். கண்ணின் நீர் அழுத்தத்தை பரிசோதிக்க பார்வை (Vision), கண்ணின் நீர் அழுத்தம் (Tension), கண்ணின் உட்புறத்தை அறிதல் (Fundus Exam) மற்றும் தோற்றப்பரப்பு (Fiel of vision- Central & Peripheral) போன்ற நான்கு சோதனை முறைகளை மேற்கொள்வது முக்கியமாகும். இச்சோதனைகளின் பின் சிகிச்சை அளிக்கப்படும். இதனை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து விட்டால் குணப்படுத்துவது எளிது. இந்த நான்கில் ஏதாவது இரண்டு குறைந்து காணப்பட்டு மருந்தினால் கட்டுப்படுத்த முடியாவிட்டால் அறுவைச்சிகிச்சை செய்தல் வேண்டும். அறுவைச் சிகிச்சையை தள்ளிப்போட்டால் பார்வையை இழக்க நேரிடும்.

கண்ணின் நீர் அழுத்தமானது நான்கு வகைப்படும்.

1.நீண்டகால சாதாரண கண்ணின் நீர் அழுத்தம் (Chronic Simple Glaucoma)

2.சடுதியான பாதிப்பு கண்ணின் நீர் அழுத்தம் (Acute Congestive Glaucoma)

3.பரம்பரைக் கண்ணின் நீர் அழுத்தம் (Congenital Glaucoma)

4.இரண்டாம் நிலை கண்ணின் நீர் அழுத்தம் (Secondary Glaucoma)

நீண்டகால வகை: கண்ணின் நீர் அழுத்தம் பல வருடங்களாகவும் மிகச் சாதாரணமாகத் தென்படக் கூடிய கொடிய நோய் ஆகும். இது சிறுகச் சிறுக மாதங்கள், வருடங்களில் அதிகரிக்கும். வலி, தலைவலி அல்லது கண்களைச் சுற்றி ஏதோ இருப்பது போலத் தோன்றுதல், பக்கப்பார்வை குறைதல், விளக்கு ஒளியைச் சுற்றி பல வண்ணங்கள் தோன்றுதல் என்பன இதன் அறிகுறிகளாகும்.

சடுதியான வகை: இது திடீரென வரக்கூடிய அதிக வலியைக் கொடுக்கக் கூடிய நோயாகும். திடீரென பார்வை மங்குதல், விளக்கைச் சுற்றி வானவில் போன்று காணப்படுதல், கண்வலி, தலைவலி, குமட்டல், வாந்தி போன்ற அறிகுறிகள் தென்பட்டால் வைத்தியரை நாடவும். ஏனெனில் அறிகுறி தென்பட்டு சில மணித்தியாலங்களில் பார்வையை இழக்க நேரிடலாம்.

பரம்பரை வகை: இது பிறவி நோய். குழந்தைகளுக்கு சில மாதங்களிலோ அல்லது வருடங்களிலோ ஏற்படக்கூடிய வாய்ப்பு காணப்படுகிறது. கண்ணிலுள்ள கண் முன் ரசம் வெளியேறும் துவாரங்கள் பிறவியிலேயே சரியாகச் செயற்படாமையினால் ஏற்படுகின்றது. கண்ணில் நீர் வழிதல், கண் கூசுதல், கண் எரிச்சல், குழந்தை தலையணை மீது முகத்தை அழுத்தி அழுதல், கண் அளவுக்கு மீறி பெரிதாகக் காணப்படல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் கண் மருத்துவரை அணுகுதல் வேண்டும். ஆரம்பக் கட்டத்தில் குணப்படுத்த முடியாவிட்டால் கண்ணில் குழி விழுதல் ஏற்பட்டு பார்வையில்லாமல் போகும். இதற்கு கோனியாடமி (Goniotomy) என்ற அறுவைச்சிகிச்சை செய்யப்படும்.

இரண்டாம் வகை: கண்ணின் நீர் அழுத்தம், கண்ணழற்சி போன்றவையினால் ஏற்படுகின்றது. கண் புரை நோய்க்கு சரியான சிகிச்சையளிக்காவிடின் கண்ணின் நீர் அழுத்தம் அதிகரித்து பார்வை இழக்கப்படுகின்றது.

கண்ணில் புற்று நோய் (Tumours) இருத்தல், கண்ணில் காயங்கள் ஏற்படுதல், இரத்த அழுத்தம் (Hypertension), நீரிழிவு நோய் (Diabetes), மேககிரந்தி நோய் (Syphilis) போன்றவைகளாலும் கண்ணின் நீர் அழுத்தம் அதிகரிக்கின்றது.


கண்ணின் நீர் அழுத்தத்தினால் பார்வையை இழந்த பின்னர் திரும்பிப் பெறவாய்ப்பில்லை ஆகவே ஆரம்பக் காலத்திலேயே இதனைக் கண்டுபிடித்து தகுந்த சிகிச்சைகளை மேற்கொண்டு ஒழுங்காகக் கடைப்பிடித்தல் வேண்டும். இது பற்றிய விழிப்புணர்ச்சியை மக்கள் மத்தியில் ஏற்படுத்தல் வேண்டும். நன்றாகக் குணமடைந்தவர்கள் தொடர்ந்தும் மருத்துவரின் ஆலோசனைகளைப் பெறுதல் வேண்டும்.

ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்கள் கண்ணாடி அணிந்தாலும் கண்ணின் நீர் அழுத்தம், பார்வைக்களம் முதலியவற்றை தெரிந்து கொள்ளல் வேண்டும். பெற்றோர்கள் அல்லது நெருங்கிய உறவினர்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டு வைத்தியம் செய்து கொண்டிருந்தால் அவர்களது பிள்ளைகளும் 38-40 வயதில் கண்ணின் நீர் அழுத்தம் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே அவர்களின்வாரிசுகள் 38வயதை அடையும் போது அனைத்துப் பரி சோதனைகளையும் செய்து கொள்ளல் நல்லது. பார்வை என்பது எமக்கு கிடைத்த பொக்கிஷமாகும். ஆகவே அதனைப் பேணிப் பாதுகாத்தல் அவசியமாகும்.





பஸ்னா ஹுசைன்
3ஆம் வருடம்
மொழிபெயர்ப்புத்துறை
மாணவி, யாழ்.
பல்கலைக்கழகம்

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இன்று



## வெல்லப்போவது யார்?



**(வோஷிங்டன்)**

**உலகமே அதிகம் எதிர்பார்க்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இன்று செவ்வாய்க் கிழமை நடக்கிறது. அமெரிக்காவின் 58 ஆவது ஜனாதிபதித் தேர்தல் இதுவாகும்.**

இத் தேர்தலானது அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியையும் 48 ஆவது துணை ஜனாதிபதியையும் தீர்மானிக்கும். இந்தத் தேர்தலில் அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக ஹிலாரி கிளின்டன், குடியரசுக் கட்சியின் வேட்பாளராக டொனால்ட் ட்ரம்ப் ஆகியோர் முதன்மை வேட்பாளர்களாகப் போட்டியிட்டுள்ளனர்.

அத்தோடு சுயேட்சை வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

இந்த தேர்தலில் 14 கோடியே 63 இலட்சத்து 11 ஆயிரம் பேர் வாக்களிக்க தங்களை பதிவு செய்து கொண்டுள்ளனர். அவர்களில் 69 சதவீதம் பேர் நிச்சயம் இந்த தேர்தலில் வாக்களிக்கவுள்ளதாக உறுதியளித்துள்ளனர்.

ஏற்கனவே சுமார் 4 கோடி பேர் முன்கூட்டியே வாக்களிப்பு வசதியை பயன்படுத்தி வாக்களித்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளரான ஹிலாரிக்கு ஆதரவாக பிரசாரம் செய்து வரும் தற்போதைய ஜனாதிபதி ஒபாமா, ஏற்கனவே தனது வாக்கைச் செலுத்தி விட்டார்.

இருப்பினும் அவர் யாருக்கு வாக்களித்தார் என வெளியிட மறுத்து விட்டார்.

இந்த தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டனுக்கும் (வயது 68), குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப்க்கும் (வயது - 70) இடையே கடுமையான போட்டி நிலவுகிறது.

கருத்துக்கணிப்புகள் ஹிலாரிக்கு சாதகமாக அமைந்தாலும் இருவருக்கும் இடையேயான ஆதரவு வித்தியாசம் குறைவாக இருக்கிறது. எனவே வாக்காளர்களை இறுதிக்கட்டமாக கவருவதில் இருவரும் போட்டி போட்டுக்கொண்டு, உச்சக்கட்ட பிரசாரத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

இருவரும் பரஸ்பர குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்த நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்று டிசெம்பர் நடுப்பகுதியில் நடைபெறும் தேர்தல் கல்லூரி வாக்களிப்பில் ஜனாதிபதி வெற்றியாளர் உறுதிப்படுத்தப்படும்.

2017 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி உத்தியோக பூர்வமாக பதவியேற்பார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இங்கிலாந்தின் நெருங்கிய நட்பு நாடு இந்தியா

பிரிட்டன் பிரதமர் சுட்டிக்காட்டு



இங்கிலாந்தின் மிக நெருங்கிய நட்பு நாடாக இந்தியா விளங்குவதாக அந்நாட்டுப் பிரதமர் தெரசா மே தெரிவித்துள்ளார். இங்கிலாந்து பிரதமர் தெரசா மே இந்தியாவில் 3 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இந்தியா புறப்படுவதற்கு முன்னர் தனது இந்தியப் பயணம் குறித்து, சண்டே டெலிகிராப் நாளிதழுக்கு எழுதிய கட்டுரையில் தெரசாமே கூறியிருப்பதாவது.

இந்தியா, நமது முக்கியமான, நட்பு நாடுகளில் ஒன்று. இந்தியாவுடன் நாம் கலாசார உறவுகளை பகிர்ந்து கொண்டுள்ளோம். நீண்ட கால பலன் அளிக்கக்கூடிய சீர்திருத்தங்களை பிரதமர் மோடி தலைமையில் இந்தியா செய்து வருகிறது. அந்நாட்டுடன் நமது நட்புறவை மேலும் பலப்படுத்துவதற்கு இது சரியான தருணம்.

தடையற்ற வர்த்தகம்

இங்கிலாந்தின் நலனுக்கான சில காரியங்களை செய்ய வேண்டியுள்ளது. வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேலும் அதிகரிக்க இந்தியாவிடம் வலியுறுத்தப்படும். இந்தியாவில் "ஸ்மார்ட் சிட்டி", "மேக் இன் இந்தியா" உள்ளிட்ட திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதால், அதன் இலக்கை எட்ட இங்கிலாந்து உதவும்.

ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து விலகும் பணி முடிந்த பிறகு, தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## பாகிஸ்தானுக்கு எதிராக பலோச் மக்கள் லண்டனில் ஆர்ப்பாட்டம்







(லண்டன்)

நாடுகடத்தப்பட்ட பலோச் மக்கள் லண்டனில் பாகிஸ்தானுக்கு எதிராக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பலுசிஸ்தானில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு அதிகரித்து வருகிறது. பலோச் மக்கள் மீதும் தாக்குதல் நடத்துகின்றனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல நாடுகளில் உள்ள பலோச் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## ஈராக்கில் தற்கொலை படை தாக்குதலில் 25 பேர் பலி!

ஈராக் நாட்டின் திக்ரித் மற்றும் சமரா ஆகிய இரண்டு நகரங்களில் நடத்தப்பட்ட தற் கொலைப்படைத் தாக்குதலில் 25 பேர் பலியாகினர். 50 பேர் காயமடைந்தனர்.





ஈராக்கின் மொசூல் நகரை மீட்பதற்காக அரசு படைகளுக்கும் அதைத் தக்கவைப்பதற்காக ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும் இடையே கடுமையான சண்டை நடந்து வருகிறது.

கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக ஈராக் அரசு படைகள் தீவிரவாதிகளுடன் போரிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் ஈராக்கில் உள்ள திக்ரித் மற்றும் சமரா நகரங்களில் நேற்று முன்தினம் தற்கொலைப்படை தாக்குதல் நடத்தப்பட்டது.

திக்ரித் நகரின் நுழைவு வாயில் அருகே வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட வாகனத்தை வெடிக்க செய்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் 15 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 33 பேர் காயமடைந்தனர்.

இதேபோல் சமரா நகரில் கார் பார்க்கிங்கில் நடத்தப்பட்ட தற்கொலை படை தாக்குதலில் 10 பேர் உயிரிழந்தனர்.

25 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த தாக்குதல்களுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பங்களாதேஷத்தில் இந்துக்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் கைது





பங்களாதேஷத்தில் இந்துக்கள் மீது பல இடங்களில் தாக்குதல்கள் நடைபெற்றன. இந்துக்களை தாக்கியதாக 10இற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து பங்காளதேச இந்து, புத்த, கிறிஸ்தவ ஒருங்கிணைப்பு சபை பொதுச்செயலாளர் ராணா தாஸ்குப்தா தெரிவிக்கையில், இதுவரை 100-இற்கும் மேற்பட்ட இந்துக்களின் வீடுகளும், 17 இந்துக் கோவில்களும் சூறையாடப்பட்டு உள்ளன. போராட்டக்காரர்களின் நோக்கம் சிறுபான்மை மக்களை பங்களாதேஷத்திலிருந்து வெளியேற்றி விட்டு அவர்களின் சொத்துகளை அபகரிப்பதே ஆகும் என அவர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




# பனை மரமும் பச்சைக் கிளியும்

...ஒருநாள் கிளி, பனை மரத்துக்குத் திரும்ப வெகு நேரமாகி விட்டது. வெளிச்சம் மங்கி இரவாகத் தொடங்கியது.

கிளியைக் காணாத பனை மரத்துக்கு அழுகை அழுகையாய் வந்தது.

வெகுநேரம் கழித்து வந்த கிளியைப் பார்த்த பின்புதான் வாடியிருந்த அதன் முகம் மலர்ந்தது.

“ஏன் இவ்வளவு நேரம்?” என கேட்டது பனைமரம்.

“உனக்காக அத்திப்பழங்களைக் கொண்டுவர வெகு தூரம் போய்விட்டேன். அதனால் நேரமாகிவிட்டது” என்றது கிளி.

“இனிமேல் இப்படியெல்லாம் செய்யக்கூடாது” என்ற பனைமரம், கிளி கொடுத்த அத்திப்பழங்களை ஆவலோடு உண்டது.



“நீ வரவில்லை என்றதும் பதறிப்போய் விட்டேன் என்றது” பனை.

மற்றொரு நாள், ஆலமரத்தின் கனிகளைக் கிளி ஆசையோடு கொத்தித் தின்று கொண்டிருந்தபோது மேகம் சூழ்ந்தது. இடி இடித்தது. மின்னல் மின்னியது. மழை வரும் போலிருந்தது.

அதற்கு முன் பனை நண்பனிடம் சென்றுவிட வேண்டும் என்ற முடிவில் கிளி வேகமாகக் கரிசல் காட்டை நோக்கிப் பறந்தது.

அப்போது சற்றுத் தொலைவில் ஒரு பெரிய இடி விழும் சத்தம் கேட்டது. இடி இடித்த சத்தத்தில் பயந்துபோன கிளி மேலும் வேகமாகப் பறந்தது.

பனைமரத்தை நெருங்கிக் கொண்டிருந்த நேரத்தில், இடிவிழுந்து பனைமரம் தீயில் எரிந்து கொண்டிருந்த காட்சியைக் கண்டது. “ஐயோ அம்மா வலிக்கிறதே” என்று அலறிக் கொண்டிருந்தது பனைமரம்.

பனை மரத்தின் அழுகுரலைக் கேட்டதும், அதிர்ச்சியில் உறைந்துபோன பச்சைக்கிளி, பனைமரத்தை நெருங்கி, தீயை அணைக்க முயன்றது.

“கிளியே வேண்டாம். தீயை அணைக்க முயலாதே. தீ உன்னையும் சுட்டுவிடும். தள்ளிப் போ” என எச்சரித்தது பனைமரம். இருந்தாலும் கிளி தீயை அணைக்க முயன்றது.

அதனால் முடியவில்லை. கிளியின் கால் ஒன்று தீயில் கருகிப் போனது. கிளி நொண்டிக் கிளி ஆனது.

“கிளியே, என் விதி அவ்வளவுதான். நான் மடிந்து போவதைப் பற்றிக் கவலைப் படவில்லை. பாசக்கார கிளியான உன்னைவிட்டுப் பிரிந்து போவதை நினைத்துத் தான் வேதனைப்படுகிறேன்” என்ற பனைமரம் கொஞ்சம், கொஞ்சமாக உயிரைவிட்டது. கிளி தேம்பித் தேம்பி அழுதது. அதைத் தேற்ற அங்கு யாரும் இல்லை. (தொடரும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

11.2016
08

- 1520 - டென்மார்க் படைகள் சுவீடனை முற்றுகையிட்டன. சுமார் 100 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1811 - இலங்கையில் இயற்றப்பட்ட புதிய நீதிமன்ற சட்டப்படி மேல் நீதிமன்றம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஒன்று கொழும்பில் பிரதம நீதியரசரின் நீதிமன்றமும், Puisne Justice என அழைக்கப்படும் நீதிமன்றம் யாழ்ப்பாணத்திலும் அமைக்கப்பட்டன. கிரிமினல் வழக்குகளுக்கு ஜூரி முறையும் அமுலுக்கு வந்தது.
- 1889 - மொன்டானா ஐக்கிய அமெரிக்காவின் 41வது மாநிலமாக இணைந்தது.
- 1895 - எதிர்மின் கதிர்களைச் சோதனையிடும் போது வில்ஹெம் ரொண்ட்ஜென் எக்ஸ் கதிர்களைக் கண்டுபிடித்தார்.
- 1917 - ரஷ்யாவில் அக்டோபர் புரட்சியை அடுத்து லெனின், ட்ரொட்ஸ்கி, ஸ்டாலின் ஆகியோருக்கு முழு அதிகாரமும் தரப்பட்டது.
- 1923 - மியூனிக் நகரில் ஹிட்லர் தலைமையில் நாசிகள் ஜேர்மனிய அரசைக் கவிழ்க்கும் முயற்சி தோல்வியில் முடிந்தது.
- 1938 - பாரிஸ் நகரில் ஜேர்மனிய தூதுவர் கொலை செய்யப்பட்டதை அடுத்து ஜேர்மனியிலும் அவுஸ்திரேலியாவிலும் யூதர்களுக்கு எதிராக வன்முறைகள் கிளம்பின.
- 1942 - மேற்கு உக்ரேனின் தெர்னோப்பில் நகரில் நாசி ஜேர்மனியினர் 2,400 யூதர்களை பெல்செக் நகரில் இருந்த வதை முகாமுக்கு அனுப்பினர்.
- 1950 - கொரியப் போர்: ஐக்கிய அமெரிக்க வான்படையினர் வட கொரிய மிக் விமானங்கள் இரண்டை சுட்டு வீழ்த்தினர்.
- 1965 - பிரித்தானிய இந்தியப் பெருங்கடல் மண்டலம் அமைக்கப்பட்டது.
- 1977 - கி.மு 1ம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க மன்னன் இரண்டாம் பிலிப்பு என்பவனின் சமாதி மனோலிஸ் அண்ட் ரோனிக்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1987 - வடக்கு அயர்லாந்தில் பிரித்தானிய இராணுவ நினைவு நிகழ்வொன்றில் ஐரியக் குடியரசு இராணுவத்தினரின் குண்டு வெடித்ததில் 12 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - வாகரை குண்டுத்தாக்குதல்: மட்டக்களப்பு வாகரையில் இலங்கை இராணுவத்தினர் ஏவிய பல்குழல் எறிகணை வீச்சுத் தாக்குதலில் 40 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 125-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.
- 2006 - பாகிஸ்தானில் தர்காய் என்ற இடத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 45 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

- 1656 - எட்மண்ட் ஹேலி, பிரித்தானிய வானியல் ஆராய்ச்சியாளர். (இ. 1742)
- 1680 - வீரமா முனிவர், இத்தாலியத் தமிழறிஞர். (இ. 1742)
- 1893 - துவாரம் வேங்கடசுவாமி நாயுடு கருநாடக இசை வயலின் வாத்தியக் கலைஞர். (இ: ஜ[1964])
- 1900 - ந. பிச்சமூர்த்தி, தமிழ் இலக்கிய முன்னோடிகளுள் ஒருவர். (இ. 1976)
- 1902 - ஜி. ஜி. பொன்னம்பலம், இலங்கையின் தமிழ் அரசியல்வாதியும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரும். (இ. 1977)
- 1923 - ஜாக் கில்பி, அமெரிக்க மின்னியல் பொறியாளர். (இ. 2005)
- 1927 - லால் கிருஷ்ண அத்வானி, இந்திய அரசியல்வாதி.
- 1984 - நயன்தாரா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை.

### இறப்புகள்

- 1958 - சி. கணேசையர், ஈழத்துத் தமிழறிஞர். (பி. 1878)
- 2000 - சோ. சிவபாதசுந்தரம், வானொலி ஒலிபரப்பாளர், பிபிசி தமிழ் ஒலிபரப்புக்கு தமிழோசை எனப் பெயரிட்டவர் . (பி. 1912)
- 2014 - வி. சிவசாமி, ஈழத்துத் தமிழறிஞர், பேராசிரியர். (பி. 1933)
- 2015 - மாதுலுவாவே சோபித்த தேரர், இலங்கைப் பௌத்த பிக்கு, மனித உரிமை செயற்பாட்டளர். (பி. 1942)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 70 | 100 | 60 | 100 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 100 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 30 | 60 | 50 | 60 | 60 |
| தக்காளி | 80 | 100 | 45 | 80 | 60 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 40 | 40 | 90 | 60 | 60 |
| கோவா | 80 | 80 | 45 | 80 | 80 | 100 | 80 |
| கரட் | 100 | 120 | 80 | 120 | 80 | 120 | 80 |
| பூசணி | 50 | 40 | 30 | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 60 | 30 | 60 | 40 | 60 | 70 |
| வாழைக்காய் | 50 | 80 | 40 | 40 | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 100 | 100 | 120 | 140 | 90 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 75 | 85 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 180 | 160 | 150 | 160 | 120 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 120 | 80 | 80 | 100 | 100 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 70 | 60 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 120 | 100 | 80 | 160 | 90 | 120 | 130 |
| லீக்ஸ் | 80 | 120 | 90 | 120 | 120 | 100 | 120 |
| பீற்றூட் | 40 | 80 | 40 | 40 | 30 | 80 | 60 |
| கறிமிளகாய் | 150 | 140 | 100 | 120 | 100 | 150 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 20 | 60 | 60 | 50 | 80 |
| போஞ்சி | 180 | 200 | 170 | 160 | 160 | 200 | 160 |
| கத்தரிதும்பளா | 50 | 50 | 30 | 60 | 60 | 50 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 30 | 30 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 550 | 600 | 500 | 600 | 550 | 550 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35-45 | 20-40 | 45 | 35 | 50 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — | 180 |
| வெங்காயப்பூ | — | — | — | 160 | — | — | 200 |
| முள்ளங்கி | 80 | 60 | 35 | 40 | — | 20 | 70 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 50 | 40 | 20 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 70 | — | — | — | — | 50 | — |

# இந்திய-இலங்கை வர்த்தக தொழிற்றுறை அபிவிருத்தி திட்டம் அங்குரார்ப்பணம்




(கொழும்பு)

**இந்திய-இலங்கை வர்த்தக தொழிற்றுறை அபிவிருத்தித் திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு - ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்றது.**





முன்னாள் இந்திய அமைச்சரும் இந்து - ஸ்ரீலங்கா சேம்பர் அமைப்பின் இணைத் தலைவருமான கே.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு இந்தியாவில் இருந்து வந்த பெரும் முதலீட்டாளர்கள், தொழிலதிபர்கள் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் சகல துறையையும் மேம்படுத்தல், வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குதல் அதிலும் சுற்றுலாத்துறை, பண்ணை வளர்ப்பு, மீன் வளப்பு, ஏற்றுமதி,இறக்குமதி செய்தல், அத்துடன் தகவல் தொழில்நுட்பம் போன்றவை நடைமுறைப்படுத்தப்பட்டு, இதன்மூலம்பலருக்கு வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுப்பதுடன் மாகாணத்துக்கும் பெரும் முதலீட்டையும் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல் என்பன இதன் முக்கிய நோக்கமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே. சின்ஹா கலந்து சிறப்பித்ததுடன் அமைச்சர்களான சரத் அமுனுகம, ரவூப் ஹக்கீம் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சரும் இந்து - ஸ்ரீலங்கா வர்த்தக தொழில்நுட்ப அபிவிருத்தி மையத்தின் துணைத்தலைவருமான ஹாபிஸ் நசீர் அஹமட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் இவ்வமைப்பின் துணைத் தலைவர்களில் ஒருவரான ஓய்வு பெற்ற இந்திய இராணுவ அதிகாரி பி.கே.லும்பா இ நரேஸ் பானா ஆகியோருடன் அதிதிகள், தொழிலதிபர்கள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# சுதந்திரக் கட்சி உறுப்புரிமை நீக்கத்தை மீளாய்வு செய்யக் கோருகிறார் பீரிஸ்

தனது உறுப்புரிமையைப் பறிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுத்த முடிவை மீளாய்வு செய்ய வேண்டும் என்று, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஆதரவு கூட்டு எதிரணியுடன் இணைந்து செயற்படும், ஜிஎல்.பீரிஸ், அந்த அணியினரால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து, சிறிலங்கா



சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையை பீரிஸ் இழந்து விட்டார் என்று, கட்சியின் பொதுச்செயலர் துமிந்த திசாநாயக்க நேற்று முன்தினம் அறிவித்தார்.

இதுகுறித்துக்கருத்து வெளியிட்டுள்ள, பேராசிரியர் ஜிஎல். பீரிஸ், பொது எதிரணியின் வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன போட்டியிட்ட போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து மைத்திரிபால சிறிசேனவும் இடைநிறுத்தப்பட்டார்.

ஆனால் அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அந்த முடிவை இரத்துச் செய்தது. இந்தப் பின்னணியைக் கொண்டு எனது நீக்கத்தையும் ஆராய வேண்டும்.

ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உரிமைக்கு நான் சவால் விடுக்கப் போவதில்லை.

ஒழுங்கை மீறிய இரண்டு உறுப்பினர்களுக்கு எதிரான இரண்டு வெவ்வேறு நடவடிக்கைகளை எடுக்க முடியாது.

ஒழுக்காற்று நடவடிக்கை விடயத்தில், இரட்டை நிலைப்பாட்டை சுதந்திரக் கட்சித் தலைமை கடைப்பிடிக்கக் கூடாது.எனது உறுப்புரிமை நீக்கத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீளாய்வு செய்யும் என்று நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# புதிய கட்சியின் பயணத்தை தடுக்க முடியாது

## பசில் ராஜபக்ஷ கூறுகிறார்



உறுப்புரிமை இரத்து செய்தல் மற்றும் ஏனைய அடக்கு முறைகளின் ஊடாக புதிய கட்சியின் பயணத்தை நிறுத்த முடியாது என முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் சுந்திரக் கட்சி உறுப்புரிமை இரத்து செய்யப்பட்டமை குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய கட்சியில் இணைந்து கொள்ளும் உறுப்பினர்கள் முன்னையகட்சிகளது உறுப்புரிமை இரத்து செய்தல் மற்றும் ஏனைய அடக்கு முறைகளின் ஊடாக புதிய கட்சியின் பயணத்தை நிறுத்த முடியாது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இணைந்து கொள்ள விரும்பும் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களாவர். புதிய கட்சியில் அங்கத்துவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பான உடனேயே இவர்கள் கட்சியில் இணைந்துகொள்வார்கள்.

புதிய கட்சி அமைப்பது தொடர்பில் மாவட்ட ரீதியிலான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகளுடன் பத்து இலட்சம் உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. புதிய கட்சியில் அங்கத்துவம் பெற்றுக்கொள்வோரை சிறையில் அடைப்பதாக ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஒரே தடவையில் பத்து இலட்சம் பேரை கைது செய்ய நேரிடும் என பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.(இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## பொறுப்புக்களைத் தட்டிக்கழிக்கலாமா?

அதெல்லாம் மாட்டேன்!

ஐயையோ! என்னால் முடியாதுப்பா!

நானா? வேற ஆளைப் பாருங்க !

இப்படிச் சொல்லிவிட்டு ஒதுங்கிக் கொள்கிறவர்கள் என்னவோ ஒரு புலியிடமிருந்து தப்பிய மாதிரிப் பெருமூச்சு ஒன்றை விடுவார்கள். இப்படித் தாமரை இலை மேல் தண்ணீராய் இருப்பவர்கள் வாழ்க்கையில் வெற்றியாளர்களாக விளங்குவது கடினம்.

ஐயோ! எனக்கு அதைப்பற்றி ஒன்றுமே தெரியாது; நான் ஏன் அதில் போய் தலையைக் கொடுக்க வேண்டும்? என்று வியாக்கியானம் தருவார்கள். இவர்கள் ஒன்றை ஏனோ மறந்து விடுகிறார்கள். அதாவது தெரியாத ஒன்றைத் தெரிந்து கொள்வதன் மூலம் தான் நாம் வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களை உணர முடியும்.

ஒருவர் வீட்டில் திருமணம். வாசலில் நின்று அனைவரையும் வரவேற்க அந்த வீட்டில் மூத்த பையன் விரும்புகிறான். வீட்டில் இருப்பவர்களோ , நீ பந்தி விசாரித்து சமையல் ஆவதை மேற்பார்வை செய் என்கிறார்கள். அதெல்லாம் எனக்குப் பழக்கம் இல்லை என்று ஒதுங்குவது புத்திசாலித்தனமாகாது. சரி, ஒரு புதிய பொறுப்பை ஏற்றுச் செய்து அதைப்பற்றி நன்கு தெரிந்து கொள்வோமே என்று ஏன் இவருக்கு எண்ணத் தோன்றுவதில்லை?

பிறக்கும் போது அத்துணை பேரும் எல்லாக் கலைகளையும் தெரிந்து வைத்துக் கொண்டேவா பிறக்கிறோம்? வாய்ப்பும் சந்தர்ப்பங்களும் அடையும் போதுதானே கற்கிறோம். எந்த ஒரு புதிய அனுபவமற்ற பொறுப்பையும் ஏற்கத் தவிர்ப்பது, ஒரு குழந்தை நான் நடந்தால் விழுந்து விடுவேன் என்று நடக்கக் கற்றுக் கொள்வதைத் தவிர்ப்பதற்கு ஒப்பானது.

சிலர் அவதூறுகளுக்கும் கேலிகளுக்கும் பயந்து பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்கிறார்கள். சிலர் என்னத்திற்கு வம்பு? என்று ஒதுங்குகிறார்கள். இப்படி ஒதுங்குவதைப் பற்றி ஆற அமரச் சிந்தித்துப் பார்த்தால் அதில் ஒருவித சோம்பல்தனம் ஒளிந்து கொண்டிருப்பது தெரியும். இதை விரட்டி விட்டால் எதையும் எளிதில் தட்டிக் கழிக்கத் தோன்றாது.

பொறுப்புக்களைத் தட்டிக்கழிப்பது என்பது ஒரு பெரிய அயோக்கியத்தனம். ஊர் கூடி இழுத்தால்தான் தேர் நகரும். நாம் இருக்கும் வட்டத்தில் எந்த ஒரு பெரிய செயலிலும் நம் பங்கும் இருக்க வேண்டும். அப்படி அமைத்துக் கொள்ளாவிட்டால் அது நம் வட்டத்திற்கு நாம் செய்யும் துரோகம் ஆகும்.

பெரும்பாலான மனிதர்களைப் போல நாமும் சராசரி வாழ்வை நடத்துவதில் என்ன சுவை இருக்கிறது? இலைகள் நடுவே மலராக, நட்சத்திரங்கள் நடுவே நிலவாக நாம் தெரிய வேண்டுமானால் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டுதான் தீர வேண்டும். சந்தர்ப்பங்கள் வாய்த்தால் வாழ்வில் நாம் தயாராவதற்கு இது ஓர் அரிய சந்தர்ப்பம் என்றெண்ணி அவற்றை மகிழ்வுடன் வரவேற்க வேண்டும். நம் திறமைகளை வெளிப்படுத்தவும் அல்லது தீட்டிக் கொள்ளவும் இது ஒரு நல்ல வாய்ப்பு என்று நம்பி முன்வர வேண்டும்.

**லேனாதமிழ்வாணன்**

# க.பொ.த. (சா/த) பரீட்சை- 2016

## மாதிரி வினாத்தாள்

விஞ்ஞானம்
பகுதி -II

நேரம்:-
3 மணித்தியாலம்

### (விஞ்ஞானம் பகுதி II இன் மிகுதி)

(B) உலோகம் P, Q, R ஆகியவற்றின் தாக்கவீதத்தை ஒப்பிடுவதற்கு ஆய்வுகூடத்தில் செய்யப்பட்ட பரிசோதனை விளைவுகளைக் காட்டும் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. (தாக்கம் நடைபெற்றதைக் காட்ட ✓ என்னும் குறியீடும் தாக்கம் நடைபெறாததைக் காட்ட ✗ என்னும் குறியீடும் இடப்பட்டுள்ளது.

| உலோகம் | சுடுநீருடன் | கொதிநீராவியுடன் | ஐதான அமிலத்துடன் |
|---|---|---|---|
| P | × | √ | √ |
| Q | × | × | × |
| R | √ | √ | √ |

(i) P, Q, R ஆகிய உலோகங்களை அவற்றின் தாக்குதிறனுக்கு ஏற்ப இறங்கு வரிசைப்படுத்துக.

..............................................................................

(ii) P, Q, R என்பவற்றுள் தொழிற்பாட்டுத் தொடரில் ஐதரசனுக்கு கீழாக அமைந்துள்ள உலோகம் எது?

..............................................................................


(iii) P, Q, R ஆகிய உலோகங்களில் இரும்புக்கு கதோட்டுப் பாதுகாப்பு அளிக்க உதவும் உலோகம் எது?

..............................................................................

* மின்னிரசாயனக் கலம் கீழே தரப்பட்டுள்ளது.

(iv) P, R ஆகியவற்றுள் A மின்வாயாக எவ்வுலோகம் பயன்படுத்தப்படுகின்றது?

A ..............................................





(V) $2H^+(aq) + H_2(g)$ என்னும் அரைத்தாக்கம் நிகழும் மின்வாய் எது?

..............................................................................

(vi) ஒட்சியேற்றத் தாக்கம் எந்த மின்வாய் அருகில் நிகழ்கின்றது?

..............................................................................

(C) உருவில் காட்டப்பட்டுள்ள உபகரண அமைப்பைப் பயன்படுத்தி பித்தளைக் கரண்டியின் மீது செம்பு முலாமிடுவதற்கு மாணவன் ஒருவனுக்குத் தேவைப்பட்டது.





(i) இங்கு X ஆல் பயன்படுத்தக் கூடிய கரைசல் எது?

..............................................................................

(ii) P, Q ஆகியவற்றுக்கு இடையில் மின்கலமொன்றை எவ்வாறு தொடுக்கலாம் என்பதை உருவில் வரைந்து காட்டுக.


4. (A) P, Q, R, S ஆகிய கம்பிகளைப் பயன்படுத்தி தடையின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணியை அறிந்துகொள்ள அமைக்கப்பட்ட அமைப்பை உருவில் காணலாம். இங்கு Q, R, S கம்பிகளின் பரப்பளவு சமனாகும்.





(i) தொடுகைச் சாவி P, Q, R, S ஆகிய கம்பிகளின் முனைகள் மீது தனித்தனியாகத் தொடுகையுறச் செய்தபோது மின்குமிழின் சார்பளவான ஒளிர்வையும் அதன் மூலம் தடையின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணியையும் அட்டவணையில் முழுமையாகக் குறிப்பிட முடியாமல் இருந்தது. அவ்வட்டவணையைப் பூர்த்திசெய்க.

| பயன்படுத்திய கம்பிச் சோடிகள் | மின்குமிழின் பிரகாசம் கூடுவதற்கு தொடுகையுற வேண்டிய கம்பி | செல்வாக்குச் செலுத்தும் காரணி |
|---|---|---|
| P உம் Q உம் | P | ................................ |
| ...... உம் ...... உம் | .......... | கம்பியின் நீளம் |
| Q உம் S உம் | .......... | ................................ |

(ii) கீழே தரப்பட்டுள்ள உருக்கள் தடை R கொண்ட மின் கடத்தும் கம்பிகள் சில தொடுக்கப்பட்டுள்ள இரண்டு சந்தர்ப்பங்களைக் காட்டுகின்றன. இவ் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சமானத் தடையின் பெறுமானத்தைக் குறிப்பிடுக.

(a) 

..............


(b) 

..............

(B) எளிய மின்மோட்டரின் அமைப்பு ஒன்று உருவில் காணப்படுகின்றது.

(i) இங்கு காந்தப்புலம் P இலிருந்து Q இற்கா அல்லது Q இலிருந்து P இற்கா எனக் குறிப்பிடுக.

..............................................................................




(ii) R, T எழுத்துக்களால் குறிக்கப்படும் பகுதிகளைப் பெயரிடுக.

R - ..............................................

T - ..............................................

(iii) பகுதி R இரண்டாகப் பிரிக்கப்பட்டிருப்பதன் தேவையைக் குறிப்பிடுக.

..............................................................................

(iv) இம் மோட்டருக்கு மின்னை வழங்கும் போது அது x, y ஆகியவற்றில் எத்திசையில் சுழல்கின்றது?

..............................................................................

(v) மோட்டருக்கு வழங்கப்படும் மின்னோட்டத்தின் திசை மாற்றப்படும்போது மோட்டரின் சுழற்சித் திசைக்கு யாது நிகழும்?

..............................................................................

(vi) AB, BC, CD ஆகிய பகுதிகளைக் கருதும்போது அது அமைந்துள்ள அமைவிற்கேற்ப எப்பகுதியின் மீது விசை தொழிற்படாது எனக் குறிப்பிடுக.

..............................................................................


(vii) அதற்கான காரணத்தையும் குறிப்பிடுக.

..............................................................................

### பகுதி B கட்டுரை வினாக்கள்

மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.

5. (A) நரம்புத் தொகுதியுடன் தொடர்பான பகுதிகள் சில உருவில் காட்டப்பட்டுள்ளன.




(i) நரம்புத் தொகுதியின் தொழிற்பாட்டலகு எது?

மேற்குறித்த வரிப்படங்களுக்குரிய ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(ii) X, Y, Z என்பவற்றுள் B யாகத் தொழிற்படும் கட்டமைப்பைப் பெயரிடுக.

(iii) வாங்கியிலிருந்து மைய நரம்புத் தொகுதிக்கு கணத்தாக்கங்களை கடத்தும் நரம்புக்கலம் நியுரோன் யாது?


(B) (i) கீழே தரப்பட்டுள்ள உறுப்புகளில் காணப்படும் தசையிழைய வகைகள் தொடர்பான பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக. (உரிய இயல்புகள் காணப்படின் ✓ என்னும் அடையாளத்தையும் காணப்படாவின் ✗ என்னும் அடையாளத்தையும் இடுக.

| உறுப்பு | தனிக்கரு உள்ள கலம் | வரி கொண்டது. | இச்சைவழி இயங்குவது | கிளை கொண்டது. |
|---|---|---|---|---|
| இதயம் | | | | |
| இரைப்பை | | | | |

(ii) களைப்படையாத தசையிழையம் மேலே தரப்பட்ட எவ்வுறுப்பில் உள்ளது?

(iii) இரைப்பையில் உள்ள தசையிழைய வகை காணப்படும் வேறு உறுப்பைப் பெயரிடுக.

(C) எமது உடலின் குருதியில் குளுக்கோசு மட்டத்தை சீராக்குவதைக் காட்டும் குறிப்பு கீழே தரப்பட்டுள்ளது.




(i) (a) குறிப்பு A இல் குறிப்பிடப்பட்டுள்ள x, y ஆகிய ஓமோன்களைப் பெயரிடுக.

(b) x,y ஓமோன்களைச் சுரக்கும் சுரப்பிகளையும் அதன் அமைவிடத்தையும்எழுதுக.

(c) ஓமோன் x சுரப்பது குறைவடைவதால் ஏற்படும் நோய் நிலைமை யாது?

(d) குருதியில் குளுக்கோசு மட்டம் சீராக்கலில் x,y ஆகிய ஓமோன்களின் தொழில்களைத் தனித்தனியாக எழுதுக.

(ii) (a) பின்வரும் சந்தர்ப்பங்களில் ADH ஓமோனின் அளவு கூடுமா அல்லது குறையுமா எனக் குறிப்பிடுக.

குருதியில் நீர்ச்சதவீதம் அதிகரிக்கும்போது

குருதியில் நீர்ச்சதவீதம் குறையும்போது

(b) உடலில் நீரின் அளவு குறையும்போது சிறுநீரகத்தில் எச் செயன்முறை மூலம் அது சீராக்கப்படுகிறது எனக் குறிப்பிடுக.

(c) மேலே (ii) (b) இல் குறிப்பிட்ட செயன்முறை அதிகளவில் நடைபெற்றால் சிறுநீரகத்தின் இடுப்பில் அல்லது சிறுநீர்ப்பையில் ஏற்படும் குறைபாடொன்றைக் குறிப்பிடுக.

6. (A) பாடசாலை ஆய்வுகூடத்தில் மற்றும் சமையலறையில் வெவ்வேறு தேவைகளுக்கு அமிலம் பயன்படுத்தப்படுகிறது.

(i) பாடசாலை ஆய்வுகூடத்தில் சாதாரணமாக பெருமளவில் பயன்படுத்தப்படும் வன்னமிலமொன்றினதும் சமையலறையில் பயன்படுத்தப்படும் அமிலமொன்றினதும் இரசாயனப் பெயர்களை முறையே எழுதுக.

(ii) செப்புசல்பேற்று, பொற்றாசியம் பரமங்கனேற்று, ஐதரோகுளோரிக்கமிலம், சோடியமைதரொட்சைட்டு என்பனவற்றின் நீர்க்கரைசல்கள் அடங்கிய போத்தல்களில் பெயர்ச் சுட்டிகள் காணப்படவில்லை. இக்கரைசல்களுக்கு மக்னீசிய நாடாத் துண்டுகளை இட்டபோது பெறப்பட்ட அவதானங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## (விஞ்ஞானம் பகுதி II இன் மிகுதி)

| கரைசல் | கரைசலின் நிறம் | மக்னீசிய உலோகத்துடன் காட்டும் தாக்கம் | மக்னீசியத்துடன் தாக்கமடையும்போது வாயுக்கள் வெளியேறுமா இல்லையா |
|---|---|---|---|
| (a) | நீலம் | நடைபெறும் | வெளியேறும் |
| ஐதான ஐதரோக் குளோரிக்கமிலம் | நிறமற்றது | நடைபெறும் | (b) |
| (c) | (d) | இல்லை | இல்லை |
| சோடியம் ஐதரொட்சைட்டு | நிறமற்றது | (e) | இல்லை |

மேற்குறித்த அட்டவணையின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு (a), (b), (c), (d), (e) ஆகியவற்றுக்குரிய விடையை ஒழுங்கு முறையில் எழுதுக.

(iii) ஐதான ஐதரோக்குளோரிக்கமிலக் கரைசல் மக்னீசியம் உலோகத்துடன் காட்டும் தாக்கத்திற்கான சமப்படுத்தப்பட்ட இரசாயன சமன்பாட்டை எழுதுக.

(iv) கரைசல்கள் சிலவற்றின் pH பெறுமானம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| கரைசல் | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| pH பெறுமானம் | 7.5 | 6 | 1.5 | 3.5 | 10 |

(a) இக்கரைசல்களில் அமிலத்தன்மை கூடிய கரைசல் எது?

(b) இக்கரைசல்களில் எவ்வகையான பாசிச்சாயத்தாள் இடப்படும்போது நிறமாற்றத்தை எதிர்பார்க்க முடியும்?

(B) சில மூலகங்களின் அணு எண்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அதனை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க. பயன்படுத்தப்பட்ட குறியீடுகள் நியமக் குறியீடு அல்ல. அவகாதரோவின் மாறிலி $= 6.022 \times 10^{23}$

| மூலகம் | A | B | C | D | E | F | G |
|---|---|---|---|---|---|---|---|
| அணு எண் | 3 | 6 | 8 | 10 | 11 | 12 | 17 |

(i) மேலே தரப்பட்டுள்ள மூலகங்களில் ஒரே கூட்டத்தைச் சேர்ந்த மூலகங்கள் எவை?

(ii) ஆவர்த்தன அட்டவணையில் இரண்டாவது ஆவர்த்தனத்தில் நான்காம் கூட்ட மூலகம் எது?

(iii) எந்தவித இரசாயனத் தாக்கத்திலும் ஈடுபடாத மூலகம் எது?

(iv) மேலே வினா (iii) இல் குறிப்பிடப்பட்ட மூலகத்தின் இலத்திரன் நிலையமைப்பை எழுதி. இம்மூலகம் இரசாயன தாக்கத்தில் ஈடுபடாமைக்கான காரணத்தை விளக்குக.


(v) குளிர்நீருடன் வேகமாகத் தாக்கமடையும் மூலகம் எது?

(vi) மூலகம் G இன் அணுக்கள் இரண்டு சேர்ந்து மூலக்கூறை உருவாக்கும். அம் மூலக்கூறின் லூயிஸ் கட்டமைப்பை எழுதுக.

(vii) F, G சேர்ந்து உருவாகும் சேர்வையின் மூலக்கூற்றுச் சூத்திரத்தை எழுதுக.

(viii) மேலே அணு C இல் இரண்டு சேர்ந்து $C_2$ மூலக்கூறை உருவாக்கும் $C_2$ இன் சார் அணுத்திணிவு 32 ஆகும். 16g, $C_2$ இல் உள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கையைக் கணிக்க.

**7. (A)** உருவில் திண்மமெழுகு வெப்பமேற்றப்படும் சந்தர்ப்பத்தையும் அதன்போது நேரத்துடன் வெப்பநிலை வேறுபடும் முறையைக் காட்டும் வரைபையும் காணலாம்.




(i) பின்வரும் கால இடைவெளிகளுள் மெழுகு காணப்படும் பௌதிக நிலைகளை ஒழுங்குமுறையில் எழுதுக.

- A, B யிற்கிடையில்
- B, C யிற்கிடையில்
- C, D யிற்கிடையில்


(ii) மெழுகின் உருகுநிலையை மேலே தரப்பட்டுள்ள வரைபிலிருந்து எவ்வாறு தீர்மானிப்பீர்?

(iii) மெழுகிற்கு தொடர்ச்சியாக வெப்பத்தை வழங்கினாலும் B, C யிற்கிடையில் வெப்பநிலையில் மாற்றம் ஏற்படுவதில்லை. இக்காலப்பகுதியில் வழங்கப்படும் வெப்பம் எப்பெயர்கொண்டு அழைக்கப்படும்.?


(iv) D ஆனது மெழுகின் கொதிநிலை எனின். சந்தர்ப்பம் D இற்கு பிறகு வெப்பமாக்கியினால் வெப்பத்தை மேலும் வழங்கும்போது வெப்பநிலை வேறுபடும் முறையை மேற்குறித்த வரைபை விடைத்தாளில் பிரதிசெய்து வரைந்து காட்டுக.

(v) இச் சோதனைக்காகப் பயன்படுத்தப்படும் மெழுகின் திணிவு 200g ஆகும். அதன் வெப்பநிலையை 40 °C இலிருந்து 50 °C ஆக மாற்றுவதற்கு வழங்கப்பட வேண்டிய வெப்பத்தின் அளவு யாது? (மெழுகின் த.வெ.கொ. $2800 \ J \ kg^{-1} \ K^{-1}$) (50°< B)

(B) விரிவு வில்லை. ஒருங்கு வில்லை ஆகிய இரண்டு வில்லைகளில் பொருளொன்றின் விம்பங்கள் தோன்றும் விதம் உருவில் காணப்படுகின்றது.




வில்லை A




வில்லை B

(i) A, B என்பவற்றுள் ஒருங்கு வில்லை எது?

(ii) (a) விம்பம் $I_1$, $I_2$ ஆகியவை உண்மை விம்பமா? மாயவிம்பமா? எனக் குறிப்பிடுக.


(b) உண்மை விம்பம், மாய விம்பம் என்பதை நீர் எவ்விடயத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிப்பீர்.

(iii) A வகை வில்லையில் மேற்குறித்த உருவில் காணப்படும் முறையில் விம்பம் தோன்றுவதற்கு எவ்விடங்களுக்கு இடையில் பொருள் வைக்கப்பட்டுள்ளது?

(iv) A வகை வில்லையில் தோன்றும் விம்பத்தையொத்த விம்பம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பமொன்றினைக் குறிப்பிடுக.

(v) பொருள் $O_1$ ஐ X புள்ளியில் வைக்கும்போது தோன்றும் விம்பத்தின் இயல்புகள் இரண்டை எழுதுக.

(C) இரண்டு முறைகளில் துணிக்கைகள் பொறிமுறை யலையில் அதிர்வடைவதை உரு காட்டுகின்றது.





(i) C, D திசையில் துணிக்கைகள் அதிர்வடையும் பொறிமுறையலை எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?

(ii) A,B திசையில் துணிக்கைகள் அதிர்வடையும் சந்தர்ப்பமொன்றைக் குறிப்பிடுக.

(iii) ஒலியலையானது எம்முறையான துணிக்கையின் அதிர்வு மூலம் ஊடுகடத் தப்படுகிறது?

(iv) வினா (ii) இல் குறிக்கப்பட்ட பொறிமுறையலைக்கும் மின்காந்த அலைக்குமிடையில் காணப்படும் வேறுபாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.

**8.** (A) பயற்றம் தாவரங்கள் இரண்டில் உள்ள பூக்கள் இரண்டை உருவில் காணலாம்.




உரு 1 உரு 2

(i) P, Q, R, S ஆகியவற்றுள் பெண்ணகத்தின் பகுதிகளைக் குறிப்பிடும் எழுத்துகளை எழுதுக.

(ii) இங்கு X, Y எனக் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு மகரந்தச் சேர்க்கை முறைகளையும் குறிப்பிடுக.


(iii) X, Y ஆகிய இரு மகரந்தச் சேர்க்கை முறைகளுள் எம்முறை மூலமான மகரந்தச் சேர்க்கைக்கு பூக்கள் அதிகளவில் இசைவாக்கம் அடைந்துள்ளன.

(iv) உரு 1 இல் காட்டப்பட்டுள்ள பூ பச்சை நிற பயற்றை நெற்றையும் உரு 2 இல் காட்டப்பட்டுள்ள பூ மஞ்சள் நிற பயற்றை நெற்றையும் உருவாக்குகின்றது. பச்சை நிற நெற்று ஓரினநுக நிலையில் ஆட்சியுடையதாகவும் மஞ்சள் நிற நெற்று ஓரினநுக நிலையில் பின்னடைவானதாகவும் காணப்பட்டது. Y முறையிலான மகரந்தச் சேர்க்கையின் பின் தோன்றும் தாவரப் பரம்பரையின் நெற்றின் நிறம் தலை முறையடையும் முறையை வரைந்து காட்டுக. ( பச்சை நிறத்திற்கு 'G' உம் மஞ்சள் நிறத்திற்கு 'g' உம் பயன்படுத்துங்கள்.)

(v) $F_1 \times F_1$ இடையில் கலப்புப் பிறப்பாக்கம் ஏற்படும்போது $F_2$ சந்ததியில் தலைமுறையடையும் முறையை பெனற் சட்டகத்தில் காட்டுக.

(vi) இங்கு $F_2$ சந்ததியில் பெறப்படும் தோற்றவமைப்பின் விகிதத்தை எழுதுக.

(B) தரப்பட்ட வரிப்படத்தைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.




(i) நீர்த் தேக்கத்தில் நீர் கொண்டுள்ள சக்தி எவ்வகையானது எனக் குறிப்பிடுக.

(ii) நீர்மின்வலு நிலையங்களின் செயற்பாட்டிற்கு உயரமான இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நீர்த்தேக்கங்களில் நீரைத் தேக்கிவைப்பதற்கான காரணத்தை விளக்குக.

(iii) நீர் மின்வலு நிலையங்களில் மின் உற்பத்தி செய்யப்படும்போது ஏற்படும் சக்தி நிலைமாற்றத்தைக் காட்டும் பின்வரும் பாய்ச்சற் கோட்டுப்படத்தில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.

நீர் → நீர் → சுழலி → டைனமோ
(a)............... சக்தி (களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளபோது) → (b)............... சக்தி (பாயும்போது) → (c)............... சக்தி → (a)............... சக்தி → மின்சக்தி

(a), (b), (c), (d) வெற்றிடங்களில் காணப்படும் சக்தி நிலைப்பாட்டைத் தனித்தனியே எழுதுக.

(iv) இங்கு Y, Z ஆகிய நிலைமாற்றி வகைகளைக் குறிப்பிடுக.

(v) X நிலைமாற்றியில் முதன்மைச் சுற்றின் அழுத்த வேறுபாடு 25 kV ஆவதுடன் துணைச் சுற்றின் "அழுத்த வேறுபாடு 220 kV ஆகும். அந்நிலைமாற்றியில் முதன்மை துணைச்சுற்றுகளின் எண்ணிக்கைக்கிடையிலான விகிதத்தைக் காண்க.

(vi) உருவில் காட்டியவாறு நீரினால் புள்ளி P இன் மீது ஏற்படுத்தப்படும் அமுக்கத்தைக் காண்க. (நீரின் அடர்த்தி $= 1000 \ kg \ m^{-3}$, $g = 10 \ ms^{-2}$)

(மிகுதி நாளை வெளிவரும்)

# இலங்கை தேசிய துக்கநாளில் மதுவிருந்துடன் இந்தியத் தூதுவர் சின்ஹாவின் பிரியாவிடை



## நிகழ்வில் ஜனாதிபதியும் பங்கேற்றதால் சர்ச்சை

(கொழும்பு)

சிங்கள இசையுலக மேதையான பண்டித் அமரதேவவின் மறைவுக்கு ஏழு நாட்கள் தேசிய துக்கம் கடைப்பிடிக்கப்படும் நிலையில். இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹாவின் பிரியாவிடை நிகழ்வில் மதுபான விருந்து அளிக்கப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

பண்டித் அமரதேவவின் இறுதிச்சடங்கு கடந்த சனிக்கிழமை மாலை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் பங்கேற்றிருந்தனர்.

பண்டித் அமரதேவவின் மறைவுக்கு ஏழு நாட்கள் தேசிய துக்கம் கடைப்பிடிக்கப்படும் என ஜனாதிபதி அறிவித்தார்.

அத்துடன், அவரது இறுதிச்சடங்கு நடைபெறும் போது கொழும்பில் மதுபானசாலைகள் மற்றும் இறைச்சிக்கடைகளை மூடவும் உத்தரவிடப்பட்டிருந்தது.

அதேவேளை, இந்தியத் தூதரகம், கடந்த வெள்ளிக்கிழமை இரவு, கொழும்பில் உள்ள தாஜ் சமுத்ரா விடுதியில், வை.கே.சின்ஹாவுக்கு பிரியாவிடை நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.





பண்டித அமரதேவவின் இறுதிச்சடங்கில் பங்கேற்ற ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள், பிரமுகர்கள் பலரும், இந்தியத் தூதுவரின் பிரியாவிடை நிகழ்விலும் பங்கேற்றிருந்தனர்.

இந்த பிரியாவிடை நிகழ்வில், மதுபானங்களும் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டதாக சர்ச்சை எழுந்துள்ளது.

பிரியாவிடை நிகழ்வில், மதுபான போத்தல்களுக்கு அருகே இந்தியத் தூதுவரும், இலங்கை பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சியும்காணப்படும் புகைப்படம் உள்ளிட்ட பல படங்கள் வெளியாகியுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (இ-7-10)

## வைத்தியர் உட்பட மூவர் மயக்கம்

(கரணவாய்)

தனியார் வைத்திய நிலையம் ஒன்றில் மின்பிறப்பாக்கி இயந்திரம் இயக்கப்பட்ட போது அதிலிருந்து வெளியேறிய நச்சு வாயுவை சுவாசித்த வைத்தியர் உட்பட மூவர் மயக்கமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் இடம்பெற்றது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, இரவுவேளை மின்சாரம் துண்டிக்கப்பட்ட வேளை மின்பிறப்பாக்கி இயக்கப்பட்டதாகவும் அதன்போது வெளியாகிய வாயு அறை முழுவதும் வியாபித்தது. அச்சமயம் குளிரூட்டி ஆழியை இயக் கியபோது அவர் கள் ஒருவித வாயுவை சுவாசித்து மயக்க மடைந்தனர்.

இதில் நெல்லியடியைச் சேர்ந்தபல்வைத்தியர் அருள் பிரகாசம் செந்தில்குமரன் (வயது-34), கரவெட்டி வதிரி யைச் சேர்ந்த சுந்தரலிங்கம் துளசிகா(வயது-20), தொண்டைமானாறைச் சேர்ந்த த.தர்மினி (வயது-26) ஆகியோர் மயக்கமடை ந்த நிலையில் வைத்திய சாலையில் சிகிச்சை க்காக அனுமதிக்கப்பட்டனர். (இ-3-60)

## கதிரைகள் கையளிப்பும் பரிசில் நாளும்

யாழ். அல்வாய் இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு கதிரைகள் கையளிப்பும் பாடசாலை பரிசில் நாளும் நாளை 9 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் நவரத்தினம் இராசலிங்கம் தலை மையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் சிவக்கொழுந்து அகிலதாஸ் கலந்து கொள்வார். (இ-3)

## மகா தேவா சுவாமிகளின் குருபூசை

யாழ். கந்தர்மடம் ஸ்ரீ சிவ குருநாத பீடம், மகாதேவா சுவாமிகள் ஆச்சிரம வேதாந்த மடத்தில் ஸ்ரீமத் மகா தேவா சுவாமிகளின் வருடா ந்த குரு பூசை இன்று செவ் வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும்.


பஜனை, பூசை வழிபாடுகள், மகேஸ்வர பூசை என்பனவும் இடம்பெறும். ( இ-3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 893


விமலரட்ணம்




சிந்து



ராஜ்




ஜெனா



கனகசபாபதி

பாம்பு, பாம்பை கொல்லாது.
யானை, யானையை கொல்லாது.
சிங்கம், சிங்கத்தை கொல்லாது.
எனவே......
உலகத்தில் உள்ள கொடிய விலங்கு.....மனிதன் தான்.

கமலா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## புதிய பயங்கரவாத தடைச்சட்டம் மிகவும் ஆபத்தானது

# சித்திரவதைகள், கொடூரங்கள் இலங்கையில் மேலும் அதிகரிக்கும்



## சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரிக்கை

இலங்கையில் ஏற்கனவே சட்டம்.ஒழுங்கை அமுல்படுத்தும் பொலிஸார் உட்பட படைத்தரப்பினர் சித்திரவதைகள் மற்றும் படுகொலைகளில் ஈடுபட்டுவரும் நிலையில், பயங்கரவாதத்திற்கு எதிரான புதிய சட்டம் அவர்களுக்கு மேலும் அதிகாரமளிப்பதாக அமையும் என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்தியப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் குற்றம்சாட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைகளுக்கு எதிரான குழுவின் 59 ஆவது கூட்டத்தொடர் நேற்று ஜெனிவாவில் ஆரம்பமானது. டிசெம்பர் ஏழாம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தொடரில் எதிர்வரும் 15, 16 ஆம் திகதிகளில் இலங்கையில் தொடரும் சித்திரவதைகள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளன.

இந்த நிலையில் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்தியப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில், இலங்கை அரசாங்கம் படைக் கட்டமைப்புக்களில் உண்மையான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வது என்றால், முதலில் பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள் மற்றும் படுகொலைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். கடந்த ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி யாழ்ப்பாணம் கொக்குவில் பிரதேசத்தில் வைத்து யாழ் .பல்கலைக்கழக மாணவர்கள் விஜயகுமார் சுலக்சன் மற்றும் நடராசா கஜன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை மூடி மறைக்க பொலிஸார் மேற்கொண்ட முயற்சிகள் இதற்கு சிறந்த உதாரணம் என்றும் அடம்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் பொதுமக்கள் பொலிஸாரின் கொடுமைகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்ததால் அந்த சம்பவத்தை மூடி மறைக்க இலங்கை பொலிஸாரால் முடியாது போய்விட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் நவம்பர் 15 ஆம் திகதி ஐ.நாவின் சித்திரவதைகளுக்கு எதிரான குழுவின் 59 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கம், படைத் தரப்பால் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகளை தடுப்பதற்கு மேற்கொள்ளவுள்ள திட்டங்களை தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாட்டில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் பொலிஸில் இடம்பெறும் மோசமான சித்திரவதைகள் மற்றும் படுகொலைகள் விடயத்தில் இலங்கை அரச தரப்பினரால் உறுதியான வாக்குறுதியை வழங்க முடியாது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸாருக்கு சட்டவிரோதக் கைதுகள், சித்திரவதைகள் மற்றும் சட்டவிரோதப் படுகொலைகள் ஆகிய சம்பவங்கள் வழமையான நிகழ்வுகளாகியுள்ளமை மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் பிரட் அடம்ஸ், அவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடைய பொலிஸாரை சட்டத்தின் முன்நிறுத்த இலங்கை அரசாங்கம் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கொழும்பு - கண்டி வீதியில் வைத்து இந்திய ஜயசிங்க என்ற இளைஞர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம், 2014 ஆம் ஆண்டு மே மாதம் சந்துன் மாலிங்க என்ற இளைஞன் படுகொலைச் சம்பவம், 2015 மார்ச் மாதம் தெல்கொட பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றமை ஆகிய சம்பவங்களும் இலங்கை பொலிஸ் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட அண்மைக்கால சட்டவிரோத நடவடிக்கைகள் என பிரட் அடம்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. குழுவிற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அனுப்பிவைத்துள்ள அறிக்கையொன்றில், இலங்கையில் இன்னமும்பொலிஸாரால் நடத்தப்படும் இரகசிய சித்திரவதை முகாம்கள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. பொலிஸாரின் இந்த நடவடிக்கைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு. பொலிஸார் தொடர்புபட்ட ஒரு சில சம்பவங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், பெரும்பாலானவை கண்டுகொள்ளப்படுவதில்லை என்றும் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் இலங்கை அரசாங்கம் உண்மையில் பாதுகாப்புக் கட்டமைப்பில் மறுசீரமைப்பை மேற்கொள்வதாயின், பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள் மற்றும் சட்டவிரோத படுகொலைகளைத் தடுப்பது குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்தியப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதனை யாழ். பல்கலைக்கழக மாணவர்களான விஜயகுமார் சுலக்சன் மற்றும் நடராசா கஜன் ஆகியோரின் படுகொலைகளிலிருந்து ஆரம்பிக்கலாம் என்றும் தெரிவித்துள்ள பிரட் அடம்ஸ், பொலிஸாருக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கும் பயங்கரவாதத்திற்கு எதிராக புதிய சட்ட மூலத்தை இலங்கை அரசாங்கம் கைவிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7-10)

# தமிழ் சினிமா வரலாறு

## எம்.ஜி.ஆர்., சிவாஜி படங்களுக்கு கண்ணதாசன் வசனம்

294

காதல், சோகம், தத்துவம் என்று எது பற்றி வேண்டுமானாலும் நினைத்த மாத்திரத்தில் பாடலை எழுதும் திறமை அவருக்கு இருந்தது. ரசிகர்கள் மட்டும் அல்லாது பட அதிபர்கள், இசையமைப்பாளர்கள், நடிகர், நடிகைகள் அனைவரும் அவருடைய பாடலை விரும்பினர். அவருடைய பாடல்களில் கருத்தாழம் இருந்தது. சொல்லாட்சி இருந்தது.

பாடல் எழுதித் தரும்படி கேட்டு பட அதிபர்கள் அவர் வீட்டில் தவம் கிடக்கும் நிலை ஏற்பட்டது. எனவே இரவு பகலாக அவர் பாடல் எழுத நேரிட்டது.

கண்ணதாசன் பாடல் இடம் பெறாத படங்களே இல்லை என்ற அளவுக்கு எல்லாப் படங்களிலும் அவரது பாடல்கள் இடம்பெறலாயின.

கண்ணதாசன் எழுதிய சில தத்துவப் பாடல்கள் வருமாறு,

போனால் போகட்டும் போடா, இந்த பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா? (படம் :பாலும் பழமும்). கவிஞரின் இந்த பாடலை ரி.எம்.சௌந்தரராஜன் பாட அதற்கு சிவாஜி கணேசன் நடித்த காட்சி ரசிகர்கள் மனதில் நிலையான இடத்தைப் பெற்றதாகும்.

வீடுவரை உறவு வீதி வரை மனைவி காடு வரை பிள்ளை கடைசிவரை யாரோ? (படம்: பாத காணிக்கை).

மனிதன் மாறிவிட்டான் மதத்தில் ஏறிவிட்டான் (படம்: பாவமன்னிப்பு)

நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால், எங்கிருந்தாலும் வாழ்க (படம்: நெஞ்சில் ஓர் ஆலயம்).

உன்னைச்சொல்லி குற்றமில்லை (படம்: குலமகள் ராதை).

கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும். அவன் காதலித்து வேதனையில் வாட வேண்டும் (படம்: வானம்பாடி).

உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது(படம்: கர்ணன்).

மலர்ந்தும் மலராத

பாசமலர் படத்தில் வரும் மலர்ந்தும் மலராத பாடல் தேன்மொழிவதாக இருந்தது.

உள்ளம் என்பது ஊமை (பார்த்தால் பசி தீரும்), பிறக்கும் போதும் அழுகிறான், இறக்கும் போதும் அழுகிறான் (கவலை இல்லாத மனிதன்),. ஏன் பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாயோ (பாகப்பிரிவினை), எங்கே நிம்மதி, எங்கே நிம்மதி (புதிய பறவை), சோதனை மேல் சோதனை போதுமடா சாமி (தங்கப்பதக்கம்), பாட்டும் நானே பாவமும் நானே(திருவிளையாடல்), நிலவைப் பார்த்து வானம் சொன்னது (சவாலே சமாளி) போன்ற பாடல்கள் நிரந்தரமான சுப்பர்ஹிட் பாடல்கள்.

மன்னாதி மன்னன் படத்தில் வரும் அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிட உடமையடா என்ற பாடல் மிகவும் புகழ் பெற்றது.



தேர்தல் பிரசார நாடகம் ஒன்றில் கண்ணதாசன்.

கண்ணதாசன் ஏறத்தாழ 5 ஆயிரம் திரைப்படப் பாடல்கள் எழுதி இருக்கிறார். 4 ஆயிரம் தனிக்கவிதைகள் படைத்துள்ளார்.

### அரசியல்

தொடக்க காலத்தில் கண்ணதாசன் தீவிர அரசியலில் ஈடுபட்டு வந்தார். ஈ.வெ.கி. சம்பத் தி.மு.கவை விட்டு விலகிய போது இவரும் விலகினார். இருவரும் சேர்ந்து தமிழ்த் தேசிய கட்சி என்ற புதுக்கட்சி தொடங்கினர். 1964 இல் தமிழ்த் தேசிய கட்சி காங்கிரசுடன் இணைந்தது. மறைந்த பெருந்தலைவர் காமராஜரிடம் கண்ணதாசன் மிகுந்த பக்தி கொண்டவர். பிறகு கொஞ்ச காலத்தில் அரசியலில் இருந்து ஒதுங்கி வாழ்ந்தார். சினிமாவுக்கு பாட்டு எழுதுவதிலும் நாவல்கள் எழுதுவதிலும் தன்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்தினார்.

### நாடகம்

கண்ணதாசன் அவ்வப்போது நாடகங்களிலும் நடிப்பது வழக்கம்.

காங்கிரஸ் இருந்தபோது தேர்தல் பிரசாரத்துக்காக சில நாடகங்களை நடத்தினார்.

திரைப்பட பாடலாசிரியராகக் கொடி கட்டிப் பறந்த கண்ணதாசன் சொந்தமாக படக் கம்பனி தொடங்கி படத்தயாரிப்பில் ஈடுபட்டார். சில படங்கள் தோல்வி அடைந்ததால் அவர் பெரும் சோதனைகளை அனுபவிக்க நேர்ந்தது. (தொடரும்)

நான்கு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட

## அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிப்பு

மழையுடனான வானிலையை அடுத்து நான்கு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு நேற்று முற்பகல் 11.30 வரை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

மண்மேடு இடிந்து விழுதல் மற்றும் கற்பாறைகள் சரிதல் போன்ற விடயங்கள் குறித்து அவதானத்துடன் செயற்படுமாறு தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் மண்சரிவு மற்றும் முன்னெச்சரிக்கை முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் ஆர்.எம்.எஸ். பண்டார தெரிவித்தார்.

அந்தவகையில் இரத்தினபுரி மாவட்டத்தின் அயகம மற்றும் எலபாத்த உள்ளிட்ட பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகள் அபாய வலயங்களாக அடையாளங் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

## ஹெரோயின் கடத்தல்; இலங்கைப் பிரஜைக்கு 10 ஆண்டுகள் சிறை

ஹெரோயின் போதைப் பொருளை கடத்த முயற்சித்த இலங்கை பிரஜை ஒருவருக்கு 10 வருட சிறைத் தண்டனை விதித்து சென்னை சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

குறித்த இலங்கை பிரஜை கடந்த 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி சென்னை சர்வதேச விமான நிலையத்தில் இருந்து 2 கிலோகிராம் ஹெரோயினை இலங்கைக்கு கடத்த முயற்சித்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட நிலையில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்திய தேசிய போதைப் பொருள் தடுப்பு பிரிவிற்கு கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது 2 கிலோகிராம் ஹெரோயினுடன் மொஹமட் ரிகாஸ் என்ற இலங்கை பிரஜை கைது செய்யப்பட்டிருந்தார்.

குஜராத்தைச் சேர்ந்த ரவி மாஸ்டரிடம் இருந்து குறித்த போதைப்பொருளை ரிகாஸ் கொள்வனவு செய்துள்ளமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக தமிழக பொலிஸ் அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தபோது மொஹமட் ரிகாஸ் என்ற இலங்கை பிரஜைக்கு 10 வருட சிறைத் தண்டனை விதித்ததுடன் இரண்டு இலட்சம் ரூபாய் (இந்திய ரூபாய்) அபராதமும் விதித்து நீதிபதி கே.ஐயப்பன் தீர்ப்பளித்துள்ளார். (இ-7-10)

# பெருமளவு பொலிஸார் போதைப்பொருள் விற்பனை பங்காளிகள்

## சந்திரிகா குற்றச்சாட்டு



(கொழும்பு)

**பொலிஸ் அதிகாரிகளில் பெரும்பாலானோரும் சில அரசியல் வாதிகளும் இலங்கையில் நடக்கும் போதைப்பொருள் விற்பனையாளர்களின் பங்காளிகளாக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.**

போதைப்பொருள் ஒழிப்பு திட்டத்தை செயற்படுத்தும் முன்னர், அதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கம்பஹாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போதே முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு குற்றம் சாட்டினார்.


கிராமத்திலுள்ள விஹாரைகளின் பிக்குகள் மற்றும் பொலிஸாரை இணைத்துக் கொள்ளாமல் போதைப் பொருள் ஒழிப்பு திட்டத்தை முன்னெடுக்க முடியாது.

எனினும் அதற்கு முன்னர் பொலிஸ்மா அதிபர் பொலிஸில் சுத்திகரிப்பை மேற்கொள்ள வேண்டும். இதனை பொலிஸ்மா அதிபரும் அறிந்துள்ளார். பொலிஸ் நிலையங்களில் சேவையாற்றும் அதிகாரிகள் போதைப்பொருள் கடத்தல்காரர்களின் முகவர்களாக மாறியுள்ளனர். சிறியளவில் காணப்பட்ட இந்த விடயம் கடந்த 10 வருடங்களில் அரைவாசிக்கும் மேல் அதிகரித்துள்ளதுடன், அரைவாசிக்கும் மேற்பட்ட பொலிஸார் போதைப் பொருள் விற்பனையாளர்களின் முகவர்களாக மாறியுள்ளனர் எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

இப்படி இருக்கும் போது எப்படி பிரச்சினையை தீர்ப்பது. அரசியல்வாதிகளையும் இதில் எப்படியாவது இணைத்து கொள்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# புதிய கட்சியில் இணைந்தால் சு.க.உறுப்புரிமை பறிபோகும்

## செயலாளர் எச்சரிக்கை



புதிய அரசியல் கட்சியில் அங்கத்துவம் பெற்றுக் கொண்டால் சுதந்திரக் கட்சியின்உறுப்புரிமை இரத்தாகும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் துமிந்த திஸாநாயக்க எச்சரித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அரசியல் கட்சியில் அங்கத்துவம் பெற்றுக் கொண்டால் அவ்வாறானவர்களின் நாடாளுமன்ற உறுப்புரிமையும் இரத்தாகும்.


சுதந்திரக் கட்சியில் எந்தவொரு பதவி வகித்தாலும் எவ்வாறான நிலையில் இருந்தாலும் புதிய அரசியல் கட்சியில் இணைந்து கொண்டால் அவர்கள் கட்சி உறுப்புரிமையை இழக்க நேரிடும்.

வேறும் கட்சியில் இணைந்து கொள்வதனால் கட்சி உறுப்புரிமையை இழக்கும் நபர்கள் மேன்முறையீடு செய்து கட்சி உறுப்புரிமையை மீளப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## மிஹின்லங்கா பணியாளர்களுக்கு ஸ்ரீலங்கன் விமான சேவையில் வேலைவாய்ப்பு வழங்கல்

மிஹின்லங்கா விமான சேவையில் பணிபுரிந்த 125 பணியாளர்களை ஸ்ரீலங்கன் விமான சேவையில் இணைத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி குறித்த 125 பணியாளர்களையும் இரண்டு பிரிவுகளாக சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக ஸ்ரீலங்கன் விமான சேவையின் பேச்சாளர்ஒருவர் தெரிவித்துள்ளார். கடந்த 30 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மிஹின் லங்கா விமான சேவையின் பொறுப்புக்கள் அனைத்தும் ஸ்ரீலங்கன் விமான சேவையிடம் கையளிக்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. (இ-7-10)




# செய்தித்துளிகள்

## அசாதாரண காலநிலையால் அகுரஸ்ஸ மக்கள் பாதிப்பு

மாத்தறை மாவட்டத்தின் அகுரஸ்ஸ பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட கடும் மழையின் காரணமாக மக்கள் வாழ்க்கையின் அன்றாட நிலைமைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அகுரஸ்ஸ தெதியகல வனாந்தர பகுதியில் பெய்து வரும் கடும் மழையினால் நில்வள கங்கையின் கிளை ஆறான திகிலி எல்லை பெருக்கெடுத்துள்ளது.

இதனால் திகிலி எல்லை பிரதேசத்தை அண்மித்த வீடுகளும் வியாபார நிலையங்களும் நீரில் மூழ்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அதேவேளை, அகுரஸ்ஸ யக்கலமுள்ள ஊடான கராபிட்டிய பாதையும் கெடன்வில பிரதேசத்தில் நீரில் மூழ்கியுள்ளதோடு இதனூடான போக்குவரத்தும் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## பாரிய முதலை அகப்பட்டது



நில்வள கங்கையில் பாரிய முதலையொன்று சிக்கியுள்ளது. தற்போது நிலவும் சீரற்ற காலநிலையை அடுத்து நில்வள கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. இதனையடுத்து கங்கையிலிருந்து பாரிய முதலையொன்று கிராமத்திற்குள் பிரவேசித்துள்ளது.

மாத்தறை, வெல்கொட பிரதேசத்தில் வைத்து குறித்த முதலை வனவிலங்கு அதிகாரிகளால் பிடிக்கப்பட்டுள்ளது. இந்த முதலை சுமார் 18 அடி இருக்கும் எனவும் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட முதலைகளில் மிகப்பெரியதென வன விலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை வெளிப்பகுதிக்கு வந்துள்ள இந்த முதலை அந்த பகுதி மக்கள் மற்றும் வனவிலங்கு அதிகாரிகளின் பாரிய முயற்சியில் நில்வள கங்கையில் விடுவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## யானைகள் சுற்றிவளைப்பு

மொனராகலை மாவட்டத்தில் சில பகுதிகளில் நேற்று முன்தினம் காட்டு யானைகள் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

வெல்லவாய, ஹதபானகம மற்றும் ஆனாபல்லம ஆகிய பகுதிகளில் இந்த காட்டு யானைகள் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

வெல்லவாய வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் இந்த சுற்றிவளைப்பை முன்னெடுத்தனர். (இ-7-10)

## வேகக்கட்டுப்பாட்டையிழந்த வாகனம் கடலுக்குள் பாய்ந்தது



வீதியில் பயணித்துக்கொண்டிருந்த வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து கடலுக்குள் பாய்ந்து தடம்புரண்டது. இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை காலை 6 மணியளவில் வல்லைப் பாலத்தடியில் இடம்பெற்றது. நெல்லியடியிலிருந்து யாழ். நகர் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மகேந்திரா ரக வாகனம் வல்லை பாலத்தைக் கடந்து சென்றபோது வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி வல்லை கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியது. இவ்வாகனத்தில் சென்றவர்கள் எதுவித காயமுமின்றி உயிர்தப்பினர். (இ-3-60)

## விசேட தேவையுடைய இராணுவத்தினரின் ஓய்வூதிய பிரச்சினைக்குத்தீர்வு முன்வைப்பு



ஓய்வுபெற்ற விசேட தேவையுடைய இராணுவத்தினரின் ஓய்வூதியத் திட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் வழங்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு உறுதியளித்துள்ளது.

தற்போது வழங்கப்படுகின்ற சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக சேவை ஓய்வூதியத்தை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் ஊடக மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிய முறையில் சட்டம் வகுக்கப்பட்டு 2017ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்திற்குள் இந்த யோசனை உள்வாங்கப்பட்டு, குறித்த ஓய்வூதியத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்கமைய 12 வருடங்களுக்கு குறைவாக சேவையாற்றிய விசேட தேவையுடைய இராணுவ உறுப்பினர்களுக்கு 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் இந்த ஓய்வூதியத்தை வழங்கவுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த இராணுவ உறுப்பினர்களின் பிரச்சினை குறித்து ஜனாதிபதி கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னரே அவதானம் செலுத்தியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசியல் இலாபத்தை பெற்றுக் கொள்வதற்காக உபாதைக்குள்ளான இராணுவ உறுப்பினர்களின் ஓய்வூதிய பிரச்சினையை முன்னிலைப்படுத்தி, அரசாங்கத்தை சில குழுக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றமை வருத்தமளிக்கும் செயல் என பாதுகாப்பு அமைச்சின் ஊடக மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் காரணமாக போர்க்களத்தில் அவயவங்களை இழந்த நிலையில் 12 வருட இராணுவ சேவைக் காலத்தை பூர்த்தி செய்யாத நிலையிலேயே ஓய்வூபெற நேரிட்ட தமக்கு ஓய்வூதியம் பெற்றுக் கொடுக்குமாறு வலியுறுத்தியே முன்னாள் இராணுவ வீரர்கள் கடந்த 7 நாட்களாக புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.


கடந்த ஒக்டோபர் 31 ஆம் திகதி முதல் போரில் அவயவங்களை இழந்த படையினர் போராட்டத்தை முன்னெடுத்திருந்த நிலையில், கடந்த முதலாம் திகதி செவ்வாய்கிழமை ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டும் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இதனையடுத்து அவயவங்களை இழந்த ஓய்வு பெற்ற படையினரை அழைத்து கலந்துரையாடியிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அவர்க ளின் கோரிக்கைக்கு ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருந்தார்.

எனினும் ஜனாதிபதி தமது பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கத் தவறிவிட்டதாகத் தெரிவித்து தொடர்ந்தும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இந் நிலையிலேயே அவயவங்களை இழந்த முன்னாள் இராணுவ வீரர்களின் ஓய்வூதியம் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)

## பொருளாதாரத்தில் இந்தியா வளர்கிறது

### பிரதமர் மோடி பெருமிதம்




பொருளாதாரத்தில், இந்தியா வேகமாக வளர்ச்சி பெற்று வருவதாக பிரதமர் நரேந்திரமோடி தெரிவித்துள்ளார். டில்லியில் இந்தியா, இங்கிலாந்து நாடுகளுக்கு இடையேயான அறிவியல் தொழில்நுட்ப மாநாடு நேற்றுமுன்தினம் நடந்தது. இந்த விழாவில் கலந்து கொண்ட பிரதமர் மோடி மேலும் தெரிவிக்கையில், கடந்த 5 ஆண்டுகளில் இந்தியா ,இங்கிலாந்து இடையிலான வர்த்தகத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இங்கிலாந்தில் அதிக முதலீடு செய்த நாடுகளில் இந்தியா 3ஆவது இடத்தில் உள்ளது.

பொருளாதாரத்தில், இந்தியா வேகமாக வளர்ந்து வருகிறது. சர்வதேச சவால்களை எதிர்கொள்ள இந்தியாவும் இங்கிலாந்தும் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். சோலர் சக்தி குறித்து, சுத்தமான எரிசக்தி ஆராய்ச்சி மற்றும் ஆய்வு மையம் அமைக்க இரு தரப்பும் ஒப்புக் கொண்டுள்ளது.

இந்த மாநாடு, இரு நாடுகளுக்கு இடையேயான அறிவியல் அறிவு மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும். ஐரோப்பாவிற்கு வெளியே முதல் சுற்றுப்பயணமாக தெரசாமே இந்தியா வந்தது மகிழ்ச்சியளிக்கிறது.

பாதுகாப்புத்துறை, உற்பத்தி மற்றும் வான்வெளித்துறையில், இந்தியா அந்நிய முதலீட்டு விதிகளை தளர்த்தியதில் இங்கிலாந்திற்கு அதிக பலன் அளிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிறைக்குள் பேரறிவு

04

## 25 வருடங்கள் சிறைப்பட்டு வலிகளைச் சுமந்தவனின் தொடர்...



**இந்த நிலையில் தமிழ்நாடு முழுவதும் இருந்த ஈழ ஆதரவாளர்கள் பலரையும் சி.பி.ஐ. காவல்துறை விசாரணை செய்து வந்தது. அதன் தொடர்ச்சியாக வேலூர் மாவட்டம் சோலையார் பேட்டையில் உள்ள எனது பெற்றோரிடமும் விசாரித்தனர். பின்னர் என்னைப் பற்றியும் விசாரித்தனர்.**

..என்றாலும் மனித நேயத்தோடு பிறருக்கு உதவுவதால் அது விபத்தில் காயம் பட்டவரை காப்பாற்றுவதாக இருந்தாலும் அல்லது விடுதலைப் போராட்டத்தில் காயமடைந்தவரை காப்பதாக இருப்பினும் இறுதியில் அதன் விளைவு துன்பமும் மரணமும் தான் என முடிவாகிப் போகும் என்பதற்கு நான் எடுத்துக்காட்டாக மாறிவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறேன்.

அப்படியான நான் 1989ஆம் ஆண்டு எனது பட்டயப் படிப்பை கிருஷ்ணகிரி அரசு பாலிடெக்னிக்கில் முடித்த பின்பு படிப்புக்குரிய தொழில் செய்துகொண்டே மேலே ஏதேனும் படிக்க வேண்டும் என ஆர்வத்துடன் சென்னை சென்றேன்.

அங்கு எனக்குச் சிறிய வயது முதல் தெரிந்த ஒரே இடம் வேப்பேரி 'பெரியார் திடல்'. அங்கு அறிமுகம் ஆனவர்தான் 'சுபா நியூஸ் போட்டோ சர்வீஸ்' நிறுவன உரிமையாளர் அண்ணன் சுபா சுந்தரம். ராயப்பேட்டையில் இருந்த அவரது கடையில்தான் நளினியின் தம்பி பாக்கியநாதனும், தற்போதும் உயிரோடு இருப்பதாக ஆதாரங்களோடு பரப்பரப்பாகப் பேசப்படும் அரிபாபுவும் நண்பர்களாயினர்.

21.05.1991 அன்று ஸ்ரீபெரும் புதூரில் நிகழ்ந்துவிட்ட குண்டுவெடிப்பின் அதே இரவு நேரம் நண்பர் பாக்கியநாதனுடன் தேவி திரையரங்கில் இரவுக்காட்சியாக 'பவுனு பவுனுதான்' திரைப்படம் பார்த்துக் கொண்டிருந்ததை இன்றும் என்னால் அசைபோட்டுப் பார்க்க முடிகிறது.

படம் முடிந்து திரும்பும் வழியில் தான் ராஜீவ் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து இருவரும் அறிந்தோம். அன்று எல்லோரையும்போல் செய்தியாக மட்டுமே அறிந்த நாங்களும் அந்தச் சம்பவத்தில் பிணைக்கப்பட்டுச் செய்தியாகப் போகிறோம் என்பதை கற்பனை செய்துகூடப் பார்த்திருக்கவில்லை.

23.05.1991 அன்று நானும் பாக்கியநாதனும் இணைந்து அவரது தமக்கை வேலை செய்து வந்த அடையாறு அனவான்ட் நிறுவனம் சென்றோம். நான் அலுவலகத்தின் வெளியே இரு சக்கர வாகனத்தில் காத்திருக்க, அவர் மட்டும் சென்று தனது தமக்கையைச் சந்தித்துவிட்டுத் திரும்பினார்.

அப்போது, அவர் தமக்கை கூறிய தகவல்களைக் கேட்ட



றிந்து பதற்றத்தோடு என்னிடம் பகிர்ந்து கொண்டார்.

அப்படித்தான் சிறிதேனும் எனக்கு அந்தச் சம்பவம் குறித்து தெரிய வந்தது. அதன் வீரியம் உணர்ந்த எவருமே அதனைப் பிறரிடம் பகிர்ந்துகொள்ளத் தயங்குவார்கள், அஞ்சுவார்கள் என்பதை நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அந்தச் சிறிய பருவத்தில் நானும் அப்படியே இருந்தேன்.

இந்த நிலையில் தமிழ்நாடு முழுவதும் இருந்த ஈழ ஆதரவாளர்கள் பலரையும் சி.பி.ஐ. காவல் துறை விசாரணை செய்து வந்தது. அதன் தொடர்ச்சியாக வேலூர் மாவட்டம் சோலையார் பேட்டையில் உள்ள ௭னது பெற்றோரிடமும் விசாரித்தனர்.

பின்னர் என்னைப் பற்றியும் விசாரித்தனர். அதனால், அவர்களுடன் நேரில் சென்னை வந்த எனது பெற்றோர் பெரியார்திடலில் வைத்து ஜூன் மாதம் 11ஆம் திகதி இரவு சுமார் 10.30 மணிக்கு விசாரணைக்கு என என்னை அனுப்பி வைத்தனர். சட்டப்படியான விசாரணைக்கு ஒத்துழைப்பது தமது கடமை என எனது பெற்றோர் கருதியதாலும் குற்றமேதும் செய்யாத கார ணத்தாலும் அச்சமின்றி நானும் அவர்களுடன் செல்ல முடிவெ டுத்தேன்.

அன்று அவர்கள் கேட்ட கேள்வியும், கூறிய தக வலும் ஒன்றே ஒன்று தான், "நளினி, முருகன் எங்கு உள்ளனர் என்ற ஒற்றைக் கேள்விக்குப் பதில் தெரிய வேண்டும்.

இது குறித்து விசாரித்து விட்டு காலை உங்கள் மகனை அனுப்பி விடுகிறோம்" என்று வாக் குறுதி அளித்துவிட்டு எனது பெற்றோரிடமிருந்து 'மல்லிகை'க்கு அழைத்து வந்தனர்.

எனக்குப் பதில் தெரியாத அந்த ஒற்றைக் கேள்விக்கு என்னவோ, அடுத்தநாளே விடை கிடைத்துவிட்டது. நளினி, முருகன் இருவருமே 12.06.1991 அன்று சைதாப்பேட்டை பேருந்து நிலையத்தில் கைதுசெய்யப்பட்டனர்.

ஆனால், "அடுத்தநாள் காலை அனுப்பி விடுகிறோம்" என எனது பெற்றோருக்கு அவர்கள் தந்த உறுதி மட்டும் இன்னமும் தீர்க்கப்படாத 25 ஆண்டுகால வலியாகிப் போனது.

இன்னமும் அந்த இரவு விடியவே இல்லை.

(வலிகள் தொடரும்...)

தாய்நாட்டில் சட்டத்தை மதிப்பவர்களால்தான் உலகம் முழுவதும் சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.
*~ சீன பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சடாயுவை வெட்டி வீழ்த்தியது இராமர் தரப்பை பயப்படுத்தவே

இராமபிரானின் துணையாள் சீதாதேவியை இராவணன் தூக்கிச் செல்கிறான். இதைக் கண்ட சடாயு அந்தோ என் ஆருயிர் நண்பன் தசரதனின் மைந்தன் இராமனின் பத்தினியை இராவணன் தூக்கிச் செல்கிறானே என்ற துன்பம் சடாயுவை அதிரவைக்க இராவணனை சடாயு எதிர்க்கிறான்.

அந்த எதிர்ப்பு இராவணனுக்கு பெரியதன்று. அதுபற்றி இம்மியும் கருத்தில் கொள்ளாமல் இராவணன் சென்றிருக்க முடியும்.

ஆனால் இராவணனோ தன் வாளை எடுத்து சடாயுவை வெட்டி வீழ்த்தி விட்டுச் செல்கிறான். வயோதிபம் நிறைந்த சடாயு வீழ்ந்து கிடக்கிறான்.

இப்போ இராவணன் மீது இரு குற்றங்கள் வந்து சேர்கின்றன. அதிலொன்று சீதையைக் கடத்தியது. இரண்டாவது கடத்தல் பிழையான செயல் அதைச் செய்தல் நீதிக்கு முரண். ஆகையால் சீதையை விட்டுவிடு என்று தன் வலுவான கருத்தை முன்வைத்த சடாயுவை வெட்டி வீழ்த்தியமை.

இந்த இரு குற்றங்களுக்காகவே இராவணன் தண்டனை பெறுகிறான். இருந்தும் பலரும் சீதையைக் கடத்தியதன் காரணமாகவே இராவணன் அழிய வேண்டிதாயிற்று என்று கூறுவர்.

ஆனால் அந்த உண்மையோடு சடாயுவைக் கொன்ற குற்றத்துக்குமான தண்டனையாகவே இராவணனின் மரணம் அமைந்தது.

இதை நாம் கூறுவது எதற்கு என்று நீங்கள் முணுமுணுப்பது தெரிகிறது. இப்போது யாழ்ப்பாணத்தில் அதிரடியான கைதுகள் நடந்து வருகின்றன.

பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் இந்தக் கைதுகளைச் செய்வதாக தகவல்கள் வெளிவருகின்றன.

ஆவா குழு; வாள்வெட்டு; போதைப்பொருள் என்ற பிரச்சினைகளை முன்வைத்து இந்தக் கைதுகள் நடப்பதாகக் கூறப்படுகிறது.

ஆவா குழு என்பது முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் உருவாக்கப்பட்டது என அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியிருக்கின்ற நிலையில்,

இப்போது ஆவா குழுவை முன்வைத்து நடத்தப்படும் கைதுகள் வெறும் சந்தேகத்தின் பேரில் மட்டும் நடக்கின்றதா? அல்லது ஆவா குழு, வாள் வெட்டு, போதைப்பொருள் என்பவற்றை முன்னிறுத்தி தமிழ் இளைஞர் தமிழ் இனம் 'எழுக' பெறாமல் தடுப்பதற்கான திட்டமிடல் சார்ந்த கைதா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

பொதுவில் இந்தக் கைதுகள் நீதியின் பாற்பட்டதாக இருக்க வேண்டும். இதைவிடுத்து யாரேனும் திட்டம் தீட்டிக் கொடுத்து, கைது செய்யுங்கள் எல்லாம் நின்று போகும் என்ற வஞ்சத்தில் கைதுகள் நடந்தால் அது நல்லாட்சிக்குப் பங்கத்தையே ஏற்படுத்தும்.

ஆக, ஆவா குழுவை சாட்சியாக்கி தமிழ் இளைஞர்களை கைது செய்வதை நோக்காகக் கொண்டு கைதுகள் இடம்பெறுமாக இருந்தால், அது தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்ற நல்லாட்சி, தமிழ் மக்களுக்கு செய்யும் மிகப்பெரும் பாதகமாகும்.

எனவே இந்தக் கைது குறித்த உண்மைகள் உடனடியாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இல்லையேல் சடாயுவை வெட்டி வீழ்த்தி இராமர் தரப்பை பயமுறுத்த நினைத்த இராவணன் செயல் போன்று தமிழ் இனத்தைப் பயமுறுத்த நடத்தப்படும் செயலாகவே மேற்போந்த கைதுகள் கருதப்படும்.

# சில்லறைத்தனமான குற்றச்சாட்டுக்கள் பின்செல்வதால் பாரிய மோசடியாளர்கள் தப்பித்துக் கொள்கின்றனர்

## ஜனாதிபதி மைத்திரி கவலை

பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவினர் வாகனம் தவறாக பயன்படுத்தியமை, கொடிக்கம்பம் கொள்வனவு செய்தமை, கரம் போட் பகிர்ந்தமை போன்ற சில்லறைத்தனமான குற்றச்சாட்டுகள் பின்னால் செல்வதனால் பாரிய மோசடியாளர்கள் தப்பித்துக் கொள்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவலை வெளியிட்டுள்ளார்.

வார இறுதி ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டுள்ளார்.

பாரிய ஊழல் மோசடிகளை ஆராய்வதற்காகவே பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவு உருவாக்கப்பட்டது. தனிப்பட்ட பிரச்சினை அல்லது நிறுவனங்களின் முகாமைதுவ பிரச்சினை, பணிப்பாளர் சபை பிரச்சினை, நிறுவனங்களின் நிதி நெருக்கடி ஆகியவை தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக நிதி மோசடி விசாரணை பிரிவு உருவாக்கப்படவில்லை.

அந்த நிறுவனத்திற்கு தற்போது கிட்டத்தட்ட 400 சம்பவங்கள் விசாரிக்கப்படவுள்ளதாக நான் நினைக்கின்றேன். அரசாங்க நிதி மற்றும் சொத்துக்களை தவறாக பயன்படுத்தியமை தொடர்பிலான விசாரணைகளுக்கு முதன்மை வழங்கப்பட வேண்டியதே எங்களுக்கு அவசியம். அதனை தான் அந்த அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும்.

எனினும் வேறு விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்படுகின்றமையினாலே எங்கள் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. ஏனைய நிறுவனங்களும் அதேபோன்று தான். இலஞ்ச மற்றும் ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் நல்லவர்கள். அவர்கள் தங்கள் கடமைகளை நேர்மையாக நிறைவேற்றுகின்றார்கள். எனினும் அதன் ஊழியர்கள இதனை புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் நேர்மையாகவும் பக்கச்சார்பின்றியும் செயற்பட வேண்டும் அதுவே எனது விருப்பம்.

கடந்த ஒரு வருடமாக இந்த பிரச்சினை தொடர்பில் அரசாங்கத்திற்குள் பேசியுள்ளோம. கீழ்மட்ட அதிகாரிகள் அவ்வாறே செயற்பட வேண்டும். பாரிய ஊழல் மோசடி விசாரணைகளை விரைவுபடுத்த வேண்டும் என்றே நான் இன்றும் கூறுகின்றேன்.

டுபாய் வங்கியில் பணம் வைப்பிலிடப்பட்டமை தொடர்பான விசாரணை தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த ஒரு வருடமாக அவன் கார்ட் கப்பல் அரசாங்கத்தின் பொறுப்பில் காலி முகத்திடலிலுள்ளது. அதில் உள்ள ஆயுதங்களின் இலக்கங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

எனினும் தற்போது அதற்கு எதிராக எந்தவொரு வழக்கும் இல்லை. நாங்கள் கப்பலை பார்த்துக் கொள்வது மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றது. வசீம் தாஜுடீன் தொடர்பிலான விசாரணை மூடி மறைக்கப்பட்டுள்ளது. 27 மிக் விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பிலான விசாரணைகள் இடையில் எனக்கு மேலும் பல உதாரணங்களை வழங்க முடியும். மக்களுக்கு இவ்வாறான விடயங்களை அறிந்து கொள்வதே அவசியம்.

மக்கள் அறிந்து கொள்வதற்காக நான் இந்த விடயங்களை பகிரங்கமாக பேச வேண்டும். விசாரணை நிறுவனங்களுக்கு அழுத்தம் பிரயோகிப்பது எங்கள் அவசியம் அல்ல. நாங்கள் தான் அதனை உருவாக்கினோம். அவர்கள் பக்கச்சார்பின்றி செயற்படுவதே எங்களுக்கு அவசியம் என ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## போதைவஸ்துக்கு அடிமையாகி சீரழியும் மட்டக்களப்பின் நிலை

(கொழும்பு)

மட்டக்களப்பு நகருக்குள் காணப்படும் 67 மதுபான நிலையங்களுள் அநேகமானவை அரச கலால் இலாகாவின் ஒழுங்குவிதிகளுக்கு முரணாக பாடசாலைகள், மதவழிபாட்டுத் தலங்களுக்கு அருகாமையில் அமைந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இது பற்றி அறிவிக்கும் மட்டக்களப்பு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், மாவட்டத்ன் மாணவர்களும் இளைஞர்களும் போதை வஸ்துக்களுக்கும் மது பாவனைக்கும் அடிமைப்படும் நிலை அதிகரித்து வருவது அதிர்ச்சியளிப்பதாக கூறுகிறது.

மட்டக்களப்பில் அண்மையில் நடத்தப்பட்ட செயற்றிட்டக் கருத்தரங்கொன்றில் மாவட்ட சிவில் அமைப்புக்களின் செயற்பாடுகள் பற்றி எடுத்துக் கூறுகையல் மாவட்ட **NGO** க்களின் இணையத் தலைவராகிய எஸ். சிவயோகநாதன் இவ்விடயம் பற்றி விபரித்துள்ளார்.

இம்மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பிரதானமாக சுனாமி மற்றும் நீண்டகாலம் நீடித்து நிலவிவரும் போர்க்கால மற்றும் அதற்கு பிந்திய காலத் தாக்கங்களினாலும் பாரிய கஷ்டங்களுக்குள்ளாகி வருவது மட்டுமல்லாமல் இங்கு இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாயப்பளிக்கக்கூடிய தொழிற்சாலைகள் இங்கு இல்லாததுடன் அங்கிருந்த ஒரே தொழிற்சாலையும் மூடப்பட்ட நிலையிலுள்ளது பெரும் குறைபாடாகவே தொடர்ந்து வருகிறது.

இந்தச் சூழ்நிலைகளின் கழ் மாவட்ட மக்களில் அநேகா தமது பாரம்பரிய வழிமுறைகளை பயனபடுத்தி மீன்பிடித் தொழில செய்வதற்கே நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இதற்கு மத்தியில் பிரதேச கடல்வளம் நவீன மீன்பிடி உபகரணங்களுடன் அத்துமீறிச் செயற்படும் பிற பகுதி மீனவர்களின் ஊடுருவல்களால் சுரண்டப்படும் அநாதரவான நிலையில் தமது வருமானங்களை இழக்க நேரிடுகிறது.

அநேகமான பெண்கள் வருமானத்தின் பொருட்டு வெளிநாடுகளில் பணிப் பெண்களாக வேலை செய்தும் வருகின்றனர். இவ்வித நிலைமைகள் காரணமாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்தும் வருகின்றார்கள்.

குடும்பப் பிரச்சினைகள், பாலயல் துஷ்பிரயோகங் கள்-துன்புறுத்தல் போன்ற வேண்டப்படாத செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றதென குறிப்பிட்ட அவர் மேலும் கூறுகையில்,

இதன் காரணமாக மாவட்டத்தைச் சேர்ந்த சிறுவர்- இளைஞர்களது கல்வி சீர ழிந்து அவர்களது-நாட்டம் முறைகேடான பலவழிகளில் செல்வதுடன் மதுபானம், போதைவஸ்துப் பாவனை போன்ற வழிகளால் பல்வேறு பிரச்சினைகளுக்கும் அடி கோலுவதாய் இருக்கிறது.

அதிகூடுதல் மதுபாவனை கொண்ட மாவட்டங்களிடையே மட்டக்களப்பு 3 ஆவது இடத்தில் உள்ளதுடன் கல்வி நிலையில் அது ஆகக் குறைந்த 25 வீதம் என்ற நிலையிலேயேயுள்ளது.

மாவட்டம் தற்போதுள்ள நிலையில் அதனது மேம்பாட்டில் கூடுதல் கவனம் செலுத்தபபடவேண்டுமென அரசாங்கத்தை ஊக்குவிக்கும் அவர் மாவட்டத்தின் சீர்திருத்தம்-அபிவிருத்திகளுக்கு ஊடகத் துறையும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டுமென அவர் மேலும கேட்டுக்கொண்டார்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2016

“பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச்சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்”

*-பிராங்க் லோயிட் ரைற் (அமெரிக்க கட்டடக் கலைஞர், எழுத்தாளர்)*

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **கிளிநொச்சி பிரதேசத்தில** டொன்பொஸ்கோ, வன்னிவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், வடகாடு, பாலிநகர், அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம், ஐம்பது வீட்டுத் திட்டம், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், கரும்புள்ளியான், தென்னியங்குளம், உயிலங்குளம், பாரதிநகர், மாங்காக் குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், பிள்ளையார் அரிசி ஆலை, 65வது **Infantry** ஆலங்குளம், துணுக்காய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், **TRC 1, 2 Signal medium work shop,** பனிக்கன்குளம், **CATIC** பனிக்கன்குளம், மாங்குளம், நீதிபுரம், டயலொக் தொலைத்தொடர்பு கோபுரம் ஒலுமடு ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** பெரியார்குளம், பூந்தோட்டம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் உமணகிரி, வங்காலை, தோமஸ்புரி, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், நறுவிலிக்குளம், சிலாவத்துறையிலிருந்து அரிப்பு வரை, சவேரியார்குளம், **CECB** ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ யார் உங்களுக்கு வலிமை தருவார்கள்? வலிமை, வலிமைதான் நமக்கு இப்போது தேவை. வலிமை பெறுவதற்கான முதற் படி உபநிடதங்களை அடைந்து நான் ஆன்மா என்று நம்புவதுதான்.

❖ இதுவல்லவா வலிமை, இதுவல்லவா வலிமை. நண்பர்களே, என்நாட்டு மக் களே, உபநிடதங்களை அதிகம் படிக்கப் படிக்க நான் உங்களுக்காக அதிகம் கண்ணீர் சிந்துகிறேன். வலிமை, வலிமை, நாம் வலிமை பெறுவதற் கான செயல்முறை வழி அவற்றுள் சொல்லப்பட்டிருக்கிறது.

❖ முதலில் நமது இளைஞர்கள் வலிமை பெற்றவர்களாக வேண்டும். மத உணர்ச்சி அதற்குப் பின்னரே வரும். என் வாலிப நண்பர்களே, வலிமை பெறுங்கள்.

❖ நீங்கள் கீதையைப் படிப்பதைவிட காற்பந்தாடுவதன் மூலம் சொர்க்கத்திற்கு மிக அருகில் செல்லமுடியும். இவை தைரியமான வார்த்தைகள். இருப்பினும் இவற்றை நான் சொல்லியாக வேண்டியிருக்கிறது. ஏனெனில் நான் உங் களை நேசிக்கிறேன். பிரச்சினை எங்கு என்பது எனக்குத் தெரியும். எனக்குக் கொஞ்சம் அனுபவம் இருக்கிறது. உங்கள் கைகால் தசைகளில் இன்னும் கொஞ்சம் வலிமை சேர்ந்தால் கீதையை இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும்.

# அல்வாய் நண்பர்களை வீழ்த்தியது மணற்காடு சென். அன்ரனிஸ் வி.க.

வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் சிதம்பரா கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் யோகசந்திரன் ஞாபகார்த்தமாக 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட தொடரின் இரண்டாவது அரைஇறுதியாட்டம் (06/11/2016) அன்று யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.





முதல்பாதியாட்டத்தில் அல்வாய் நண்பர்கள் அணி ஆதிக்கம் எவ்வித கோல்களும் பெறப்படாத நிலையில் முதல் பாதி நிறைவுற்றது. இரண்டாவது பாதியாட்டத்தில் சென். அன்ரனிஸ் கமல் அற்புதமான கோல் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார்.

ஆட்டம் தொடர்ந்தது. சென்.அன்ரனிஸ் அணி 12 ஆம் இலக்க வீரர் தலையால் முட்டி அணியின் வெற்றிக்கோலை பதிவு செய்ய இறுதியாட்ட நேர முடிவில் 02:00 என்ற ரீதியில் அல்வாய் நண்பர்களை வீழ்த்தி இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம். (கு)

# மயிலங்காடு ஞானமுருகனை வீழ்த்தி றோயல் அரையிறுதிப்போட்டிக்கு தகுதி

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட முன்னணி அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையில் பிரமாண்டமாக மின் ஒளியில் நடத்தும் உதைபந்தாட்ட சமரில் 06.11.2016 அன்று நடைபெற்ற போட்டியில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது.

போட்டியின் 2 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணி வீரர் ஜெகன் முதலாவது கோலினை அடித்து எதிரணிக்கு அதிர்ச்சியளித்தார். தொடர்ந்த ஆட்டத்தில் இரு அணி முன்கள வீரர்கள் கோலினை அடிக்க பல வழிகளிலும் முயற்சித்த வேளை பின்கள வீரர்களினால் முறியடிக்கப்பட்டது. ஞானமுருகன் அணி வீரர் ஜெகன் ஒரு கோலினை பதிவு செய்ய முதற்பாதி ஆட்டத்தில் 1:0 என ஞானமுருகன் அணி முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் றோயல் அணி அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ஞானமுருகன் அணியின் பின்கள வீரர்களுக்கு சவால் விடும் வகையில் அடுத்தடுத்து கோல்களை அடித்து தமது அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார். இதில் எம். நிதர்சன் -1, என். நிசர்ன்-1, கஜகோபன்-2 கோல்களை அடித்து அணிக்கு வலுச்சேர்த்தார்கள். இறுதியில் 4:1 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் அணி வெற்றி பெற்று அரையிறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. (கு)



# வல்வையை வென்றது கம்பர்மலை யங்கம்பன்ஸ்

யோகானந்தன் அதிரடி





வல்வை விளையாட்டுக்கழகம் நடத்தும் சிதம்பரா கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் யோகசந்திரன் ஞாபகார்த்த 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்ட தொடரின் காலிறுதியாட்டத்தில் யோகானந்தனின் அதிரடி கோல் உதவியுடன் யங்கம்பன்ஸ் அணி வெற்றி பெற்றது.

கடந்த சனிக்கிழமை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்ற போட்டியில் வல்வை அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் 02:00 என்ற கோல் அடிப்படையில் முன்னிலை வகித்தது யங்கம்பன்ஸ் அணி. யோகானந்தன், அநுராகாந்தன் தலா ஒவ்வொரு கோல் பெற்றுக் கொடுத்தனர்.

இரண்டாவது பாதியாட்டத்திலும் யோகானந்தன் மேலும் ஒரு அசத்தல் கோல் போட்டார். பதிலுக்கு வல்வை அணிவீரர் அணியின் முதல்கோலை பதிவு செய்ய மீண்டும் யோகானந்தன் தொடர் கோல்களை பெற்றுக் கொடுத்தார்.

வல்வை அணி வீரர் அணியின் இரண்டாவது கோலை பதிவு செய்ய இறுதியாட்ட நேர முடிவில் 06:02 என்ற ரீதியில் வல்வை அணியை வீழ்த்தியது யங்கம்பன்ஸ் அணி.

யங்கம்பன்ஸ் அணி சார்பாக யோகானந்தன் -05 அநுராகாந்தன்-01 போட்டனர். (கு)

# மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் மின்னொளியிலான உதைபந்தாட்டம்

## இறுதிப்போட்டியில் யங்ஹென்றீஸ்





மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட முன்னணி அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையில் பிரமாண்டமாக மின் ஒளியில் நடத்தும் உதைபந்தாட்ட சமரில் 06.11.2016 அன்று நடைபெற்ற போட்டியில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றீஸ் அணி மோதியது. போட்டியின் 10 ஆவது நிமிடத்தில் பலாலி விண்மீன் அணி வீரர் யூட் கனடி முதலாவது கோலினை அடித்து எதிரணிக்கு அதிர்ச்சியளித்தார்.

பரபரப்பாக தொடர்ந்த ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றீஸ் முன்கள வீரர் மதுசன் 17 நிமிடத்தில் தனது அணி சார்பாக கோலினை அடித்து போட்டியை சமன்செய்தார். முதற்பாதி ஆட்டத்தில் 1:1 என்ற கோல் கணக்கில் போட்டி சமநிலையில் நிறைவுபெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். 3 ஆவது கோலினை 24 நிமிடத்தில் கென்றீஸ் அணி வீரர் மகிபன் கோலினை அடிக்க 32 நிமிடத்தில் பலாலி விண் மீன் அணி வீரர் டேமியன் கோலினை அடித்து போட்டியை சமன் செய்தார். அணியின் பின்கள வீரர்களுக்கு சவால் விடும் வகையில் ஹென்றீஸ் வீரர் சுபன் கோல்களை அடித்து தமது அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இறுதியில் 3:2 என்ற கோல் கணக்கில் இளவாலை யங்ஹென்றீஸ் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# கௌரவிப்பு நிகழ்வு

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் மின்னொளியிலான உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் பரிசளிப்பு நிகழ்வு மற்றும் தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் கண்டியில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் பதக்கம் வென்ற வீர, வீராங்கனைகளுக்கான கௌரவிப்பு நிகழ்வுகள் இன்று 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 7.30 மணிமுதல் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (கு)



பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. சாந்திஸ்ரீஸ்கந்தராசாவினது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் துணுக்காய் பிரதேச செயலக விளையாட்டுக்கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் துணுக்காய் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டதை படத்தில் காணலாம். (கு-281)

## தற்கொலை...

உறுப்பினர் சுமந்திரனின் உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கின்றது எனவும் அதிர்ச்சிகரமாக கருத்து வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் தமிழரசுக்கட்சியின் கிளை அலுவலக திறப்பு விழா சாவகச்சேரியில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் பொழுதே அவர் இதனை தெரிவித்துள்ளாார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

கட்சியில் உறுப்பினர்களை சேர்க்கும் போது மிக கவனமாக இருக்க வேண்டும். நான் சொல்லவரும் இரு விடயங்கள் நம்பக் கடினமானதாக இருக்கலாம், ஆனால் இவை மிகவும் பாரதூரமான விடயம் .

முதலாவது விடயம் கடந்த காலங்களில் இராணுவ புலனாய்வு அதிகாரிகளுடன் பாராளுமன்ற உறுப்பினர்களை தொடர்புபடுத்த வேண்டுமென கேட்டவர்கள் கட்சியில் வந்து சேரக் கேட்கிறார்கள். அவர்களை பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

அதை விட மிக முக்கியமான விடயம், சில மாதங்களுக்கு முன்னர் சாவகச்சேரி மறவன்புலவு பகுதியில் தற்கொலை அங்கி ஒன்று மீட்கப்பட்டது. இது அனைவரும் அறிந்த விடயம். ஆனால் அதன் பின்னால் உள்ள அரசியல் யாருக்கும் தெரியாது, அது விசாரணை நிலையில் இருப்பதால் வெளியிடப்படவில்லை.

ஆனால் நான் ஒரு விடயம் கூறவேண்டும். அந்த தற்கொலை அங்கியை ஒரு இடத்தில் இருந்து இன்னுமொரு இடத்துக்கு கடத்திய பிரதான சூத்திரதாரி இன்னும் கைது செய்யப்படவில்லை. அவர் சாவகச்சேரியில் இருக்கின்ற என்னுடைய அலுவலகத்துக்கு நேரெதிரே உள்ள வீட்டில் வெளிநாட்டில் இருந்து வந்த ஒரு பெண்ணை தங்க செய்துள்ளார். அத்தோடு அங்கு தங்கியிருந்து இருந்து எமது கட்சிப்பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந் திரன் அடிக்கடி வந்து போகும் இடமான எனது கட்சி அலுவலகத்தை அடையாளம் கண்டும் வேவு பார்க்கப்பட்டுள்ளது. இது உண்மையான பாரதூரமான விடயம். இவற்றில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது எனவும உறுப்பினர் சயந்தன் தெரிவித்தார். (செ-9)

## நல்லிணக்கப்...

ஐரோப்பிய ஒன்றியத்தின் முழுமையான நிதி உதவியுடன் முன்னெடுக்கப்படும் கலைகளின் ஊடாக நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவோம் என்ற செயற்திட்டம் நேற்று கொழும்பில் நடைபெற்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமை தாங்கும் நல்லிணக்கத்திற்கும் ஐக்கியத்திற்குமான அலுவலகம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய சந்திரிகா, 30 வருட கொடூரே யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த போதிலும், சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் யுத்தத்தில் இன்னமும் இலங்கை வெற்றி பெறவில்லை என தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அவர், நாம் ஏனையோரின் கலாசாரம், மொழிகள், சமூக செயற்பாடுகள் மற்றும் ஏனைய சமூகங்களின் பன்முகத்தன்மையை மதிக்க வேண்டும்.

நாங்கள் மிகக் கொடூரமான 30 வருட யுதத்திற்கு முகம்கொடுத்திருந்தோம் ஆகவே இந்த நாட்டில் விரைவாக நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

சமாதானம் என்பது இலகுவாக செய்யக் கூடிய விடயமல்ல. முன்னாள் பிரான்ஸ் ஜனாதிபதி குறிப்பிட்டது போல் இதுவொரு போர். அது சமாதானம் என்ற ஆயுதத்தின் ஊடாக, புரிந்துணர்வு, அன்பினூடாக ஏற்படுத்தப்பட வேண்டும். யுத்தம் நிறைவடைந்தாலும் நாம் சமாதானத்திற்காக ஆற்ற வேண்டிய பணிகள் நிறையவே இருக்கின்றன.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த இரண்டு வருடங்களில் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுகின்றது. நல்லிணக்கத்தைத் ஏற்படுத்துவதற்கான பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகள், காணாமற்போனோர் தொடர்பில் சரியான தகவல்களை வழங்குதல், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நட்டஈட்டை வழங்குதல் மற்றும் மீண்டும் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமலிருத்தல் போன்றவை அவசியமாகியுள்ளன.

என்னுடைய தலைமையில் இயங்கும் ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்திற்கான காரியாலயம் பல்வேறு வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. குறிப்பாக பிரிந்து கிடக்கும் சமூகங்களுக்கு இடையில் பாலமாக செயற்படுவதே எனது பணி. புரிந்துணர்வினை கட்டியெழுப்புவதற்கான மிகப்பிரதான உபாயம் கலந்துரையாடலே.

அரசாங்கம் இந்த பணிகளுக்கு பூரண ஆதரவினை வழங்குவதோடு நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளில் பிரஜைகளின் முழுமையான ஆதரவும் எமக்கு கிடைக்கின்றன.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பில் நாம் மிகவும் நம்பிக்கையுடன் இருக்கின்றோம். எத்தனை வருடங்கள் செல்லுமென என்னால் குறிப்பிட முடியாது. அதிருப்தியாளர்கள் இதற்கு எதிர்ப்பினை வெளியிடக்கூடும். அவர்கள் குழப்பங்கள் ஏற்படவேண்டும் என்ற எண்ணத்தில் செயற்படக்கூடும். 30 வருட யுத்தத்திற்கு பின்னர் யன்னல்கள் திறந்துவிடப்பட்டுள்ளன.

கடந்த பல வருடங்களாக இந்த வாய்ப்பு இருக்கவில்லை. சமாதானத்தை கட்டியமுப்புவதற்கான வாய்ப்பு தற்போது ஏற்பட்டுள்ளது அதை முழுமையாக பயன்படுத்த நாம் பல மடங்கு உழைக்க வேண்டியுள்ளது என சந்திரிகா குறிப்பிட்டார். (செ-11)

## கேள்விகளால்...

கப்பட்டிருந்தார்.

இதன்போது நடைபெற்ற விசாரணையின் இடையில் அவர் திடீரென சுகயீனமடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. நிதி மோசடி விசாரணை பிரிவு அதிகாரிகள் சுமார் 90 கேள்விகளை விமல் வீரவன்சவிடம் கேட்டுள்ளனர்.

இதன்போது அவர், பதிலளிக்க முடியாமல் தலை வலிக்கின்றது, தலை சுற்றுகின்றது என கூறி மயக்கமடைந்ததன் பின்னர் விசாரணை பிரிவின் ஒரு இடத்தில் அமர்ந்திருந்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலை பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவினால் விமல் வீரவன்சவுக்கு விடுக்கப்பட்ட அறிவிப்புக்கு அமைய நேற்று காலை 9.40 மணியளவில் பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவில் விமல் வீரவன்ச ஆஜராகியிருந்தார்.

அரசாங்க வாகனங்களை தவறாக பயன்படுத்தியமை தொடர்பில் வாக்குமூலம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காகவே விமல் வீரவன்ச அழைக்கப்பட்டிருந்தார். இதன்போது நடத்தப்பட்ட விசாரணைகளில் அவர் சுகவீனமடைந்துள்ளார்.

இதனால் சிறந்த உடல் நிலை தொடர்பில் அறிவித்ததன் பின்னர் விசாரணை மேற்கொள்வதற்காக வேறு தினத்தை கோரியுள்ள நிலையில் விமல் வீரவனச நிதி மோசடி விசாரணை பிரிவில் இருந்து வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (செ-11)

## "ஹோலி" பண்டிகை...

ரில் எதிர்வரும் நவம்பர் 27ஆம் திகதி "ஹோலி" பண்டிகை கொண்டாடப்படவுள்ளதாக சமூக வலைதளங்களில் செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் யாழ்.இந்திய துணைத் தூதரகத்தில் ஹோலி பண்டிகை கொண்டாடப்பட்ட புகைப்படங்களுடன் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், இந்திய துணை தூதரகத்தின் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தியும் சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றது. இந்நிலையில் மேற்படி குற்றச்சாட்டு தொடர்பாக கருத்து கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக மேலும் அவர் குறிப்பிடுகையில்,

மேற்படி பண்டிகை கொண்டாடப்படுமா? இல்லையா? என்பது தொடர்பாக எமக்கு எதுவும் தெரியாது. இவ்வாறான நிகழ்வு ஒன்று நடக்கவுள்ளதாக வெளியாகியிருக்கும் செய்திகளை நானும் அவதானித்தேன்.

இந்த நிலையில் இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் குறித்த பண்டிகை கொண்டாடப்படுவதாக தெரிவிக்கும் செய்திகள் 100 வீதமல்ல ஆயிரம் வீதம் பிழையானது.

இவ்வாறான பொய்யான செய்திகளை வெளியிட்டால் அது தொடர்பில் அவர்களிடம் தான் விசாரிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## சர்வதேச நீதிபதி...

அனெலியிடம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் திட்டவட்டமாக கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இலங்கையை வந்தடைந்த பிரித்தானியாவின் வெளியுறவு மற்றும் கொமன்வெல்த் விவகாரங்களுக்கான அமைச்சரும், பாலியல் வன்முறைகளுக்கு எதிரான விசேட பிரதிநிதியுமான பரோனஸ் அனெலி தலைமையிலான குழுவினர் நேற்றைய தினம் வடக்கு மாகாண முதலமைச்சரினையும் அவர் தலைமையிலான அமைச்சர்களையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இதன்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

சந்திப்பு தொடர்பில் முதலமைச்சர் மேலும தெரிவிக்கையில், ஜெனிவாவில் அடுத்த வருட மார்ச் மாதம் வரவேண்டிய செயலாளர் நாயகத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் நடைபெறுகின்றதா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக பிரிந்தானிய அமைச்சர் வந்துள்ளார். நாம் ஜெனிவா தீர்மானம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் போதே பல கடிதங்களை எழுதியிருந்தோம். அந்த கடிதங்களில் கூறிய விடயங்கள் தற்போது நடைமுறையில் நடைபெறுவதனை இப்போது எடுத்து காட்டியிருந்தேன்.

அதாவது, வெளிநாட்டு ஈடுபாட்டுடன் இந்த போர் விசாரணை நடைபெறாவிட்டால் நீதியை பெற்றுக்கொள்ள முடியாமல் செல்லும் என கூறியிருந்தேன். நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களில் வெளிநாட்டு உள்ளீடுகளை அரசு கொண்டுவருவதாக தெரியவில்லை. வெளிநாட்டு உள்ளீடுகள் வராவிட்டால் எங்களுக்கு நீதி கிடைக்காது என்பது நிச்சயம்.

இதனைவிட போர்க்குற்ற சட்டமானது எமது சட்டத்திற்குள் கொண்டுவரப்படல் வேண்டும். அதாவது பலநாடுகளில் இருக்கும் சட்டமாக இருந்தாலும், எமது நாட்டில் போர்க்குற்றம் இழைக்கப்படும் போது சட்டமாக இருக்கவில்லை. எனவே எங்களுடைய நாட்டு சட்டதிற்குள் போர்க்குற்ற சட்டம் உள்வாங்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது.

இது சம்பந்தமாக அரசு தரப்பு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதனை அவருக்கு வலியுறுத்தி இருந்தேன். அதன் பின்னர் பெண்கள் சம்பந்தமான விடயங்களையும் குறிப்பிட்டிருந்தேன். விதவைகள் எததனை பேர் , அவர்களுடைய பாதுகாப்பு, அவர்கள் தொடர்பான செயற்திட்டங்கள் மேற்கொள்ள கூடிய அவசியங்களை எடுத்து கூறினேன்.

செயற்திட்டங்கள் எவ்வாறான வகையில் அமைய வேண்டும் என எம்மிடம் கோரி அந்த செயற்திட்டங்களை எம்மிடம் தந்தால் அதற்கான நிதியுதவிகளை வழங்குவதாவும் கூறினார். யுத்தம் முடிந்து எட்டு வருடங்களாகும் நிலையில் தொடர்ந்தும் ஒரு இலட்சத்துக்கு அதிகமான இராணுவம் இருப்பது எந்தளவிற்கு எமக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதனை நாங்கள் குறிப்பிட்டிருந்தோம்.

எனினும் சமாதானம் நோக்கி செல்லும் போது ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார். அதற்கு நான், நாங்கள் விட்டுக்கொடுப்பதற்கு நாங்கள் முன்வந்தால் கூட பலவிதங்களில் எங்களை அடிமைப்படுத்தும் விதத்தில் தான் சில சில நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு இருக்கின்றனர். தெற்கில் எடுக்கப்படும் முடிவுகள், எங்கள் தனித்துவத்தையும் உரிமைகளையும் புறக்கணிப்பதாக இருப்பதனையும் நான் எடுத்து கூறினேன் என முதலமைச்சர் குறிப்பிட்டார். (செ-4)

## 14 இராணுவத்தினரு...

ஜெயசீலன், நாகமணி சௌந்தரராஜன் ஆகிய இளைஞர்கள் இருவர் கடந்த 1997 ஆம் ஒக்ரோபர் 28 ஆம் ஆண்டு திகதி மயிலங்காட்டு பகுதிக்கு உறவினருடைய திருமணத்துக்காக சென்றுள்ளனர்.

அவ் வேளையில் அவர்கள் சிறுப்பிட்டி, புத்தூர் வாதரவத்தையில் அமைந்திருந்த இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினரால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தாக குற்றச்சாட்டப்படிருந்தது.

அதையடுத்து குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் அச்சுவேலி பொலிஸாரால் 1998ஆம் ஆண்டு காலப் பகுதியில் குறித்த இராணுவ முகாமில் கடமையாற்றிய 16 இராணுவ வீரர்களுக்கு எதிராக யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு கொலைக்குற்றம் சாட்டப்பட்ட பின்னர் 16 இராணுவத்தினரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

சுமார் 18 வருடங்களின் பின்னர் சட்டமா அதிபரினால் இவ்விடயம் தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு மேற்குறித்த இரு இளைஞர்களையும் கொலை செய்ததன் அடிப்படையில் குறித்த 16 இராணுவ வீரர்களுக்கு எதிராக வழக்கை தொடர்ந்து நடத்துமாறு யாழ் நீதவான் நீதிமன்றுக்கும் அச்சுவேலிப் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டது. அதன் பிரகாரம் குறித்த 16 இராணுவ வீரர்களுக்கும் யாழ் நீதவான் நீதிமன்றால் அழைப்பு கட்டளை அனுப்பப்பட்டது. அதன்படி 16 இராணுவத்தினரில் 14 இராணுவத்தினர் மன்றில் ஆஜராகி விளக்கமறியில் வைக்கப்பட்டுள்ளதுடன் இருவர் கடந்த கால யுத்தத்தில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் குறித்த வழக்கு யாழ் நீதவான் நீதிமன்றில் நடைபெற்று வரும் நிலையில் மூன்றாவது தடவையாக குறித்த வழக்கு நேற்றைய தினம் மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கில் கொலைக்குற்றம் சாட்டப்பட்ட 16 இராணுவத்தினரும் கடந்த 1998 ஆம் ஆண்டு பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும் அவர்கள் இதுவரை பிணை நிபந்தனை எவற்றையும் மீளவில்லை எனவும் நீதவான் நீதிமன்றில் வழங்கப்பட்ட பிணையை மேல் நீதிமன்று அல்லது குறித்த பிணையை வழங்கிய நீதவானே மாற்றவேண்டும் என தெரிவித்ததுடன் அவர்களுக்கு பிணை வழங்க வேண்டும் என கோரியிருந்ததுடன் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யுமாறும் கோரியிருந்தனர்.

குறித்த 14 பேரும் நேற்றைய தினம் ஆஜராகியிருந்த நிலையில் இவர்களுக்கு பிணை வழங்கும் அதிகாாரம் நீதவான் நீதிமன்றுக்கு இல்லை என தெரிவித்து இவர்களின் வாக்குமூலங்களை பெற்ற குற்றச்சாட்டு பத்திரத்தை மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டதுடன் 14 இராணுவத்தினரையும் எதிர்வரும் நவம்பர் மாதம 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (செ)

## சமஷ்டியுடனான...

யாழிற்கு விஜயம் மேற்கொண்ட கனடாவின் உயர் அதிகாரிகள் நேற்று திங்கட் கிழமை வடமாகாண முதலமைச்சரை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்து கலந்துரையாடினார்கள். இது குறித்து ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட முதலமைச்சர், சுமார் 1 மணித்தியாலயங்களுக்கு மேலாக இச் சந்திப்பு நீடித்தது. அந்த சந்திப்பில், விதவைகள் மற்றும் முன்னாள் போராளிகள், தாய் தந்தையை இழந்த சிறுவர்கள் குறித்து எந்தவிதமான செயற்திட்டங்களை அமைக்கலாம் என் கலந்துரையாடப்பட்டது. எந்தவிதமாக உதவிகளை செய்ய வேண்டுமென்றும் அவர்கள் ஆராய்ந்து சென்றுள்ளார்கள். சமஷ்டியுடன் கூடிய அதிகார பகிர்வுடைய அரசியல் யாப்புத் தேவை எனவும் தற்போதைய அரசியலமைப்பில் மத்திய அரசாங்கத்தின் கைகள் ஓங்கியுள்ளமையும் சுட்டிக்காட்டினேன் என முதலமைச்சர் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலில் ஒட்டாவா தலைமையகத்தின் ஆய்வாளர்களான கொரேசி மற்றும் மக்லாரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (செ-4)

## தொடர்கிறது...

செல்லப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் மாலை 5 மணியளவில் கொக்குவில் மேற்கு பகுதியை சேர்ந்த நல்லலிங்கம் சர்மிலன் என்ற இளைஞனே அவரது இல்லத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியை சேர்ந்த சிவலிங்கம் கபில்நாத், திருநெல்வேலி பகுதியை சேர்ந்த கெங்காதரன் பிருந்தாபன், சில்லாலைப் பகுதியை சேர்ந்த அலெக்ஸ் அரவிந்தன் ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் சகோதரர்களான இந்திரகுமார் கோபிலோசன், இந்திரகுமார் நிரோசன் மற்றும் திருச்செல்வம் பிரபோசன் ஆகியோர் மருதனார்மடம் திருப்பதி வெங்கடாசலபதி கோவிலுக்கு அண்மையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். அதில் ஒருவர் கைது நடவடிக்கையின் போது இடையூறு விளைவிக்கப்பட்டதாக தெரிவித்து சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

மேற்குறித்த 7 இளைஞர்களினதும் உறவினர்கள் நேற்றைய தினம் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் எழுத்து மூலம் தமது முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளனர்.

அதாவது, சிவில் உடையில் வந்தவர்களால தம்மை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் என அடையாளப்படுத்தி மேற்குறித்தவர்களை கைது செய்துள்ளதாகவும் கைது செய்தமைக்கான காரணங்கள் எவையும் தெரிவிக்கப்படவில்லை என்பதுடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்வதாக சீட்டுக்களை வழங்கின் சென்றுள்ளனர் என்றும் சிலருக்கு அவ்வாறான சீட்டுக்கள் வழங்கப்படவில்லை எனவும் இதுவரை தமக்கு காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை என்றும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் தற்போது இடம்பெறும் வாள்வெட்டு சம்பவங்கள் மற்றும் அண்மையில் பொலிஸாருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்தமை போன்ற செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் குறித்த கைதுகள் இடம்பெற்றிருக்கலாம் என தெரியவருகிறது. (செ-9)

## கார்கள் வான்கள் வாடகைக்கு

| Type | Colour | Price (Perday) |
|---|---|---|
| Premio car | White | 6,000 |
| Axio car | White | 5,000 |
| N-15 car | White | 3,000 |
| TATA Indico car (V2) | Blue | 2,500 |
| DAEWOO car | Black | 2,000 |
| KDH van | White | 6,000 |

கிழமை, மாதாந்த வாடகைகளுக்கு கட்டணம் மேலும் குறைக்கப்படும்

தொடர்புகளுக்கு:-
0773777502

(6554)

## வீடு வாடகைக்கு

A9 வீதி யூதா கோவிலுக்கு அருகாமையில் மூன்று அறைகள் கொண்ட குளியலறை மற்றும் மலசலகூடம், அமைந்த காணியுடன் வீடு வாடகைக்கு உண்டு.

T.P : 077 47 24 075

(C-6345)

## வேலையாட்கள் தேவை

ஒப்பந்த நிறுவனமொன்றுக்கு யாழ்ப்பாணம், வன்னி ஆகிய இடங்களுக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. வேலை மேற்பார்வையாளர்
2. தச்சுவேலை
3. மேசன் வேலை
4. பெயின்ரர்
5. கூலியாட்க்ள்

(6553)

தொடர்பு :- 076 8622764

## நீங்கள் தொழில் தேடுபவரா?

முன்னணி நட்சத்திர ஹொட்டேல்களில் Front Office, Restaurant, Room Service, Kitchen போன்ற பகுதிகளில் வேலைவாய்ப்புடன்

O/L உடன் Diploma in Hotel Management

CERTIFICATE - DIPLOMA - DEGREE

With FREE English Course

Up to 30% Discount

- பயிற்சிக் காலத்திலேயே உழைக்கும் வாய்ப்பு
- கற்கைநெறி நிறைவில் நிரந்தர வேலைவாய்ப்பு

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு

புதிய பிரிவுகள் ஆரம்பம் Week & Weekend Batch

அனுமதிகளுக்கு 077 3616 798

www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011

SIKARAM ACADEMY
SCHOOL of HOSPITALITY

இல.175, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்.

(C-6348)

## CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வேலைவாய்ப்பு உத்தரவாதம்

*Condition apply

100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி



12th Batch start on :- 12.11.2016

2016 A/L மாணவர்களுக்கு 50% Discount

ICS EDUCATION

77, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம்

076-7013060 , 021-7306000

(C-6347)


# மக்களின் எழுச்சியை தடுக்கவே...

காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த செயற்பாட்டாளரை பயங்கரவாத தடைசட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமையானது வடக்கில் அந்தளவிற்கு பயங்கரமான பதற்றமான ஒரு சூழல் நிலவுகின்றது என்பதை காட்டி அச் சட்டத்தை விட மோசமான ஒரு சட்டத்தை அரசாங்கம் உருவாக்க முயறசிப்பதற்கான உதவியாகவே இதனைபார்க்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த சனிக்கிழமை இரவு ஆவா குழுவுடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தின் அடிபபடையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளரான அலெக்ஸ்என்பவரை அவர்களது கட்சி அலுவலகத்தில் வைத்து பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந்நிலையில் அச் சம்பவம் தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்ட விடயத்தை குறிப்பிட்டிருந்தார். இவ் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, கைது செயயப்பட்ட அலெக்ஸ் என்பவர் தமிழ்த் தேசிய மக்கள முன்னணியின் நெருக்கமான தீவிரமான செயறபாட்டாளர்.

இவர் மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியலுக்கு உறுதியாக செயற்பட்டிருந்தவர். கடந்த வருடம் தேசியம என்ற அமைப்பினை உருவாக்கி சர்வதேச பொறுப்பு கூறலுக்காக கையெழுத்து போராட்டத் தினை முன்னின்று நடத்தியவர். அவ்வாறு மக்கள் மத்தியில் கருத்துக்களை கொண்டு செல்வதிலும் மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியல் போராட்டங்களிலும் ஈடுபட்டிருந்தவர்.

இவர் கடந்த சனிக்கிழமை எமது அலுவலகத்தில் வைத்து பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந் நிலையில் இவர் யாரால் கைது செய்யப்பட்டார் என்பது முன்னர் தெரிவிக்கப்பட்டிருக்காத நிலையில் பின்னர் மனிதவுரிமை ஆணைக்குழுவின் மூலமே இவரை பயங்கரவாத தடுப்பு பிரிவினரே கைது செய்திருந்தமையை அறிந்து கொள்ள முடிநதிருந்தது. ஆனால் இன்று வரை அவரை யார் கைது செய்தார்கள் எனபதும் எங்கே வைத்திருக்கிறார்கள் என்பதும் உத்தியோகபூர்வமாக கட்சிக்கோ அல்லது அவரது பெற்றோருக்கோ அறியத்தரப்படவில்லை.

இவ்வாறான நிலையில் இவரை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் கைது செய்திருப்பதானது தமிழ் தேசிய மக்கள் முன்னனியினதும் தமிழ் மக்களினதும் எழுச்சியை முடக்குவதற்காக செய்யப்பட்ட ஒன்றாகவே இதனை பார்க்க முடியும். குறிப்பாக நாம் பல தடவை கூறி வந்திருந்தோம், தமிழ் மக்களது அரசியல் போராட்டமானது மக்கள் மயப்படுததப்பட்ட வகையிலே முன்னெடுக்கப்பட்டாலே அதனூடாக ஒரு அழுதத்தை - நெருக்கடியை கொடுத்து அதனூடாக தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என பலகாலமாக கூறி வந்திருந்தோம்.

தற்போது தமிழ் மக்கள் பேரவையோடு இணைந்து தொடர்ந்து செயற்படுவதற்கு காரணமும் இவ்வாறான ஒரு புரிந்துணர்விலேயே. இவ்வாறான நிலையில் நடத்தப்பட்ட எழுக தமிழ் பேரணியானது இதில் முக்கிய திருப்புமுனையாக அமைந்திருந்தது. இத்தகைய எழுக தமிழ் நிகழ்வை யாழ்ப்பாணத்தில் மட்டுமின்றி மட்டகளப்பிலும் நடத்துவதற்கு தீர்மானித்து கொண்டிருந்த சூழ்நிலையில் தான் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தவகையில் இவரது இக் கைதானது மீண்டும் இவ் எழுச்சியானது முன்னெடுக்கப்படாமல் பதற்றமான சூழலை உருவாக்கி தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி மீதும் தவறான ஒரு பார்வையை ஏற்படுத்தி கொள்வதற்காக திட்டமிட்டே அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இத்தகைய நிலையில் நாம் தமிழ் மக்கள் பேரவையிடமும் தமிழ் மக்களிடமும் கேட்டுக்கொள்வது யாதெனில், அரசியல் ரீதியாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்ட இவ் எழுக தமிழ் பேரணியானது தொடர்ந்து இடம்பெற வேண்டும். அவ்வாறு இடம்பெறுவதனூடாக இவ்வாறான கைதுகள் மூலம் மக்களது எழுச்சியை தடுக்க முடி யாது என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்.

மேலும் பயங்கரவாத தடைச்சட்டமென்பது மிகவும் ஆபத்தான விடயங்களை கையாள்கின்ற பிரிவாகதான் இச் சட்டத்தை சமூகமானது பார்க்கின்றது. எனவே அச் சட்டத்தின் கீழ் இக் கைது நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்வதனூடாக அந்தளவிற்கு பயங்கரமான மோசமான ஒரு செயற்பாடு யாழ்ப்பாணத்தில் உள்ளது என்ற நிலைமையை உருவாக்கவே அரசாங்கமானது முயல்கின்றது. அத்துடன் மக்கள் மத்தியில் பயத்தை உருவாக்கி இனியொரு மக்கள் எழுச்சியை ஏற்படாதிருப்பதை தடுப்பதற்கான முயற்சியாகவே இது உளளது.

அத்தோடு பயங்கரவாத தடை சட்டமானது நீக்கப்பட்டு சர்வதேச நியமங்களுக்கு உட்பட்ட வேறொரு சட்டமானது உருவாக்கப்பட வேண்டும் என ஐ.நா.கூறியுள்ள நிலையில் அரசாங்கம் தற்போதுள்ள சட்டத்தை விடவும் மிகவும் ஆபத்தான சட்டமொன்றை உருவாக்க முயற்சித்து வருவதாகவும் பரவலாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் அத்தகைய சட்டம் உருவாக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது என்ற நிலைமையை தோற்று விப்பதற்குமாகவே இத்தகைய நடவடிக்கையில் அரசாங்கம் செயற்படுகின்றது.

இவற்றைவிட பல்கலைகழக மாணவர்கள் இருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து அதற்கான நீதி வழங்கப்பட வேணடும் என்பதை வலியுறுத்தி பல்கலைகழக மாணவர்கள் தற்போதும் போராடுகின்ற மனோநிலையில் உள்ள போது அதனை முடக்குவதற்கான தேவை அரசாங்கத்திற்குள்ளது. அந்தவகையில் பொலிஸாருடைய சூட்டு சம்பவத்தை நியாயப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் ஒரு பதற்றமான சூழல் இருக்கின்றது என்ற நிலையை ஏற்படுத்தி அதனை மூடி மறைக்கவுமே அரசாங்கம் முயலுகின்ற நிலையில் அதன் ஒரு அங்கமாகவுமே அரசாங்கம் ஆவா குழு சம்மந்தமாக கதைகளை பரப்பி வருகின்றது என்றார்.

இதேவேளை இவ் பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டிருந்த அக் கட்சியின் தேசிய அமைப்பாளர் மணிவண்ணன்,

குறித்த எமது கட்சியின் ஆதரவாளர் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டமையானது ஆவா குழு என்ற சந்தேகத்தின் அடிப்படையில் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ள நிலையில், முதலில் உண்மையிலே ஆவா குழு என்பது உள்ளதா என்ற சந்தேகம் காணப்படுகின்றது.

அதாவது ஆவா குழு என்ற மாயையை உருவாக்கி அதன் மூலம் வேறானதொரு நிகழ்ச்சி நிரலுக்காகவும் அரசியல் ரீதியான பழிவாங்கல்களுக்காகவுமே இதனை பயன்படுத்துகின்றார்கள்.

அத்தகையதொரு பழிவாங்கல்களுக்காகவே எமது கட்சியின் செயற்பாட்டாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் குறித்த ஆவா குழுவானது பயங்கரவாத அமைப்பாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதா என்பதும் தெரியாது. இவ்வாறான நிலையில் ஆவா குழுவை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரிப்பதற்கான காரணமும் தெரியவில்லை.

உண்மையிலேயே வாள்வெட்டுக்களுடன் அவர் தொடர்புபட்டிருந்தால் அவரை குற்றவியல் பொலிஸார் விசாரணை செய்திருக்க முடியும்.

எனவே இதனை ஏன் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரிக்கின்றனர் என்ற கேள்வியும் காணப்படுகின்றது.

மேலும் கொழும்பில் மோதரை பகுதியில் பாதாள உலக குழுக்களுகிடையில் இடம்பெற்ற மோதலில் ஆறுபேர் உயிரிழந்திருந்த போதும் அது தொடர்பில் பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை நடத்தவில்லை.

ஆனால் இங்கே மட்டுமே பயஙகரவாத தடுப்பு பிரிவினர் விசாரணைகளை நடத்துகின்றனர்.

இவ்வாறான நிலையில் இவை அனைத்தும் அரசியல் ரீதியான பின்னணியிலேயே செயற்படுவதாகவே பார்க்க முடியும் என மணிவணணன் தெரிவித்திருந்தார். (செ-4)

## பள்ளிவாசல்...

வாசல் மூடப்படுதாகவும், மீண்டும் அதிகாலை நானகு முப்பது மணிக்கு திறக்கப்படுவதாக தெரிவித்த நிர்வாகம், அதற்கிடைப்பட்ட நேரத்திலே குறித்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தது.

எனினும் இச் சம்பவத்தில் எவருக்கும் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை.

மேலும் இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் பள்ளிவாசலுக்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டதாகவும், தற்பொழுது பள்ளிவாசலின் செயற்பாடுகள் மீண்டும்வழமைக்குதிரும்பியுள்ளதாகவும் நிர்வாகத்தினர் குறிப்பிட்டனர். (செ)


## வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல்

வட மாகாணத்தில் கடமையாற்றும் கடமை நிறைவேற்றும் அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடலொன்று அகில இலங்கை கடமை நிறைவேற்று அதிபர் சங்க பிரதிநிதிகளால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இக் கலந்துரையாடலில் அனைத்து கடமை நிறைவேற்றும் அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இடம்:-ஐடியல் அக்கடமி
கே.கே.எஸ்.வீதி (யா/இந்துக் கல்லூரி அருகாமை)
காலம்:- இன்று (08.11.2016) செவ்வாய்
நேரம்:- காலை 8.30மணி (இ)

-கடமை நிறைவேற்றும் அதிபர் சங்கம்


## இராணுவத்தினர்...

ணுவ அங்கத்தவர்கள் நேற்று ஜனாதிபதி செயலகம் நோக்கி சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி செயலகம் அருகில் ஆர்ப்பாட்டம் நடைப் பெற்றபோது பொலிஸாருக்கும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

சிலர் பலவந்தமான முறையில் ஜனாதிபதி செயலகத்திற்கு நுழைய முயற்சித்ததன் காரணமாக கண்ணீர்ப் புகை தாக்குதலை நடத்த நேரிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே, அடுத்த பிப்ரவரி மாதம் முதல் அங்கவீனமுற்ற இராணுவத்தினருக்கு ஓய்வூதியம் வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த வாக்குறுதியின்படி தங்களது போராட்டத்தை நிறுத்த தீர்மானித்துள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்ட இராணுவத்தினர் அறிவித்துள்ளனர். (செ)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.